

"இல்லை யென்ற கொடுமை
உலகில்
இல்லையாக வைப்பேன்"
என்றார் பாரதி
இதை லட்சியமாகக்கொண்டவர்
பட்ட பாடுகளை சித்தரிக்கும்...
நடைபெறுகிறது
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்
நவஜீவனம்
தமிழ்
நாகய்யா • கண்ணாம்பா • எஸ். வரலக்ஷ்மி • ஸ்ரீராமன்
டி. ஏ. ஜயலக்ஷ்மி • டி. ஆர். ராமச்சந்திரன் • எஸ். நாராயண ராவ் • நடித்தது

1 - 10-

வலியை ஒழியுங்கள்...

அந்த துன்புறும் நாட்களில்



வலியால் துன்புறும்
போதெல்லாம் ஸாரிடன் உட்
கொண்டு நிவர்த்தி பெறுங்கள்!
உலகப் பிரசித்திபெற்ற ரோச்
ஆராய்ச்சி ஸ்தாபனத்தாரால் தயா
ரிக்கப்படும் இந்த ஔஷதத்தில்,
இதற்குமுன் ஒருபோதும் ஒருமிக்க
உபயோகிக்கப்படாத இரண்டு புதிய
பொருள்கள் உள்ளன. அவையொன்று
வலியை அற்புதமாக சமனம் செய்கிறது, மற்றது
அதிர்ந்த நரம்புகளுக்கு இதமளிக்கிறது. ஸாரிடனில்
ஆஸ்பிரினாகட்டும் பழக்கு மருந்துகளாகட்டும் பேருக்குக்கூட
கிடையாது. அது அஜீரணமோ வியர்வையோ, வயிற்றுக்கோளாறு
களோ உண்டாக்கவும் மாட்டாது.

ருதுக வலிகளை மட்டுமின்றி அதேபோல் தலைவலி, பல்வலி, இடுப்புவலி,
நரம்புவலி, இடுப்புச்சளுக்குளையும் மற்றும் இதர வலிகளைக்கூட நிவர்த்
திக்க, பழக்கு மருந்துகளைத்தவிர்த்து ஸாரிடனுக்கு ஈடு இணை கிடையா
தென்று உலகு பூராவுமுள்ள ஸ்திரீகள் ஒத்துக்கொள்கிறார்கள்

ஏன் வீணில் கஷ்டப்படுகிறீர்கள்? உங்கள் வலியை நிவர்த்திக்க உத்தமமான
மருந்தாகிய ஸாரிடனை உபயோகியுங்கள். உங்கள் ஹாண்ட்பாகில் எப்
போதும் ஸாரிடன் சௌகரியமாக வைத்திருங்கள்.



ஸாரிடன்

10 வில்லைகள் அடங்கிய
டியூபுகளில் — எல்லா
கெமிஸ்டுகளிடமும்
கிடைக்கும்
விலை ரூ. 1/3/- உள்ளூர்வரி
கள் உண்டானால் வேறு.

ROCHE



விரைவில் எதிர்பாருங்கள்!
தமிழ்ப்படவுலகில் ஒரு புதுமை!
கதைப்போக்கில் ஒரு இனிமை
நடிப்பில் ஒரு வியப்பு
பிரும்மானந்தமான சங்கீதம்
உல்லாஸ நடனம்!
கணபதி பிக்சர்ஸின்
மாயாவதி
T.R. மஹாலிங்கம்
அஞ்சலிதேவி....
காளி-ரத்னம் • ராஜகாந்தம்
சுப்பையா • சக்கரபாணி
பெருமாள் • மாதவன்
சங்கீதம்:
G. ராமநாதன்
பாட்டு:
K.M. ஷெரீப் &
மருதகாசி
டைரக்ஷன்:
T.R. சுந்தரம்
B.A.B.Sc (Leeds)
விபரங்களுக்கு:
கணபதி பிக்சர்ஸ்
எக்ஸ்டென்ஷன்... சேலம்

கடைசியாக
நீங்கள் இப்போது உங்கள்

ஓவல்டினை

கஷ்டமின்றி வாங்கலாம்!

சில காலமாய் வியாபாரிகளிடம், அவர்களது வாடிக்கைக்காரர்களுக்கு விற்கப் போதுமான 'ஓவல்டின்' ஸ்டாக் இல்லை. இப்போது தேவையான சப்ளை கிடைத்திருப்பதால், உங்கள் வழக்கமான வியாபாரியிடம் சுலபமாக ஓவல்டின் வாங்கலாம்.

ருசிகரமான ஓவல்டின்தான் குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் சரியான பானம். அது நல்ல தூக்கமளித்து, குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும், குழந்தை வளர்க்கும் தாய்மார்களுக்கும் அதிக வலுவூட்டுகிறது. அது பழுத்த பார்லி மால்டிலுள்ள வலுத்தரும் பொருள்களின் சத்து, பால் ஏட்டின் சத்து, விசேஷமாகத் தயாரிக்கப்பெற்ற கோகோ, உயர்ந்த இயற்கை பாஸ்பேட்ஸ் வைடமின்கள் முதலிய சத்துக்களின் சேர்க்கையால் ஏற்பட்ட தயாரிப்பு.

உங்கள் வியாபாரியை இன்றே "ஓவல்டின்" கேளுங்கள். ஆனால் இதர மாற்றுப்பொருள்களை உபயோகிக்காதீர்.

டிஸ்ட்ரிபியூட்டர்கள்:— ஜெனுசன்ஸ் ட்ரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்., த.பெ.நெ.1205, மதராஸ், பம்பாய், கராச்சி & கல்கத்தா: & தி இங்லீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாபரேடிவ் ஹோல்ஸேல் சொஸைடி லிட்., கன்னிக்கோட்டை.
(மலையாளக்கரை பிரதேசத்திற்கு)





உங்கள் 'ஓவல்டினை' எப்படி சாப்பிடுவது

ருசியான ஓவல்டினை உஷ்ணமாகவோ அல்லது குளுமையாகவோ சாப்பிடலாம். உஷ்ணமாக இருப்பதாகத் தோன்றும்போது நீங்கள் ஓவல்டினை குளிர்ந்த முறையில் சாப்பிட்டுப் பாருங்கள். முக்கியமாக தேகம் களைத்திருப்பின் அது மிகவும் புத்துணர்ச்சியளிக்கும்.

0288,

இன்று இந்தியாவுக்குத் துரோகம் செய்வது யார்?

இதற்கு பதிலை சாந்தாராமின்

ஈடு இணையிலா உன்னதச் சித்திரத்தில் தெரிந்து கொள்ளுங்கள்



ராஜ்கமால் கலாமந்திரின்

நம் நாடு

(தமிழ்)

சங்கீதம் :

பாபநாசம் ராஜகோபாலய்யர்

பாட்டுகள் :

எம். எல். வசந்தகுமாரி

★

அப்னாதேஷ்

(ஹிந்தி)

★

அப்னாதேஷ்

(ஹிந்தியில் – தெலுங்கு
பாட்டுக்களுடன்)

கவி : உடுகூரு சத்ய நாராயண ராவ்

பாட்டுகள் : டி. சூரியகுமாரி

★

- ★ புஷ்பா ஹன்ஸ் (புது நட்சத்திரம்)
- ★ கேசவராவ் டேட்
- ★ உமேஷ் சர்மா
- ★ மன்மோஹன், கிருஷ்ணா

முதலியோர் நடிப்பது

மாகாணம் முழுவதும் எல்லா முக்கியமான நகரங்களிலும்
இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

தி அலங்கார் சித்ரா லிமிடெட்.

7, கெம்பகௌடா ரோடு : பெங்களூர்-2

தந்தி : "ALANKAR" போன் : 2663

ஆ! என்ன குஷி!



புதுமை உணர்ச்சிக்கும் சரும ஆரோக்யத்திற்கும் மலபார் லிம்டா சோப்புதான் சிறந்தது!

சுத்தமான வேப்பெண்ணெ சேர்க்கப்பட்டது!

FAS-461.

VEGETABLE SOAP WORKS, CALICUT.

PROPRIETORS: SAIT N.P. & Co. LTD.
CALICUT-BOMBAY-2-MADRAS-1.


உலகப் பிரக்யாதி பெற்ற ஸ்விஸ் தயாரிப்பு பேவர்-லூபா கைக் கெடிகாரங்கள்கூட கிடைக்கும்

சரியாக மணி காட்டும் கவர்ச்சிகரமான அமைப்பு, மிக உறுதியானது. ஆயுள் காலம் வரை உழைக்கக்கூடியது.



ஒவ்வொன்றும் மூன்று வருஷ உத்தரவாதம்

குரோமியம் கேஸ்	ரூ. 15/-
குரோம்கேஸ் 5 ஜுவல்கள் உயர் ரகம்	ரூ. 25/-
குரோம் கேஸ் 7 ஜுவல்கள் உயர் ரகம்	ரூ. 30/-
ரோல்டு கோல்டு 7 ஜுவல்கள் உயர் ரகம்	ரூ. 36/-
குரோமியம் கேஸ் 15 ஜுவல்கள்	ரூ. 40/-
ரோல்டு கோல்டு 15 ஜுவல்கள்	ரூ. 50/-
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேஸ் 17 ஜுவல்கள் ஜெனீத் பேவர்-லூபா கம்பெனி, 10 வருஷ உத்தரவாதம் உயர் ரக கைகெடிகாரம்	ரூ. 170/-



ஒவ்வொன்றும் நான்கு வருஷ உத்தரவாதம்

குரோம் கேஸ் 5 ஜுவல்கள்	ரூ. 30/-
குரோம் கேஸ் 7 ஜுவல்கள்	ரூ. 35/-
ரோல்டு கோல்டு 7 ஜுவல்கள்	ரூ. 44/-
ரோல்டு கோல்டு 15 ஜுவல்கள்	ரூ. 60/-
ரோல்டு கோல்டு 20 மைக்ரோன்ஸ், 15 ஜுவல்கள் ஆன்டி மாக்னடிக் உயர் ரகம்	ரூ. 75/-
18 காரட் கோல்டு கேஸ் 15 ஜுவல்கள் உயர் ரகம் கை கெடிகாரம் "வான்டேஜ்" பேவர் லூபா 10 வருஷ உத்தரவாதம்	ரூ. 205/-
17 ஜுவல்கள் வாட்டர்புரூப், ஷாக்புரூப் ஸ்டீல்கேஸ் உயர் ரகம்	ரூ. 95/-
அலாரம் டைம்பீஸ் ஜெர்மனி தயாரிப்பு 5 வருஷ உத்தரவாதம் உயர்ந்த ரகம்	ரூ. 24/-

ஒரே தடவையில் இரண்டு கடிகாரங்களுக்கு ஆர்டர் அனுப்புவோருக்கு 15 சதவிகிதம் விலையில் சலுகை காட்டப்படும்.

உங்கள் பெயரையும் விலாசத்தையும் தயவுசெய்து ஆங்கிலத்தில் அச்சு எழுத்துக்களில் எழுதவும்.

SHARMA WATCH COMPANY
(IMPORTERS)
(W. DEPOT) TUMSAR — C. P.



மதராஸ் - திருச்சி - மதுரை

சென்று திரும்பும்

மேலும் செல்லுகிறது

மதராஸ் - பெஜவாடா - விசாகப்பட்டணம்
மதராஸ் - ஹைதராபாத் - நாகப்பூர் - போபால் - டெல்லி
மதராஸ் - ஹைதராபாத் - பம்பாய்

* * *


வாரம் மூன்று முறை: திங்கள், புதன், சனிக்கிழமைகளில் மட்டும்

கால அட்டவணை:

11-00 மணி	மதராஸ்	15-40 மணி
12-10 மணி	திருச்சிராப்பள்ளி	14-30 மணி
12-30 மணி	திருச்சிராப்பள்ளி	14-10 மணி
13-10 மணி	மதுரை	13-30 மணி

மதராஸிலிருந்து மதுரைக்கு 2½ மணிக்குக் குறைந்த நேரத்தில்

டிக்கெட் செய்ய விபரங்களுக்கு:



DECCAN AIRWAYS LTD

ஹோட்டல் கன்னிமாரா அனெக்ஸ்
மவுண்ட் ரோடு : மதராஸ்
போன்: 8338

11, ப்ரொமினேட் ரோடு
கன்டோன்மென்டு, திருச்சிராப்பள்ளி
போன்: 116

பாரத் மான்ஷன்ஸ்
மேற்கு வெளி வீதி, மதுரை
போன்: 264

தந்தி: "DECCANAIR"

கல்கி பொருளடக்கம்

மலர் 8 | இதழ் 50

ஜூலை 10

விரோதி ஆனி 27உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

ஏமாற்றம்!



சீன கம்யூனிஸ்டு தலைவர் மா சே துங் சீனாவில் நடந்த உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்றதும், ருஷ்யாவுக்கும் சீனாவுக்கும் விரோதம் ஏற்பட்டுவிடும் என்று பிரிட்டனும் அமெரிக்காவும் கனவு கண்டு வந்தன. ஆனால், இப்போது மா சே துங், தாம் ருஷியாவின் கட்சியிலேயே நிற்கப் போவதாகப் பிரகடனம் செய்திருக்கிறார்!

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 50

என்ன சேதி?

போருக்குப் புறப்படுங்கள்!

சுதந்திர இந்தியாவைப் பாதுகாக்க வேண்டுமாயின், இப்போது ஆரம்பமாகியுள்ள போரில் எல்லோரும் ஈடுபட வேண்டும். இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களும் சிப்பாய்களாக மாற வேண்டும். எல்லோரும் ஒருமித்து உழைக்க வேண்டும். பிரிட்டிஷாரை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றியடைந்ததுடன், போர் முடிந்துவிட்டது என்று யாரும் நினைக்கக் கூடாது. சுபிட்ச வாழ்வைச் சூழ்ந்து மலைபோல் மறைத்துக் கொண்டிருந்த அடிமை வாழ்வு என்ற பிரம்மாண்டமான முதல் அரண் தகர்க்கப் பட்டுவிட்டது. இன்னும் பல அரண்களைத் தகர்த்த பின் தான் சுபிட்ச வாழ்வாகிய லட்சியத்தை ஜனங்கள் அடைய முடியும். "வறுமை, அறியாமை, அமித விலைவாசிகள் முதலிய பல அரண்களையும் தகர்ப்பதற்காகப் போருக்குத் திரண்டு எழுங்கள்" என்று பாரத நாட்டின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு தேச ஜனங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மேற்படி போர்த் திட்டத்தையும் இந்திய சர்க்கார் தயாரித்திருக்கிறார்கள்.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்திய சர்க்கார் வகுத்துள்ள திட்டத்தில் மூன்று அம்சங்கள் முக்கியமானவை. முதலாவதாக, தற்போதுள்ள நிலங்களில் சிறந்த சாகுபடி முறைகளைக் கைக்கொண்டு அதிக விளைச்சலுக்கு வழிதேட வேண்டும். அவ்வாறு செய்வதால் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் தவிர்க்கப்படும். இரண்டாவதாக, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, வாழைப்பழம் போன்ற சில்லறை உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். மூன்றாவதாக, தரிசு நிலங்களை இராதவாறு வீடுகளின் காம்பவுண்டுகள் உள்பட எல்லாவிடங்களிலும் பயிர்த்தொழில் செய்ய வேண்டும்.

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு தேச ஜனங்களும் உணவு விஷயத்தில் தங்களுடைய பழக்க வழக்கங்களையே மாற்றிக் கொண்டனர். அது போலவே இந்திய மக்களும் உணவு நெருக்கடி தீரும்வரையில், தங்களுடைய பழக்க வழக்கங்களைச் சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் ஜவாஹர்லால்ஜி கேட்டுக் கொண்டிருக்கிறார். அப்படியானல்தான், பாரத நாட்டு மக்கள் உணவுக்காகப் பிற நாட்டை எதிர்பார்க்கும் அலங்கோலம் அறவே ஒழிய வழி பிறக்கும். 1951-ம் வருஷத்துக்குள் இந்தியாவில் உணவு உற்பத்தி பதினைந்து சத விகிதம் அதிகமாகி விட்டால், உணவு பற்றாக் குறைப் பிரச்னை தீர்ந்து விடும். அதன் பிறகு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால், அவ்விஷயமாக இந்திய மகா ஜனங்கள் யாவரும் சர்க்காருடன் ஒத்துழைத்தால் தான் மேற்படி போரில் பூரண வெற்றி பெற்று சுபிட்ச வாழ்வை எய்துவது சாத்தியமாகும்.

கெட்ட பெயர் வேண்டாம்

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வதுபோல, புதுச்சேரியில் சிலர் பாரதத்தாயின் மணிக்கொடியை அவமதித்ததன் மூலம் தங்களைத் தாங்களே அவமானப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உலக நாடுகள் யாவும் சுதந்திர இந்தியாவின் கொடிக்கு மரியாதை செலுத்துகின்றன. எனவே, ஒரு சில துஷ்டர்கள் அதை அவமதிப்பதால், நமது கொடியின் பெருமையோ கௌரவமோ அணுவளவும் குன்றி விடாது. புதுச்சேரி உள்பட எல்லா பிரஞ்சுப் பிரதேசங்களும் இந்தியாவுடன்

சேரவேண்டும் என்று விரும்பும் தேச பக்தர்கள் அந்தத் துஷ்டர்களின் அட்டகாசங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் கண்டு பயந்து தங்களுடைய லட்சியத்தை விட்டுவிட மாட்டார்கள்.

சந்திரநாகூரில் நடந்த சர்வஜன வாக்கெடுப்பில் இந்தியா அடைந்த வெற்றியைப் புதுச்சேரி மக்கள் சென்ற மாதம் 26-ந் தேதி கொண்டாடினார்கள். ஆனால், அந்தக் கொண்டாட்டத்தை எதிர்த்து ஆரம்பமான அக்கிரமங்கள் இன்னும் நின்றபாடில்லை. பிரஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியமடைய வேண்டும் என்று கூறுவோரையும் அவர்களுடைய வீடுகளையும் ஸ்தாபனங்களையும் துஷ்டர்கள் தாக்குகிறார்கள்; இந்தியக் கொடியை இழுத்துக் கீழே போடுகிறார்கள். மேற்படி அக்கிரமங்களைத் தடுக்கப் போலீசார் முயற்சிக்கவில்லை என்று அங்குள்ள தலைவர்கள் கூறியிருப்பதைப் பிரஞ்சு அதிகாரிகள் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

சந்திரநாகூர் வெற்றியைக் கொண்டாடியதற்காக இவ்வளவு அட்டூழியங்கள் நடைபெறும் இடத்தில், சர்வஜன வாக்கு எடுக்கும்போது என்ன நேருமோ என்று பாமர ஜனங்கள் கலங்குவது இயற்கை. அத்தகைய கலக்கத்துக்கு இடம் கொடாமல் ஜனங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டியது பிரஞ்சு சர்க்காரின் கடமை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. புதுவையில் நடந்த சம்பவங்களை விசாரிப்பதற்காக பிரஞ்சு இந்திய கமிஷனர் ஒரு நீதிபதியை நியமித்திருப்பது போற்றத் தக்கதாகும். மேற்படி விசாரணை பூர்த்தியாகி கலகம் செய்தவர்கள் தண்டிக்கப் படுவார்களாயின், இனி அத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்கலாம். இல்லாவிடில் சர்வஜன வாக்கெடுப்பு அமைதியாக நடைபெற முடியாததுடன், பிரஞ்சு இந்திய அதிகாரிகளுக்கும் கெட்ட பெயர் ஏற்படும்.

“எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறாத மாணவன் ஒருவன் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தான். தெய்வாதீனமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்தான்.”

—பம்பாய்ச் செய்தி.

விஷப் பரீட்சையிலும் தேறாத மேற்படி மாணவன் மேற்கொண்டு என்ன செய்யப் போகிறானோ?

★

கனம் மந்திரிக்கு வாசித்து அளிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தில் அர்ச்சகர்கள் தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கூறியுள்ளனர். —விஜயவாடா நிருபர்.

அர்ச்சகர்களின் குறைகளை நிவர்த்தி செய்யாவிடில் அவர்கள் கனம் மந்திரிக்கு லக்ஷார்ச்சனை செய்யக் கூடும்.

அமைதிக்கு வழி உண்டா?

சீனப் போர் முடிவுறும் கட்டத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. சியாங் கை ஷேக்கின் விடா முயற்சியோ, அமெரிக்காவின் அரை குறை உதவியோ சீனாவைக் காப்பாற்ற முடியவில்லை. இன்னும் சில நாட்களில் சீனா முழுதும் பொது உடைமை சர்க்காரின் கீழ் வந்து விடும். ருஷ்யாவின் உதவி பெற்று வரும் சீன கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றதும், ருஷ்யாவின் தொடர்பைக் கத்தரித்துக் கொண்டு விடுவார்கள் என்று பிரிட்டனும் அமெரிக்காவும் செய்து வந்த பிரசாரம் இப்போது பொய்த்து விட்டது. சீன கம்யூனிஸ்டு தலைவர் மா சே துங், சீனா ருஷ்யாவின் பக்கமே இருந்து வரும் என்று சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாகக் கூறி விட்டார். சீனப் பொது உடைமை சர்க்காரை அங்கீகரிக்க அமெரிக்காவும் பிரிட்டனும் தயாராகி வருகின்றன என்றும், அமெரிக்கா அங்கீகரிக்கா விட்டாலும் பிரிட்டன் அங்கீகரிக்கப்போவது நிச்சயம் என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சீனாவில் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஹாங்காங் துறைமுகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காவே பிரிட்டன் சீனப் பொது உடைமை சர்க்காரின் நட்பை நாடுகிறது. மேற்படி சர்க்காரைப் பிரிட்டன் அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கா விட்டாலும் ஹாங்காங்கைப் பிரிட்டன் பாதுகாக்க முடியாது என்றும் செய்திகள் கூறுகின்றன.

அது எப்படியாயினும், சீனா ருஷ்யாவின் பக்கம் சேருமாயின், உலகத்திலே சம பலமுள்ள இரண்டு கட்சிகள் ஏற்படும். உலகத்தில் ஒரு பாதி அமெரிக்கா, பிரிட்டனின் பக்கத்திலும் மற்றொரு பாதி ருஷ்யாவின் பக்கத்திலும் இருக்கும். அந்நிலைமையில் இரு கட்சிகளுக்கும் இடைவிடாமல் பிணக்குகளும் போட்டிகளும் ஏற்படலாம். அவை முற்றிப் போரில் வந்து முடியுமாயின், அதன் விளைவைக் கற்பனை செய்து கொள்வதும் முடியாத காரியம். எனவே, சீனப் போரின் முடிவு சீனாவிலோ, ஆசியாவிலோ, உலகத்திலோ அமைதியை உண்டாக்குமா என்பது சந்தேகம்தான்.

வரி போட வழி சொல்லுகிறோம்!

சென்னைச் சட்ட சபையின் புது வரித் திருவிழாக் கூட்டம் நடந்து முடிவடைந்தது! "அப்பாடா! முடிந்ததே!" என்று பொது மக்கள் பெருமூச்சு விடுகிறார்கள். "இந்த மட்டோடு நம்மைக் கோபால ரெட்டியார் விட்டாரே!" என்று ஆறுதல் அடைகிறார்கள். "மஞ்சள் பெட்டியில் வோட்டு வாங்கிக் கொண்ட எம். எல். ஏ. பிரபுக்கள் இவ்வளவோடு தங்கள் கருணையை நிறுத்திக் கொண்டார்களே!" என்று திருப்தி அடைகிறார்கள்.

கனம் கோபால ரெட்டியின் புதுவரிப் பிரேரணைகள் முதன் முதலில் வெளியாகி மூன்று மாதங்கள் ஆகின்றன. இந்த மூன்று மாதங்களில் சென்னை மாகாணத்தில் காங்கிரஸின் பெயர் கெட்டதுபோல் இதற்கு முன் எப்போதும் கெட்டதில்லை; இவ்வளவு கெட்ட பெயர் காங்கிரஸ் ஆட்சிக்கு இதற்கு முன்பு எப்போதும் ஏற்பட்டதில்லை.

சென்னை வரவு செலவு மந்திரி பொருளாதார விஷயங்களிலோ வரி விதிக்கும் கொள்கைகளிலோ கொஞ்சம் கூட ஆராய்ச்சி இல்லாதவர் என்பது வெளிப்படையாயிற்று. தமக்காகத் தெரியாவிட்டாலும் தெரிந்தவர்கள் சொல்லுவதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் சக்தியும் அவருக்குக் கிடையாது என்று அறிந்து கொண்டோம்.

வரவு செலவு மந்திரியை மட்டும் தனிப்படக் குற்றம் சொல்வதற்கில்லை. மந்திரி சபை முழுவதும் மேற்கூறிய புது வரிப் பிரேரணைகளின் அபகீர்த்திக்குப் பாத்தியப்பட்டவர்கள்தான். மற்ற மந்திரிகளின் சம்மதம் இல்லாமல் நிதி மந்திரி புதுவரிப் பிரேரணைகளைக் கொண்டு வந்திருக்க முடியாது.

புது வரிப் பிரேரணைகள் அபத்தமானவை என்பதற்கு வேறு அத்தாட்சி ஒன்றுமே தேவையில்லை. அந்தப் பிரேரணைகளைப் பற்றி ஆலோசிப்பதற்கு நியமித்த சட்ட சபை செலக்ட் கமிட்டியில் அப் பிரேரணைகளில் பெரும்பாலானவை அடிபட்டுப்போயின. எனவே, மந்திரிமார்களும் அவற்றைக் கைவிட்டார்கள். ஆகவே, ஏற்படுவது என்ன? முதலில் பிரேரணைகளைக் கொண்டு வந்தபோது தீர்க்காலோசனை செய்து கொண்டு வரவில்லை என்பதுதான். பிசகான பிரேரணைகளைக் கொண்டு வந்ததின் பலனாக இந்தச் சென்னை மாகாணமெங்கும் சில காலம் காங்கிரஸைத் திட்டும்படி ஆயிற்று. நாட்டுக்கு இது எவ்வளவு பெரிய தீமை என்று சொல்லவேண்டியதில்லை.

விளம்பர வரிப் பிரேரணையைப் பற்றிப் பேசும்போது கனம் கோபால ரெட்டி கூறினார்:

"வாதங்கள் எல்லாம் எங்களுக்கு விரோதமாக இருக்கலாம். ஆனால் முடிவிலே தீர்ப்பு எங்களுக்குத்தான் சாதகமாயிருக்கும்!"

இந்தப் பேச்சின் கருத்து என்னவென்று தெரிகிறது அல்லவா?

"யார் எப்படி எதிர்த்துப் பேசினால் என்ன? சட்ட சபையில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர் கட்சியின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட கைகாட்டி மரங்கள் தானே? சாதகமாகக் கையைத் தூக்கு என்றால் கையைத் தூக்க வேண்டியவர்கள்தானே? ஆகையால் சட்ட சபையின் முடிவு எப்படி எங்களுக்கு விரோதமாகப் போகும்?" என்பதுதான் கனம் கோபால் ரெட்டியார் கூறியதின் கருத்து.

இப்படிப்பட்ட 'கைகாட்டி மர' எம். எல். ஏ. க்களைச் சட்ட சபை நிறைய வைத்துக் கொண்டிருந்தும் வரவு செலவு மந்திரி தாம் கொண்டு வந்த பிரேரணைகள் பலவற்றை ஏன் கைவிடும்படி நேர்ந்தது? அந்தப் பிரேரணைகள் அவ்வளவு அபத்தமாயிருந்தபடியால் 'கைகாட்டி மரங்கள்' கூடக் கையைத் தூக்க மறுத்திருக்க வேண்டும்! இவ்வளவு அபத்தமான வரிப்பிரேரணைகளைச் சட்டசபையில் கொண்டு வந்து காங்கிரஸுக்கு விரோதமான மூன்று மாதப் பிரசாரத்துக்கு இடம் கொடுத்து விட்டுப் பிறகு அந்தப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொள்ளக் கூடிய ஒருவர் சென்னை மாகாணத்தின் வரவு செலவு மந்திரியாயிருப்பது நம்முடைய துரதிர்ஷ்டந்தான்.

புது வரிகள் அவசியமா?

வரிப் பிரேரணைகள் விஷயத்தில் எல்லா மந்திரிகளும் பொறுப்புள்ளவர்களே. ஆனால் மந்திரிகள் எல்லாருமே "தமக்காகவும் தெரியாதவர்கள்; சொன்னாலும் கேளாதவர்கள்" என்ற கோஷ்டியைச் சேர்ந்தவர்களாயிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆகையால் வரி போடும் வழிகளைப் பற்றிச் சில பொதுக் கொள்கைகளை ஆராய விரும்புகிறோம்.

முக்கியமாக, கனம் பக்தவத்ஸலம் அவர்கள் இரண்டு மூன்று இடங்களில் கூறியிருக்கும் ஒரு விஷயத்துக்குப் பதில் கூற விரும்புகிறோம்.

"எந்த வரி போட்டாலும் ஆட்சேபிக்கிறீர்களே! வெறுமனே எல்லா வரிகளையும் ஆட்சேபித்தால் மட்டும் என்ன பயன்? சர்க்கார் வேலை நடக்க வேண்டாமா? ஆட்சேபிக்கிறவர்கள் வேறு மாற்று யோசனை சொல்லுங்கள்! வேறு என்ன வரி போடலாம் என்று சொல்லுங்கள்!" என்று கனம் பக்தவத்ஸலம் கேட்டிருக்கிறார்.

"எந்த வரி போட்டாலும் ஆட்சேபிக்கிறார்கள்" என்று கனம் பக்தவத்ஸலம் சொல்லியிருப்பது சரியல்ல. உதாரணமாக, சொந்த மோட்டார் கார்களுக்கு வரியை உயர்த்தும் யோசனைக்கு நாட்டில் எதிர்ப்பு இருந்ததா?

பார்க்கப் போனால், சொந்த மோட்டார்க் கார்களுக்கு வரி உயர்த்தும் யோசனை, முதலில் வெளியான கனம் கோபால ரெட்டியின் பிரேரணைகளில் இல்லை. பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஏழைகளின் தலையிலே மட்டும் கனம் கோபால ரெட்டி கையை வைக்க உத்தேசித்தார். எம். எல். ஏ.க்களின் யோசனையின்பேரில் பிற்பாடுதான் அந்த வரி சேர்க்கப்பட்டது. சொந்த மோட்டார் வரியைப் பத்திரிகைகள் ஆட்சேபிக்கவில்லை; பொதுஜனங்களும் ஆட்சேபிக்கவில்லை.

ஆகையால் எந்த வரி போட்டாலும் ஆட்சேபிக்கிறார்கள் என்று மந்திரிமார்கள் புகார் சொல்வது பிசகு.

"மாற்று யோசனை சொல்லுங்கள்; வேறு என்ன வரி போடலாம் என்று எடுத்துச் சொல்லுங்கள்" என்று கனம் பக்தவத்ஸலம் கேட்கிறார்.

வேறு மாற்று வரிகள் போடும் விஷயமாக யோசனை சொல்ல நாம் தயாராயிருக்கிறோம். ஆனால் புதிய வரிகள் போடுவது அவசியந்தான் என்பதை முதலில் மந்திரிகள் நிரூபிக்கவேண்டும்.

புதிய வரிகளுக்கு அவசியம் இல்லை என்று நாம் கருதுகிறோம்.

தற்சமயம் சென்னை மாகாணத்திற்கு வருஷ வருமானம் ரூபாய் ஐம்பது கோடிக்குமேல் வருகிறது.

வீண் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமான நிர்வாகத்தை நடத்தினால் இந்த ஐம்பது கோடி ரூபாய்க்குள் கட்டாயம் அரசாங்கம் நடக்கும்.

பூரண மதுவிலக்கினால் ஏற்பட்ட வருமான நஷ்டத்துக்குப் பலவகை விற்பனை வரிகளும் சென்ற மூன்று வருஷத்தில் விதித்திருக்கும் மற்றப் புது வரிகளும் ஏற்கனவே ஈடுசெய்து விட்டன.

நாலு கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் என்று சொல்வதும் பிசகுதான்.

வரவேண்டியதை யெல்லாம் குறைத்தும் செலவினங்களை யெல்லாம் மிகைப்படுத்தியும் கணக்குப் போட்டதனால் இந்தத் துண்டு விழுந்திருக்கிறது.

புதிய வரிகளைப் போட்டு வருமானத்தை அதிகப்படுத்துவதும், வருமானம் அதிகம் இருக்கிறதே என்று சர்க்கார் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் அதிகப்படுத்துவதும் சர்க்கார் பொருளாதார நிபுணர்கள் அனுசரிக்கும் ஒரு தந்திரம். இந்தத் தந்திரத்துக்கு நம்முடைய மதி மந்திரிகள் இரையாகி வருகிறார்கள்.

சுயராஜ்ய சர்க்கார் ஏற்பட்டு மூன்று வருஷ காலம் புதிதாக எந்த வரியும் போடாதிருந்தால் உத்தமமாயிருந்திருக்கும்.

பிரிட்டிஷ் ஆட்சியைத் தாக்கிக் காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்த போதெல்லாம் அதிகார வர்க்கத்தின் வரி போடும் முறையைத் தாக்கிப் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

சுயராஜ்ய சர்க்கார் வந்ததும் புதிய புதிய வரிகளைப் போட்டுக் கொண்டேயிருந்தால், "காங்கிரஸ் மந்திரிகள் பிரிட்டிஷ் சர்க்காரைக் காட்டிலும் அதிக வரி போட்டார்கள்!" என்னும் பழிச் சொல் பரவியே தீரும்.

"பூரண மதுவிலக்குச் செய்வோம்" என்று காங்கிரஸ் மக்களுக்கு உறுதிமொழி கொடுத்திருந்தது. அதை நிறைவேற்றுவது அவசியம்; நிறைவேற்றியும் ஆயிற்று.

மற்ற ஆகாசக் கோட்டைத் திட்டங்களையெல்லாம் மூன்று வருஷத்துக்கு நிறுத்திக் கொண்டால் பாதகமில்லை. ஜனங்கள் தலையில் மேலும் புது வரிகளைச் சுமத்தாதிருத்தல் நலம்.

யாருக்கு வரி போடக்கூடாது?

சர்க்காரை நடத்துவதற்கும் சர்க்கார் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்களைச் செய்வதற்கும் புது வரி போட்டுத்தான் ஆக வேண்டும் என்று வைத்துக் கொண்டு பார்க்கலாம்.

புது வரிகள் போடும் விஷயத்தில் பொதுஜன சர்க்கார் அனுசரிக்க வேண்டிய கொள்கை என்ன?

யாருக்கு வரி போட வேண்டும்? எதற்கு வரி போட வேண்டும்? எப்படி வரி போட வேண்டும்?—இவை முக்கியமான கேள்விகள்; பொதுஜன வோட்டுப்பெற்ற காங்கிரஸ் மந்திரிகள் யோசிக்க வேண்டிய கேள்விகள்.

யாருக்குப் புது வரி போடக் கூடாது என்பதை முதலில் யோசித்துத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

1 ஏழை எளிய மக்களின் தலையில் சுமரும்படியான புது வரி போடக் கூடாது.

"சுயராஜ்யம் எப்போது வரும்? நம் துன்பங்கள் எப்போது விடியும்?" என்று ஏழை மக்கள் நெடுங்காலம் ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

சுயராஜ்யம் வந்ததும் வராததுமாக அவர்களுடைய தலையிலே புதிய வரிகளைச் சுமத்துவது பிசகு; அநீதி; தேச நன்மைக்குப் பாதகமான காரியம்.

2 மத்திய வகுப்பார் தலையில் சுமரும்படியான புது வரிகள் விதிக்கக் கூடாது.

'மத்திய வகுப்பார்' என்று சொல்லும் போது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களையும் அரசியல் உணர்ச்சி பெற்றவர்களையும் மாதம் முப்பது ரூபாய் முதல் இருநூறு ரூபாய் வரையில் சம்பளமாகவோ வேறு விதத்திலோ சம்பாத்தியம் உள்ளவர்களையும் சொல்கிறோம். எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தும் வேலையின்றி, வருமானமின்றி, வாழ்க்கை நடத்துவதற்கே திண்டாடுகிறவர்களைச் சேர்த்துச் சொல்கிறோம்.

இந்த மத்திய வகுப்பார்தான் 1906-ம் வருஷத்திலிருந்து 1947-ம் ஆண்டு வரையில் சுதந்திரப் போரின் முன்னணியில் நின்றும் பக்கபலமாக இருந்தும் இந்தியா சுதந்திரம் அடையக் காரணமாயிருந்தவர்கள்.

காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் பொதுக் கூட்டங்களுக்கு வந்தவர்கள் இவர்கள். 'ஜே' கோஷம் செய்தவர்கள் இவர்கள். காங்கிரஸ் அங்கத்தினரானவர்கள் இவர்கள். காங்கிரஸ் நிதிக்குப் பணம் கொடுத்தவர்கள் இவர்கள். தேசத்துக்காகத் தியாகம் செய்தவர்கள் இவர்கள். மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டவர்கள் இவர்கள். மற்றவர்களை வோட்டுப் போடும்படி செய்தவர்கள் இவர்கள்.

1942-ம் ஆண்டிலிருந்து இந்த மத்திய வகுப்பாரின் கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வந்திருக்கின்றன.

காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகு மேலும் கஷ்டங்கள் அதிகமாகி யிருக்கின்றன.

சுயராஜ்யம் வந்ததினால் ஏழைத் தொழிலாளி மக்கள்கூட மதுவிலக்கு என்னும் பெரிய நன்மையை அடைந்திருக்கிறார்கள். இந்த மாகாணத்தில் குறைந்த பட்சம் 35 கோடி ரூபாய் அவர்களுக்கு மிச்சமாகி யிருக்கிறது.

ஆனால் மத்திய வகுப்பார் எந்தவித நன்மையையும் அடையவில்லை.

எல்லா விதத்திலும் மத்திய வகுப்பாரின் வாழ்க்கைச் செலவு அபரிமிதமாக உயர்ந்து போயிருக்கிறது. ஆனால் அதற்குத் தகுந்தபடி அவர்களின் வருமானம் உயரவில்லை.

உணவுக்கும் உடைக்கும் வீட்டு வாடகைக்கும் பிரயாணத்துக்கும் பிள்ளைகளின் படிப்புக்கும் அவர்கள் படும் கஷ்டத்தைச் சொல்லி முடியாது.

அத்தகையவர்களுடைய தலையில் மேலும் வரிச் சுமையை ஏற்றுவது பிசகு; நன்றி கெட்ட தன்மை; தன்னுடைய தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்ளும் அறிவீனம்.

மத்திய வகுப்பாரின் கஷ்டங்களைப் பண்டித ஜவாஹர்லால் நேரு ஒப்புக்கொண்டு சென்ற வாரத்தில் அநுதாபத்துடன் பேசியிருக்கிறார். ஆனால் நம்முடைய கனம் கோபால ரெட்டி போடும் வரிகள் எல்லாம் மத்திய வகுப்பாரை மேலும் மேலும் அமுக்கிக் கொல்லும் வரிகளாயிருக்கின்றன!

யாருக்கு வரி போடலாம்?

புது வரிகள் போடுவது அவசியம் என்று ஏற்பட்டால் யாருக்குப் போடுவது, சமூகத்தில் எந்த அந்தஸ்தில் உள்ளவர்களுக்குப் போடுவது என்று யோசித்துப் போடவேண்டும்.

கொடுக்கக் கூடியவர்களுக்கு வரி போடலாம். தாங்கக் கூடியவர்களுக்குப்

போடலாம். பணம் உள்ளவர்களுக்குப் போடலாம். பணம் சம்பாதிக்கிறவர்களுக்குப் போடலாம். ஆனால் அவரவர்களுடைய வருமான தரத்துக்கேற்பக் குறைவாகவும் அதிகமாகவும் வரி விகிதம் இருக்கவேண்டும்.

வரி கொடுக்கக் கூடியவர்கள் யார், தாங்கக்கூடியவர்கள் யார் என்பது எல்லாருக்கும் தெரிந்துதானிருக்கிறது. கண் முன்னால் அவர்கள் காட்சி தந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

கள்ள மார்க்கெட்டில் பணம் பண்ணியவர்கள், வெள்ளை மார்க்கெட்டில் பணம் சம்பாதித்தவர்கள், பெரிய உத்தியோகங்களில் சம்பளம் வாங்கிச் சம்பாதித்தவர்கள், கிம்பளம் வாங்கிச் சம்பாதித்தவர்கள், யுத்த காண்டிராக்டில் சம்பாதித்தவர்கள், — எல்லாரும் இருக்கிறார்கள். சிலர் பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் நாலா பக்கமும் வாரி இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் பணத்தை வெளியில் காட்டப் பயந்து ஒளித்து வைத்துக்கொண்டு தவிக்கிறார்கள்.

சமீப காலத்தில் அகவிலை உயர்வினால் சிற்சில வகுப்பார் பெரு லாபம் அடைந்திருக்கிறார்கள். உணவு தானியங்களின் விலை உயர்வினால் பலர் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

இவர்களெல்லாம் சென்னை மந்திரிகளின் கண்ணில் படுவதில்லை. அன்றாடக் காலட்சேபத்துக்குக் கஷ்டப்படுகிறவர்கள்தான் அவர்களுடைய கருணைக்குப் பாத்திரமாகிறார்கள்!

இங்கிலாந்தின் உதாரணம்


யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்தின் பொருளாதார நிலைமை மிக நெருக்கடியாயிருந்தது. தொழிற் கட்சி அரசாங்கம் வந்தது. சரியான வரி விதிக்கும் முறையைக் கையாண்டு தேசத்தைக் காப்பாற்றியது.

"அதிகம் உள்ளவர்களிடம் அதிக வரி வசூலிப்பது" என்பதுதான் இங்கிலாந்தின் தொழிற் கட்சி சர்க்கார் கடைப்பிடித்து வரும் கொள்கை.

கீழேயுள்ள படத்தைப் பாருங்கள். பிரிட்டிஷ் சர்க்கார் அனுசரிக்கும் வரி விதிப்புக் கொள்கையைப் பொது ஜனங்களுக்கு விளக்குவதற்காக எழுதி அச்சிட்ட அரசாங்கப் பிரசுரத்திலிருந்து கீழ்க்கண்ட புள்ளி விவரப் படம் எடுக்கப்பட்டது.

வருஷம் 250 பவுன் அதாவது மாதம் 300 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களிடமிருந்து எவ்வளவு சொற்ப பகுதி வரியாக வசூலிக்கப்படுகிறது பாருங்கள். வரிசைக் கிரமமாக வருமானம் அதிகரிக்க அதிகரிக்க வரியும் அதிகரிப்பதைப் பாருங்கள். கடைசியில் 8000 பெரும் பணக்காரர்களிடமிருந்து வசூலிக்கும் வரி அவர்களுக்குப் பாக்கி நிற்கும் தொகையை விட அதிகமாயிருப்பதைக் கவனியுங்கள். இந்தப் புள்ளி விவரப் படம் வருமான வரியை மட்டும் குறிக்கவில்லை. பிரிட்டிஷ் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் எல்லா வகை வரிகளையும் சேர்த்தே குறிப்பிடுகிறது.

இங்கிலாந்தில் வரி விதிக்கும் முறை



சரியான வரி விதிக்கும் முறை இதுதான். தர்ம நியாயமான முறை இதுதான். காங்கிரஸ் மந்திரிகளிடமிருந்து இந்தியப் பொது மக்கள் எதிர்பார்க்கக்கூடிய வரி முறையும் இதுவேயாகும்.


ஆனால் சென்னை சர்க்காரின் வரி முறை இதற்கு நேர்மாறாக இருக்கிறது. பட்ட காலிலேயே படவைத்துக் கெட்ட குடியையே மேலும் கெட வைக்கும் முறையைச் சென்னை சர்க்கார் கையாளுகிறார்கள்.

எதற்கு வரி போடலாம்?

சாமான்களைப் பொறுத்த வரையில் சுகபோகப் பொருள்களுக்கு வேண்டிய வரையில் வரியை உயர்த்தலாம்.

ஆனால் மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களுக்கு வரியைத் தூக்கக் கூடாது.

ஏழை மக்களின் மானத்தை மூடுவதற்கு அவசியமாயுள்ள மட்டரகத் துணிமணிகளுக்கு வரியை உயர்த்தக் கூடாது.



இங்கிலாந்தில் உணவுப்பொருள் விலையில் சர்க்கார் கொடுக்கும் பங்கு.

இந்த விஷயத்திலும் பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்காரின் உதாரணம் நம் கண் முன்னால் இருக்கிறது.

இங்கிலாந்து சர்க்கார் என்ன செய்கிறார்கள் தெரியுமா? பொது மக்களுக்கு ஜீவாதாரமான உணவுப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்காக உதவிப் பணம் கொடுக்கிறார்கள்.

பிரிட்டனில் விற்கப்படும் முக்கியமான உணவுப் பொருள்களின் விலையைப் பற்றிய ஒரு படத்தை மேலே பாருங்கள். ஒவ்வொரு சாமானிலும் கோடிட்ட பகுதி சர்க்கார் கொடுக்கும் உதவித் தொகை; வெள்ளையான பகுதி தான் ஜனங்கள் கொடுக்கும் விலை.

இந்தப் படமும் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரசுரத்திலிருந்து எடுத்ததுதான்.

உணவுப் பொருள்களைப் போலவே சாதாரண ஜனங்களுக்கு அவசியமான உடைக்கு வேண்டிய துணிக்கு Utility Cloth என்று பெயர் கொடுத்து அதன் விலை குறைவாயிருப்பதற்கு உதவிப் பணம் கொடுக்கிறார்கள்.

வாழ்க்கைக்கு அவசியமில்லாத மற்ற சுகபோகப் பொருள்களுக்கெல்லாம் ஏராளமாக வரி போடுகிறார்கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் வரி முறையையும் கனம் கோபால ரெட்டியின் வரி முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

வரி எப்படிப் போடுவது?

பணக்காரர்களுக்கும் பணம் சம்பாதிப்பவர்களுக்கும் வரி போடுவது என்பது சரி. ஆனால் அதை எப்படிப் போடுவது என்பதையும் யோசிக்கவேண்டும்.

பணக்காரர்களுக்கு விதிக்கிற வரிகளை அவர்கள் நேரடியாக ஏழைகளின் தலையில் கட்டி விடும்படியான முறையில் போடக்கூடாது.

உதாரணமாக, சாப்பாடு-சிற்றுண்டி ஹோட்டல்களை எடுத்துக் கொள்ளலாம். சில ஹோட்டல் முதலாளிகள் நிறையப் பணம் சம்பாதித்திருக்கிறார்கள்; இப்போதும் சம்பாதிக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்வோம்.

எனவே, ஹோட்டல் முதலாளிகள் சம்பாதிக்கும் லாபத்துக்குத் தகுந்த வரி போடுவது முறையாகும்.

ஆனால் போடுகிற வரியைச் 'சாப்பாட்டு வரி' 'பாவ வரி' என்று பெயர் சொல்லிப் போடுவானேன்? இப்படிப்

போடுவதால் உடனே சாப்பிடுகிறவர்களின் தலையில் ஹோட்டல் முதலாளிகள் புது வரியைச் சுமத்தி விடுகிறார்கள். 'காங்கிரஸ் சர்க்கார் சேர்ந்து வரி போட்டு விட்டார்கள்' என்று சொல்லி இடித்துக் காட்டுகிறார்கள்.

"ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்கள் ஏழைகளா?" என்று நிதி மந்திரி கேட்டாராம். அவர் காஸ்மாரா ஹோட்டலையும் தாஜ்மகால் ஹோட்டலையும் நினைத்துக்கொண்டு அவ்விதம் கேட்டிருக்க வேண்டும்.

அத்தகைய பெரிய மனுஷர் ஹோட்டல்கள் இரண்டொன்றைத் தவிர மற்ற சாதாரண ஹோட்டல்களில் இப்போது சாப்பிடுகிறவர்களில் நூற்றுக்கு 99 பேர் ஏழைத் தொழிலாளிகளும் அவர்களைவிட ஏழையான நடுத்தர வகுப்பாருந்தான்.

ஹோட்டல்களில் சாப்பாடு-சிற்றுண்டிகளின் விலை விகிதம் ஏற்கனவே அதிகம். சாப்பாடோ மகா கேவலம். புது வரி போட்டதின் பலனாக இன்னும் சாப்பாடு, சிற்றுண்டி விலை அதிகமாகும். அல்லது சாப்பாட்டின் தரம் மேலும் மோசமாகும்.

ஹோட்டல்காரர்கள் காப்பியில் இப்போது பாலைக் காட்டுகிறார்கள்; இனிமேல் அதுவும் காட்ட மாட்டார்கள்!

ஹோட்டல்காரர்களின் லாபம் குறையப்போவதில்லை. பசியோடு வந்து சாப்பிடுகிற லட்சக் கணக்கான ஜனங்கள், மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டவர்கள்,—காங்கிரஸ் சர்க்காரைச் சபித்துக்கொண்டே போவார்கள்.

மோட்டார் பஸ் விஷயமும் இப்படித்தான். பஸ் முதலாளி பணம் சம்பாதிக்கிறான் என்ற காரணத்தைக் காட்டிவிட்டு, பஸ்ஸில் உள்ள ஸீட்டுக்களைக் கணக்கிட்டு வரி போடுவதில் என்ன பயன்? பஸ் முதலாளியின் லாபம் அப்படியே நிற்கிறது. சொற்ப சம்பளம் வாங்கும் ஏழைத் தொழிலாளியும் குடித்தனக்காரனும் வயிறு எரிந்து கொண்டு அதிக பஸ் சத்தம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய பெண்சாதி பிள்ளைகள் மஞ்சள் பெட்டி மீது பழியைப் போடுகிறார்கள்.

ஹோட்டல் முதலாளியின் லாபத்தையும் பஸ் முதலாளியின் லாபத்தையும் 100-க்கு 99 பங்கு வீதம் நம் காங்கிரஸ் மந்திரிகள் எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் சாப்பாட்டு வரி என்றும் பான வரி என்றும் பஸ் ஸீட்டுக்கு இத்தனை வரி என்றும் ஏன் போடவேண்டும்?

"மாற்று யோசனைகள் கூறுங்கள்" என்று கனம் பக்தவத்ஸலம் கேட்டார்.

ஏழைகளைப் பாதிக்காமல் பணக்காரர்கள்—முதலாளிகளுடைய லாபத்திலிருந்து பங்கு எடுத்துக் கொள்ளும் வரிகளாகப் பார்த்துப் போடுங்கள் என்பது நம்முடைய மாற்று யோசனை.

அத்தகைய வரி இனங்களைக் கண்டு பிடித்துச் சொல்லுவதற்கு ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டு சர்க்கார் நிபுணர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அவர்களால் சொல்ல முடியாவிட்டால் நம்மைக் கேளுங்கள்; சொல்கிறோம். ஆனால் நாம் சொல்லுகிற முறைகளைக் கடைப்பிடிப்பதாக முதலில் உறுதி சொல்லுங்கள்.

கனம் கோபால ரெட்டியார் அப்படிச் செய்வார் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. கொஞ்சமும் சிரமப்படாமல் பணக்காரர்கள் ஆனவர்களுக்கு வரி போடும் யோசனை ஒன்றை அவர் முதலில் வெளியிட்டார். மறுநாளே அவசர அவசரமாக அதை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டார்!

அப்படிப்பட்டவர் பணக்காரர்களின் லாபத்திற்குத் துணிந்து வரி போடுவார் என்று நாம் நம்ப முடியவில்லை.

சோஷலிஸ்ட் கட்சி மந்திரி சபையோ அல்லது சோஷலிஸ்ட் தர்மத்தில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ் வாதிகள் அடங்கிய மந்திரி சபையோ ஏற்பட்டால்தான் நம்முடைய வரி விகிதம் ஒழுங்கு படும் என்று கருதுகிறோம்.

நேருஜியின் நோக்கம்!



வற்றாத நீரோடை யாக்க வேண்டும்
வளமாக நெற்போரும் குவிய வேண்டும்
பாழான பஞ்சத்தைப் போக்க வேண்டும்
பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
நாளுக்குநாள் வளமை காண வேண்டும்

அதற்கு

நம் தேசிய சேமிப்பில் சேர வேண்டும்

•

தேசீய சேமிப்புத் திட்டம்

“நாட்டுக்கும் நல்லது வீட்டுக்கும் நல்லது”

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் வாங்குங்கள்

•

சர்டிபிகேட்டுகளை

ரூ. 25000 வரை ஒவ்வொருவரும் வாங்கலாம்

5 வருட, 7 வருட, 12 வருட, சர்டிபிகேட்டுகள் உள்ளன
3% 3½% 4½% வட்டி கிடைக்கும்

கிடைக்கும் வட்டியின் மீது வருமான வரி இல்லை

எல்லா தபால் ஆபீஸ்களிலும் கிடைக்கும்

•


மற்ற விவரங்களுக்கு எழுதவும்:

மாகாண தேசிய சேமிப்பு அதிகாரி, சென்னை — 6



A Most Distinguished Name in Radio

FERGUSON's



பெர்குஸன்ஸ் ரேடியோக்கள்

ஸீரிஸ் 229

229—XL—5 வால்வுகள் AC ரூ. 450

229—UX—5 வால்வுகள் AC/DC ரூ. 450

229—BVX—6 வோல்ட் பாட்டரி ரூ. 475

ஸீரிஸ் 204

204—XL—7 வால்வுகள் AC ரூ. 650

204—UX—7 வால்வுகள் AC/DC ரூ. 650

204—BVX—7 வால்வுகள் 6 வோல்ட் பாட்டரி ... ரூ. 695

ஸீரிஸ் 203

203—XL—5 வால்வுகள் AC ரூ. 295

203—UX—5 வால்வுகள் AC/DC ரூ. 295

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட தென்னிந்தியாவுக்கு ஏகபோக பாக்டரி பிரதிநிதிகளுக்கு எழுதுங்கள் :

யூனிவர்ஸல் ஏஜன்ஸீஸ்

3-18, மவுண்ட் ரோடு : சென்னை - 2

அத்தாட்சி பெற்ற பெர்குஸன் டீலர்கள் :

(1) அஜந்தா ஆர்ட் & கமர்ஷியல் ஏஜன்ஸீஸ், சிதம்பரம்; (2) அஸோஸியேடட் இண்டஸ்ட்ரீஸ் & ட்ரேடர்ஸ், திருநெல்வேலி; (3) ஆந்திரா எலக்ட்ரிக் ஹவுஸ், தெனாலி; (4) சந்திரமோஹன் & கோ., கடப்பை; (5) கோயமுத்தூர் ரேடியோ கம்பெனி, ஈரோடு; (6) ஈஸ்டர்ன் ரேடியோ கார்ப்பரேஷன், மதுரை; (7) மக்கனேல்லி ஸவுண்டு ஸர்வீஸ், ராமநாதபுரம்; (8) மாடர்ன் ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ், விஜயநகரம்; (9) பிரபாத் ரேடியோ கம்பெனி, திருச்சூர்; (10) ரேடியோ எலக்ட்ரிக் ஹவுஸ், பெல்லாரி; (11) ராம் எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ், தஞ்சாவூர்; (12) ஸ்வாமி டிரேடிங் கம்பெனி, கர்னூல்; (13) ஸ்ரீ வேணுகோபால் ரேடியோ கம்பெனி, ஸேலம்; (14) விஜயா டிரேடிங் கார்ப்பரேஷன், ராஜமகேந்திரபுரம்; (15) யங்ஸீக் என்ஜினீரிங் கோ., பெத்தாபுரம்; (16) எக்ஸ். எல். ரேடியோ சர்வீஸ், என். எம். ஸ்ட்ரீட், கள்ளிக்கோட்டை; (17) டி. ஏ. எட்வின், வால்பாரை, P.O.

டாக்டர் சாமியார்

ஒருவர் தம்முடைய சிநேகிதருக்கு உடம்பு சௌகரியமில்லை யென்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றார். வியாதியின் இயல்பைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்ட பிறகு "என்ன சிகிச்சை செய்து கொள்கிறீர்கள்? என்ன மருந்து சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார். "மருந்து ஒன்றும் சாப்பிடவில்லை. நோய் குணமாவதற்கு மந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றார் வியாதியஸ்தர். 'அது என்ன அவ்வளவு சக்தியுள்ள மந்திரம்? ஏதாவது பலன் இருக்கிறதா?" என்று நண்பர் கேட்டார். "வேறு ஒன்றுமில்லை. 'டாக்டர் குருசாமி முதலியார்' என்ற பெயரைத் தினம் நூறு தடவை ஜபித்துக்கொண்டு வருகிறேன். உடம்பும் குணமாகிக் கொண்டு வருகிறது" என்றார் நோயாளி.

டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார் அவர்களிடம் இத்தகைய அபார நம்பிக்கையுள்ளவர்கள் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர் பார்த்துவிட்டால் போதும், வியாதி குணமானதுபோலத்தான் என்று கருதுகிறார்கள். "மற்ற டாக்டர்களைப்போல் வியாதியின் சரித்திரத்தை அவர் நோயாளிகளிடம் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை; நோயாளிகள் கேட்கும் கேள்விகளுக்கும் பொறுமையாகப் பதில் சொல்லுவதில்லை. அதனால் என்ன? டாக்டர் குருசாமி முதலியாரிடம் உள்ள விசேஷமே அதுதான்!" என்று நம்புவோர் பலர் உண்டு. நியாயந்தானே? நோயாளியைப் பார்த்தவுடனே வியாதியைத் தெரிந்து கொண்டு மருந்து எழுதிக் கொடுப்பவர் அல்லவா சரியான டாக்டர்?

* * *

டாக்டர் குருசாமி முதலியார் அவர்களின் அசாதாரண வைத்தியத் திறமையை நோயாளி மகாஜனங்கள் மட்டுமல்ல, அவருடைய சகோதர டாக்டர்கள் பலரும் ஒப்புக்கொண்டு பாராட்டுகிறார்கள். டாக்டர்களின் குழுவில் டாக்டர் குருசாமி முதலியாருக்குச் "சாமியார்" என்று பெயர். வைத்தியத் துறையில் ஏதாவது சிக்கலான பிரச்னை ஏற்படும் போதெல்லாம், "சாமியாரைக் கேட்பதுதானே?" என்று டாக்டர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வது வழக்கம்.



* * *

டாக்டர் குருசாமி முதலியார் நீண்ட காலம் புகழுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சர்க்கார் டாக்டராக உத்தியோகம் பார்த்து 'ரிடயர்' ஆனவர். இந்த வயதில் பூரண ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு அவருக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆனாலும் சமீபத்தில் ஒரு பொறுப்புள்ள மிக முக்கியமான பொது ஊழியம் அவரைத் தேடி வந்து அடைந்திருக்கிறது.

* * *

சென்ற ஜூன் மாதம் 2-ந் தேதி கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் உணவு இலாகாவை ஸ்ரீ ரோச் விக்டோரியாவிடம் ஒப்புவித்துவிட்டு, வைத்திய-சுகாதார இலாகாவை ஏற்றுக் கொண்டார் அல்லவா? ஏற்றுக்கொண்ட சில நாளைக்கெல்லாம் ஒரு காரியம் செய்தார். இந்திய சுதேச வைத்திய இலாகாவை நிர்வகிப்பதற்கென்று நல்ல சம்பளம் வாங்கிக்கொண்டு உத்தியோகம் பார்த்த ஒருவரை வீட்டுக்குப் போகச் சொன்னார்! டாக்டர் குருசாமி முதலியார் அவர்களை அழைத்து "இந்திய சுதேச வைத்திய முறைகளின் ஆராய்ச்சித் தலைவராகத் தாங்கள் உத்தியோகம் பார்க்க வேண்டும்" என்றார். "பார்க்கிறேன்; ஆனால் சம்பளம் வாங்கிக்கொள்ள முடியாது!" என்றார் டாக்டர் முதலியார். "சம்பளம் கொடுக்கின்ற உத்தேசமே இல்லை!" என்றார் கனம் டாக்டர் ராஜன். "அப்படியானால் நான் தயார்!" என்றார் டாக்டர் சாமியார்.

மேற்கூறிய முக்கியமான உத்தியோகத்தை டாக்டர் குருசாமி முதலியார் ஒப்புக்கொண்டு தீவிரமாக வேலை செய்யவும் தொடங்கிவிட்டார் என்று அறிகிறோம்.

* * *

இந்திய சுதேச வைத்திய முறைகள் ஆயுர்வேதம்,

யூனனி, சித்தம் என்று மூன்று வகைப் படும். இந்தச் சுதேச வைத்திய முறை களுக்கு டாக்டர் ராஜன் பரம விரோதி என்பதாக ஓர் அபிப்பிராயம் உண்டு. இது உண்மை அல்ல. நாட்டு வைத்திய முறைகளுக்கு டாக்டர் ராஜன் விரோதி அல்ல; நாட்டு வைத்தியம் என்ற பெய ரால் போதிய ஆராய்ச்சியும் அநுபவமும் இல்லாத அரைகுறைப் பேர்வழிகள் பூரம், வீரம், பாஷாணம் முதலியவற் றைக் கொடுத்து நோயாளிகளை யம னுலகுக்கு அனுப்புவதற்குத்தான் டாக் டர் ராஜன் பரம விரோதி.


இங்கிலீஷ் வைத்திய முறை எப்படிச் சென்ற பல நூறு ஆண்டுகளில் ஆராய்ச்சி யினாலும் அநுபவத்தினாலும் ஒழுங்குபட்டு உலகம் முழுவதும் டாக்டர்களால் கை யாளப்பட்டு வருகிறதோ, அம்மாதிரி ஆயுர்வேத, யூனனி, சித்த வைத்திய முறைகளும் ஒழுங்கு படவேண்டும் என் பது டாக்டர் ராஜன் கருத்து. வைத்திய ஆராய்ச்சித் துறையில் மேனாட்டில் மகா மேதாவிகள் தோன்றிப் பல அற்புத முறைகளையும் மருந்துகளையும் கண்டு பிடித்து மனித குலத்துக்குச் சேவை செய்திருக்கிறார்கள். மேனாட்டு வைத்திய முறையில் மூடு மந்திரம் கிடையாது. ஒரு வைத்தியர் கொடுக்கும் மருந்து இன்னொருவருக்குத் தெரியக் கூடாது என்னும் இரகசியம் கிடையாது.

நம்முடைய பழமையான வைத்திய முறைகளும் மேற்கண்டவாறு நவீனமான ஆராய்ச்சி சோதனைகளில் தேறி நிச்சயப் பட வேண்டும். ஆயுர்வேத, யூனனி, சித்த வைத்தியங்களில் நிச்சயமாகப் பயனுள்ளவை என்று அறிந்தவற்றை இங்கிலீஷ் வைத்திய முறையில் சேர்த்து விட வேண்டும். மொத்த முடிவில் ஒரே வைத்தியமுறைதான் நாட்டில் அனுஷ்டிக் கப்பட வேண்டும். இதிலேதான் பொது ஜனங்களுக்கு நன்மை உண்டு; இந்தியா வுக்கும் பெருமை உண்டு.

இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு டாக்டர் குருசாமி முதலியார் அவர்களை "Director of Indian Medicine" என்ற உத்தியோகத்தில் நியமனம் செய் தது மிகவும் உதவியா யிருக்கும் என்பதில் ஐயமில்லை. டாக்டர் குருசாமி முதலி யார் ஏற்கெனவே ஆயுர்வேத - சித்த முறைகளில் சிரத்தை கொண்டவர்; அவற்றில் நல்ல அம்சங்கள் பல உண்டு என்று நம்புகிறவர். எனவே அவரை மேற்படி பதவிக்கு நியமித்தது மிகப் பொருத்தமான காரியம்.

டாக்டர் குருசாமி முதலியாரின் சேவை யினால் ஆயுர்வேத, யூனனி, சித்த வைத்திய முறைகள் தற்கால ஆராய்ச் சிக்கு உட்பட்டு விஞ்ஞான ரீதியில் சிறப்பும் மேன்மையும் அடையும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

ஏன் வரி இல்லை?



ஆங்கில அரசன் ஒருவன் "ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு ராஜ்யம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன். ஒரு குதிரை கிடைக்குமா?" என்று கதறினானாம். சென்ற வாரம் சென்னை வாசிகள் பலருடைய நிலைமை ஏறக்குறைய அதைப் போலவே இருந்தது. "ஒரு கப் காப்பி! ஒரு கப் காப்பி! ஒரு ரூபாய் வேண்டுமானாலும் கொடுக்கிறோம். ஒரு கப் காப்பி கிடைக்குமா?" என்று கேட்கக்கூடிய நிலைமையில் இருந்தார்கள்.

ஹோட்டல் ஸ்ட்ரைக்!

எம். எல். எஸ்.

"விற்பனை வரியை உயர்த்தக்கூடாது. உயர்த்தினால் ஹோட்டல்களை மூடுவோம்" என்றார்கள் ஹோட்டல் முதலாளிகள்.

"ஓ! பேஷாக மூடுங்கள். அதைப்பற்றி எங்களுக்கு என்ன கவலை?" என்று சொல்லிவிட்டார்கள் சர்க்கார்.

"அப்படியா சேதி!" என்று ஹோட்டல் முதலாளிகள் ஒரு நாள் ஹோட்டலை மூடியும் விட்டார்கள்.

ஒரு ஹோட்டல் முதலாளியைப் பார்த்தேன். "விற்பனை வரியைச் சர்க்கார் அதிகமாக்குவது பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

"என்னுடைய அபிப்பிராயமா? சர்க்கார் இப்படி வரியை உயர்த்துவது ரொம்பத் தப்பு" என்றார் அவர்.

"நீங்கள் கொள்ளை கொள்ளையாக லாபம் சம்பாதிக்கிறீர்களாமே?" என்றேன்.

அவ்வளவுதான். அவருக்கு ஆக்ரோஷம் பிறந்துவிட்டது. "சர்க்காருக்கு என்ன ஸார் தெரியும்? பிரதம மந்திரி கனம் குமாரஸ்வாமி ராஜா எப்போதாவது இரண்டு ஹோட்டல்களை வைத்து நடத்தியிருந்தால் அல்லவா அவருக்கு ஹோட்டல் தொழிலைப் பற்றி ஏதாவது தெரியும்? ஒரு உண்மையை உங்களிடம் சொல்லிவிடுகிறேன். ஏதோ ஒரு தொழிலை நடத்தவேண்டுமே என்பதற்காகத்தான் இந்தத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறேன். வெளியே சொன்னால் வெட்கக்கேடு. நான் ஹோட்டல் வைத்துப் பதினைந்து வருஷமாகிறது. ஒரு தம்பிடி மீதி கிடையாது ஸார், தெரியுமா?" என்றார்.

சற்று நேரம்வரை அவருடன் வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டு எழுந்தேன். அந்தக் கட்டிடத்தை ஒரு முறை நாற்புறமும் பார்த்துவிட்டு, "ஸார், இது யார் கட்டிடம்? ரொம்ப அழகாகக் கட்டியிருக்கிறார்களே?" என்று கேட்டேன்.

"என் சொந்தக் கட்டிடம்தான் ஸார்! நான் கட்டிய கட்டிடம். இதைக் கட்டி முடிப்பதற்கு நாற்பதினாயிரம் ரூபாய் செலவாச்சு!" என்றார் ஹோட்டல் முதலாளி.

* * *

அந்தக் காப்பி ஹோட்டலுக்குப் பக்கத்தில் ஒரு இரும்புக்கடை இருக்கிறது. பெரிய இரும்புக் கடைதான். ஒரு நாளைக்கு ஆயிரக் கணக்கில் விற்பனையாகும். அந்தக் கடை முதலாளியைப் பார்த்து, "ஸார், ஹோட்டல்களை மூடியது உங்களுக்குக் கஷ்டமாக இருக்குமே?" என்றேன்.

"ஆமாம், ஸார்! அதை ஏன் கேட்கிறீர்கள்? காலையிலிருந்து தலைவலி சொல்லி முடியாது" என்றார்.

அவருக்கு அனுதாபம் தெரிவித்து விட்டு "ஹோட்டல்களுக்கு வரி உயர்த்தியதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

"ஹோட்டல்களுக்கு ஏன் ஸார் வரி போடக் கூடாது? நன்றாகப் போடலாம். காலணா தம்பிடி என்ன? ரூபாய்க்கு ஒரு அணா கூடப் போடலாம். எங்களுடைய நிலைமைதான் ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது. போன வருஷத்துக்கு முந்தின வருஷம் எனக்கு முப்பதினாயிரம் ரூபாய்தான் லாபம் கிடைத்தது. சென்ற வருஷம் இருபத்தையாயிரம்தான் கிடைத்தது. இந்த வருஷம் எப்படியாகிறதோ, கடவுளுக்குத்தான் தெரியும். எங்களுக்கு விற்பனை வரி போட்டது ரொம்ப ரொம்பத் தப்பு" என்றார்.

• • •

ஹோட்டல் வேலை நிறுத்தத்துக்கு முதல் நாள் என்னுடைய நண்பர் ஒருவரை ஸ்டேஷனில் சந்தித்தேன்.

"எங்கே ஐயா போகிறீர்?" என்றேன்.

"பெங்களூருக்கு" என்றார் அவர்.

"அப்படியானால் நாளை இங்கே இருக்க மாட்டீராக்கும்?" என்றேன்.

"ஆமாம், ஹோட்டல் ஸ்டிரைக்கில் நான் அகப்பட்டுக் கொள்ள மாட்டேன்" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"திரும்பி வருவதற்கு எத்தனை நாளாகும்?" என்று கேட்டேன்.

"பத்துப் பதினைந்து நாளாகும். இங்கே வேலை நிறுத்தம் எப்படி நிகழ்ந்தது என்பதைப் பற்றி எனக்கு விவரமாக ஒரு கடிதம் எழுதுகிறாயா?" என்று கேட்டார்.

"ஆகட்டும்" என்றேன் நான்.

மறுநாள் காலை பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தபோது எனக்கு உண்டான ஆச்சரியம் கொஞ்சம் அல்ல. மைசூர் சமஸ்தானத்தில் உள்ள எல்லா ஹோட்டல்களும் காலவரையறையின்றி மூடப்பட்டு விட்டதாக அதில் செய்தி வெளியாகியிருந்தது.

• • •

இன்னொரு ஹோட்டல் முதலாளியோடு பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஆக்ரோஷத்துடன் மேஜை மேலே ஒரு குத்து விட்டு விட்டு, "என்ன ஸார் அக்கிரமம்! நூறு ரூபாயாக இருந்த வரியை நூற்றைம்பது ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள்; ஆயிரம் ரூபாய் வரியை ஆயிரத்தைந்நூறு ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள்; லட்சம் ரூபாய் வரியை ஒன்றரை லட்சமாக ஆக்கி யிருக்கிறார்கள். அடுக்குமா இந்த அநியாயம்?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் மேஜைமீது ஒரு குத்து விட்டார்.

எனக்கு விளங்கவில்லை. ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்று அவர் சொன்ன தொகைகள் என் மூளையைக் குழப்பின. "விற்பனை வரி ரூபாய்க்கு மூன்று தம்பிடியாகத்தானே இருக்கிறது? நீங்கள் ஏதோ ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்று கணக்குச் சொல்லுகிறீர்களே?" என்றேன்.

"ஆமாம் ஸார்! மூன்று தம்பிடி இப்போது நாலரைத் தம்பிடியாகப் போகிறது. அதாவது, நூற்றுக்கு ஐம்பது வீதம் வரி உயரப் போகிறது. இதன்படி கணக்குப் பார்த்தால், நூறு நூற்றைம்பதாகவும் ஆயிரம் ஆயிரத்தைந்நூறாகவும் லட்சம் ஒன்றரை லட்சமாகவும் ஆகவில்லையா?" என்றார் அந்த முதலாளி.

"அது இருக்கட்டும். நீங்கள் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு வரி செலுத்துகிறீர்கள்?" என்று கேட்டேன் நான்.

"நான் நூறு — நூற்றைம்பது ரூபாய் கட்டுகிறேன். — ஆனால், கணக்கு என்றால் கணக்குத்தானே ஸார்! — நான் ஆயிரம் ரூபாய் கட்டவேண்டியதாக இருந்தால் இப்போது ஆயிரத்தைந்நூறு ரூபாய் கட்டியாக வேண்டுமே; லட்ச ரூபாய் கட்டவேண்டியதாக இருந்தால் ஒன்றரை லட்ச ரூபாய் கட்டியாகவேண்டுமே; ஒரு கோடி ரூபாய் கட்ட வேண்டியதாக யிருந்தால் ஒன்றரைக் கோடி கட்டியாக வேண்டுமே; கணக்கு என்றால் கணக்குத்தானே ஸார்?" என்றார்.

"ஆமாம்" என்று தலையை ஆட்டினேன். ஆனால் மனதிற்குள்ளாக, "நிதி மந்திரி கோபால் செட்டிக்கு உதவி நிதி மந்திரியாக உம்மைப் போடலாம், ஐயா!" என்று சொல்லிக் கொண்டேன்.

• • •

அன்று சுந்தரேசன் ஐந்து மணிக்கே வீட்டுக்குப் போய் விட்டான். போனதும் போகாததுமாக மனைவியை அழைத்து, "கமலம்! சீக்கிரம் காப்பி போடு" என்றான்.

கமலம் "ஆகட்டும்" என்று சொல்லி விட்டுச் சமையலறைக்குப் போனாள். மறு நிமிஷம் ஒரு தட்டில் டிபனை எடுத்துக் கொண்டு, ஒரு டம்ளர் காப்பியுடன் வந்தாள். காப்பி ரொம்பச் சூடாக இருந்தது.

சுந்தரேசன் இதைப்பார்த்து ரொம்ப ஆச்சரியப் பட்டான். "என்ன இது! சொன்னவுடனே காப்பி கொண்டு வந்து விட்டாயே; முன்னமே போட்டு வைத்திருந்தாயா?" என்று கேட்டான்.

"ஆமாம், இன்றைக்கு நீங்கள் எப்படியும் இங்கே வந்துதான் காப்பி சாப்பிடுவீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதுதான் தயாராகப் போட்டு வைத்திருந்தேன்" என்றாள் சிரித்துக்கொண்டே.

சுந்தரேசன் டிபனையும் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு "கமலா, டிபனும் காப்பியும் தேவாமிருதம் போல இருந்தது" என்றான்.

அதுவரை ஒருநாளாவது சுந்தரேசன் கமலத்தின் சமையலைப் புகழ்ந்து ஒரு வார்த்தையாவது சொன்னதே இல்லை.

அவள் மிக்க மகிழ்ச்சியுடன் கணவனைப் பார்த்து, "இந்த ஹோட்டல் ஸ்டிரைக் இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கும்?" என்று ஆவலோடு கேட்டாள்.

"ஏன்?" என்று கேட்டான் சுந்தரேசன்.

"மாதம் இருபது இருபத்தைந்து ரூபாய் ஹோட்டலுக்குக் கொட்டிவிட்டு வருவீர்களே; ஹோட்டல் ஸ்டிரைக் ஒரு மாதம் இரண்டு மாதம் நீடித்தால் நம்முடைய வீட்டுச் செலவுக்கு எவ்வளவு பணம் மிச்சமாகும்?" என்றாள் கமலம்.



இருபத்தெட்டாம் அத்தியாயம்

நரக வாசல் திறந்தது!

டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் தெரிந்த உருவம் சீதாவின் மனதில் பயத்தை உண்டாக்கவில்லை; ஆனால் வியப்பை உண்டாக்கியது. அந்தத் தாடிக்கார முஸ்லிமை அவள் ஏற்கெனவே இரண்டொரு தடவை பார்த்ததுண்டு. ஆக்ரா கோர்ட்டில் வந்து அவளைக் காப்பாற்றிய மனிதர் அவர்தான். முன்பின் தெரியாத அந்த மனிதர் எதற்காகத் தனக்கு அவ்வளவு பெரிய உதவியைச் செய்தார் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் அவள் மனதில் அமுங்கிக்கிடந்தது. இப்போது அது பொங்கி எழுந்தது.

"சீதா! விளக்கை அணை! கதவைத் திற! நேரம் அதிகம் இல்லை! சீக்கிரம்!" என்று அந்த உருவம் பதறும் குரலில் சொல்லிற்று.

சீதா டார்ச் லைட்டை அணைத்தாள். வெளிச்சமின்றி இருள் சூழ்ந்ததும் அவளுடைய நெஞ்சில் மீண்டும் பதைபதைப்பு உண்டாயிற்று. அதைப் பொருட்படுத்தாமல் அந்த உருவம் நின்ற ஜன்னல் பக்கம் சென்றாள்.

"கதவைத் திற, சீதா! கதவைத் திற!" என்றது இருளில் வந்த குரல்.

அவ்வளவு அவசரமாகக் கதவைத் திறக்கச் சீதா தயாராயில்லை.

"நீங்கள் யார்? எதற்காகக் கதவைத் திறக்க வேண்டும்?" என்று கூறி, "இங்கே புருஷர் யாருமில்லை!" என்று சேர்த்துக் கொண்டாள்.

"எனக்குத் தெரியும். அதனாலேதான் வந்தேன். என்னைத் தெரியவில்லையா, உனக்கு?"

"ஆக்ரா கோர்ட்டில்......"

"ஆமாம்; அது நான்தான். வேறு நினைவு ஒன்றும் உனக்கு வரவில்லையா? என்னுடைய குரல்......"

"அப்பா!......"

"ஆமாம்; நான்தான், சீதா! உன் அப்பாதான்!"

"இந்த வேஷம்......"

"அதை யெல்லாம் பற்றிக் கேட்க இதுதானா சமயம்? சீதா! இன்னும் அரை மணி நேரத்தில் இந்த ஊரில்

நரகத்தின் வாசல் திறக்கப் போகிறது. இரத்த வெறி கொண்ட பேய்களும் பிசாசுகளும் வந்து பயங்கர தாண்டவம் புரியப் போகின்றன..."

"ஐயோ! அது யார்?" என்று அலறினள் சீதா. பக்கத்துச் சுவர் மறைவிலிருந்து ஒரு பெண் உருவம் வெளிப்பட்டு வந்தது.

"சத்தம் போடாதே! காரியம் கெட்டுவிடும். இவள் உன் சித்தி. உன்னைக் காப்பாற்றத்தான் இவளும் வந்திருக்கிருள்."

இதற்குள் அந்த ஸ்திரீ "இல்லை; இவனைக் காப்பாற்ற நான் வரவில்லை. இவள் நன்றிகெட்ட நிர்மூடம். என் பேத்தி, வஸந்தி கண்மணியைக் காப்பாற்ற நான் வந்தேன். உங்கள் புத்தி யற்ற பெண்ணைக் கட்டிக் கொண்டு நீங்களே அழுங்கள்! அடி பெண்ணே! உடனே கதவைத் திறக்கிருயா? இந்தக் கத்தியால் உன்னைக் குத்திக் கொன்று விடட்டுமா?" என்ருள்.

அவள் யார் என்பது சீதாவுக்கு உடனே தெரிந்து போய் விட்டது. இனிமேல் கதவைத் திறக்கத் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை. ஏதோ பெரிய விபத்து வரப்போகிறது என்றும் அதிலிருந்து தன்னைக் காப்பாற்றவே இவர்கள் வந்திருக்கிருர்கள் என்றும் சீதாவின் உள் மனதுக்கு நன்ருய்த் தெரிந்து விட்டது. நடுங்கிய கைகளினல் கதவின் தாளைத் திறந்தாள். மறுகணம் கதவைத் தள்ளிக் கொண்டு இருவரும் உள்ளே வந்தார்கள்.

"அப்பா! உங்களை இந்த நிலைமையில் இந்த வேஷத்திலா நான் பார்க்க வேண்டும்?" என்ருள் சீதா.

அப்போது ரஸியா பேகம் குறுக்கிட்டுக் கூறினள்:—

"பின் எப்போது பார்க்கவேண்டும்? உலகத்தில் எல்லாத் தகப்பன்மார்களும் பெண்கள் நல்ல நிலைமையில் இருக்கும்போது வந்து பாராட்டுவார்கள், சீராட்டுவார்கள். அதில் ஒன்றும் அதிசயம் இல்லை. உன் அப்பா உன்னிடம் வைத்திருக்கும் அன்பை இன்றைக்குத்தான் நீ பார்க்கப் போகிருய்! அடி பெண்ணே! உன்னைப்பற்றிய கவலையினல் இந்தக் கிழவர் எத்தனை நாளாகத் தூங்கவில்லை, தெரியுமா? டில்லியிலிருந்து என்னையும் கட்டி இழுத்துக்கொண்டு வந்து இந்தப் பாழாய்ப்போன ஊரில் ஒரு மாதமாக உட்கார்ந்திருக்கிருர்!"

"இவள் சொல்வதை நீ நம்பாதே, சீதா! என்னைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தவள் இவள்தான்!" என்ருர் மௌல்வி சாகிபு.

"நம்முடைய சண்டையை அப்புறம் தீர்த்துக் கொள்ளலாம். இவளிடம் சொல்ல வேண்டியதை உடனே சொல்லுங்கள்!" என்ருள் ரஸியா பேகம்.

சீதாவின் தந்தை கூறினர்: "ஆமாம்; வீண்பொழுதுதான் போக்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு மாதமாக வீண்பொழுது போக்கிவிட்டோம். ஆனல் நிலைமை இவ்வளவு மோசமாகும் என்று நேற்றுவரையில் நான்கூட எதிர் பார்க்கவில்லை. சீதா! நேற்று முதல் பஞ்சாப் முழுவதும் பயங்கரமான சம்பவங்கள் நடந்துவருகின்றன. மனுஷ்யர்கள் செய்வார்கள் என்று எண்ணக் கூடாத காரியங்களையெல்லாம் செய்கிருர்கள். இந்த ஊரில் இன்னும் அரைமணி நேரத்தில் நரகத்தைத் திறந்துவிடப் போகிருர்கள். ஆயிரம் பதினயிரம் பிசாசுகள் வந்து கூத்தாடப் போகின்றன. அந்தப் பிசாசுகள் இன்னது செய்யும், இன்னது செய்யாது என்று சொல்ல முடியாது. இந்த ஊரிலுள்ள ஹிந்துக்கள், சீக்கியர்களில் ஒரு குஞ்சு, குழந்தையாவது தப்பிப் பிழைக்குமா என்பது சந்தேகந்தான். நீயும் உன் குழந்தையும் தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எங்களை நம்பி உடனே புறப்படவேண்டும். முதலில் உன் குழந்தையை இவளோடு அனுப்பிவிட வேண்டும். பிறகு நீ என்னோடு......"

"அப்பா! நான் வர முடியாது. குழந்தையை வேண்டுமானல் உங்களோடு அனுப்புகிறேன். அவர் இங்கே வந்து என்னைத் தேடினல்?......"

"பைத்தியக்காரப் பெண்ணே! 'அவர்' என்று உன் புருஷனைத்தானே சொல்லுகிருய்? அவன் ஒரு பரம முட்டாள்! இப்பேர்ப்பட்ட சமயத்தில் உன்னைத் தனியாக விட்டுவிட்டுப் போயிருக்கிருன், பார்!"

"அம்மா! நீங்கள் எனக்கு உதவி செய்ய வந்ததற்காகச் சந்தோஷம்.

ஆனால் என் புருஷனைப்பற்றி யாரும் குறைவாகச் சொல்வதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது......"

"சரி, சரி! நீ ஆச்சு, உன் புருஷன் ஆச்சு, உன் அப்பா ஆச்சு! எப்படி யாவது போய்த் தொலையுங்கள். உன் குழந்தையை அனுப்புவதாகச் சொன்னாயே? அதையாவது செய்! சீக்கிரம் அவளை எழுப்பு!......அதோ!......"

"ஆகா! நரக வாசல் திறந்தாகி விட்டது!" என்றார் மௌல்வி சாகிபு.

தூரத்தில் திடீரென்று பயங்கர மான கூச்சல்—ஊளைச் சத்தங்கள் கேட்டன. கரிய உருவங்கள் கையில் தீவர்த்திகளைப் பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடுவது தெரிந்தது.

"சீதா! இனி ஒரு நிமிஷமும் தாம திப்பதற்கில்லை. வஸந்தியை உடனே எழுப்பு!" என்றார் மௌல்வி.

சீதா தயங்கித் தத்தளித்து நின்றாள். "குழந்தையை எப்படிக் கொடுப்பேன்? அவர் வந்து கேட்டால்...?"என்றாள்.

"சீதா! நான் உன்னைப் பெற்று வளர்த்த தகப்பன். என்னைக்காட்டி லும் உன்னிடம் அதிக அன்புள்ளவள் இந்த ரஸியா பேகம். இவளை நம்பி உன் குழந்தையைக் கொடு! ஒன்றும் கெடுதல் வராது!"

"நீயும் இவரும் இந்த ஊரிலேயே இருந்து அழிந்து போய்விட்டால் கூட நான் எப்படியாவது உன் புருஷனைத் தேடிப் பிடித்துக் குழந்தையைப் பத்திரமாய் ஒப்பித்து விடுகிறேன்" என்றாள் ரஸியாபேகம்.

சீதாவின் பார்வை சுவரில் மாட்டி யிருந்த காந்திமகான் படத்தின்மீது விழுந்தது. ஜன்னல் வழியாக வந்த மங்கலான வெளிச்சத்தில் காந்திஜி யின் முகத்தோற்றம், "நம்பிக் கொடு! உனக்கு அதனால் கெடுதல் வராது!" என்று சொல்லுவதுபோலிருந்தது.

சீதா கால் கைகள் பதற ஓடிச் சென்று, கட்டிலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கிய குழந்தையைத் தட்டி எழுப்பினாள். வஸந்தி எழுந்து உட்கார்ந்து கொண்டு மிரண்ட கண் களால் தனக்கு முன்னால் நின்றவர்களை விழித்துப் பார்த்தாள்.

குழந்தையைத் தட்டி எழுப்பிய அதே நிமிஷத்தில் சீதா அவளிடம் என்ன சொல்ல வேண்டும் என்பது பற்றித் தீர்மானித்திருந்தாள்.

"வஸந்தி! டில்லியில் அப்பாவுக்கு உடம்பு சரிப்படவில்லையாம். நாம் உடனே டில்லிக்குப் புறப்பட்டுப் போகவேண்டும்!" என்றாள்.

"சரி, அம்மா! இதோ நான் தயார்!" என்று சொல்லிக் கொண்டே கட்டிலி லிருந்து வஸந்தி குதித்து வந்தாள்.

ரஸியா பேகம் "என் கண்ணே!" என்று அவளைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

"ஓகோ! இந்த மாமியை எனக்குத் தெரியும். அன்றைக்கு மார்க்கெட்டில் ஆப்பிள் பழம் வாங்கிக் கொடுத்து விட்டு முத்தம் இட்டீர்களே?" என் றாள் வஸந்தி.

"ஆமாண்டி கண்ணே! உனக்கு ஞாபகம் இருக்கிறதே!"

"நீங்களும் டில்லிக்கு வரப்போகி றீர்களோ?" என்று கேட்டாள்.

"ஆமாம்; நானும் டில்லிக்குத்தான் போகிறேன்!" என்று சொன்னாள் ரஸியா பேகம்.

"வஸந்தி! நீ அம்மா சொல்லுகிற படி கேட்கிற சமர்த்துக் குழந்தை தானே? நீ இந்தப் பாட்டியுடன் இப் போதே புறப்பட்டு ரயில்வே ஸ்டேஷ னுக்குப் போக வேண்டும். நான் வீட் டுக் கதவுகளை யெல்லாம் ஜாக்கிரதை யாகப் பூட்டிக் கொண்டு இந்தத் தாத்தாவுடன் பின்னால் வந்து சேரு கிறேன்!" என்றாள் சீதா.

"நான் அம்மா சொல்கிறபடி கேட் கிற சமர்த்துக் குழந்தைதான். ஆனால் நீ மட்டும் இனிமேல் பொய் சொல் லாதே!" என்றாள் வஸந்தி.

மூவரும் திகைத்து நின்றார்கள்.

"நான் முன்னாடியே விழித்துக் கொண்டு விட்டேன். நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் கேட்டுக் கொண்டுதா னிருந்தேன். தூங்குவது போலப் பாசாங்கு செய்தேன்" என் றாள் வஸந்தி.

சீதாவுக்கு ஒரு பக்கம் கோபம் வந் தது; ஒரு பக்கம் சிரிப்பும் வந்தது.

"சரி; இப்போது என்ன சொல் கிறாய்? போகிறாயா? மாட்டாயா?"

"நான் போகிறேன், அம்மா! கட் டாயம் போகிறேன். நீயும் வந்து விடு

என்றுதான் சொல்லுகிறேன். அப்பா நம்மை இங்கே விட்டுவிட்டுப் போனது பெரிய பிசகு! நீ இங்கே இருக்கிறேன் என்று சொல்வது அதைவிடப் பெரிய பிசகு!" என்றாள் வஸந்தி.

"அப்படிச் சொல்லடி, என் கண்ணே!" என்று ரஸியா பேகம் குழந்தையை முத்தமிட்டாள்.

"இப்போது என்ன சொல்கிறாய், சீதா! நாங்கள் சொன்னதைத்தான் கேட்கவில்லை; குழந்தை சொல்வதை யாவது கேட்கிறாயா?" என்றாள்.

"அம்மா வராவிட்டால் நானும் வரமாட்டேன்!" என்றாள் வஸந்தி.

"சரி! வேறு வழியில்லை. கடவுள் விட்ட வழி யாகட்டும்! நானும் வருகிறேன்" என்றாள் சீதா.

தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்த பயங்கரமான குழப்பச் சத்தங்கள் நெருங்கி வந்துகொண்டிருந்தன.

அப்போது மௌல்வி சாகிபு வஸந்தியைப் பார்த்து, "நீ ரொம்ப சமர்த்துக் குழந்தை, வஸந்தி! நாம் எல்லாரும் சேர்ந்து தப்பித்துச் செல்லப் பார்ப்பது அபாயம். நீயும் இந்தப் பாட்டியும் முதலில் போங்கள்; கால் மணி நேரத்துக்கெல்லாம் உன் அம்மாவை அழைத்துக் கொண்டு நான் வருகிறேன்" என்றார்.

"சரி!" என்றாள் வஸந்தி.

அடுத்த நிமிஷம் ரஸியா பேகமும் வஸந்தியும் மச்சுப்படியில் இறங்கித் துரிதமாகச் சென்றார்கள்.

"அப்பா!"

"சீதா!"

"சற்று முன்னால் ஒரு பெரிய பாதகத்திலிருந்து தப்பிப் பிழைத்தேன். நீங்கள் வந்து மாடித் தாழ்வாரத்தில் ஜன்னல் ஓரத்தில் நின்றபோது கைத் துப்பாக்கியால் உங்களைச் சுட்டுவிட நினைத்தேன். அவர் எனக்குக் குறி பார்த்துச் சுடுவதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்......"

"ஏன் கடவில்லை, அம்மா!"

"காந்தி மகானுடைய திருமுகம் என் மனக் கண் முன்னால் தோன்றிச் சுடாமல் தடுத்தது. சுட்டிருந்தால் எப்படிப்பட்ட பாதகத்தைச் செய்திருப்பேன்! பெற்ற தகப்பனாரை..."

"பெற்ற தகப்பனாரா யிருந்தாலும் நான் செய்திருக்கும் பாவங்களுக்கு அது தகுந்த தண்டனையா யிருந்திருக்கும். ஆனால் அத்துடன் அது போயிராது. இந்த வீட்டின் பேரில் சிலர் கண் வைத்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அவர்கள் ஓடிவந்திருப்பார்கள். நீயும் குழந்தையும்..."

"அப்பா! இப்போது நாம் என்ன செய்யலாம்? நாமும் புறப்பட வேண்டியதுதானே?"

"இல்லை, சீதா! நாம் உடனே புறப்படுவதற்கில்லை. கொஞ்ச நேரம் இங்கே இருந்தாக வேண்டும். ஒரு நாடகமும் நடத்தியாக வேண்டும். யாரும் தப்பித்துப் போகாதபடி இந்த ஊரைச் சுற்றிக் காவல் போட்டிருக்கிறார்கள். காவல் வேலை ஒப்புக் கொண்டிருப்பவர்களில் நான் ஒருவன். என்னுடைய இடத்துக்குப் போய் நான் காவல் இருக்கிறேன். துவேஷப் பிசாசுகள் இந்த வீட்டையும் தாக்குவதற்கு வருவார்கள். அவர்களுக்கெல்லாம் முதலில் நான் வருவேன். அந்தச் சமயத்தில் நான் எப்படி நடந்து கொண்டாலும் நீ அதிசயப்படக் கூடாது! பயப்படவும் கூடாது. நான் கத்தியினால் உன்னைக் குத்துவதற்கு வந்தால்கூடப் பயப்பட வேண்டாம். முடியுமானால் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்து விட்டது போல் பாசாங்கு செய்! இதெல்லாம் எதற்காக என்று என்னை இப்போது கேட்காதே! தப்பிப் பிழைத்த பிற்பாடு எல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன். இந்தச் சமயம் நம்முடைய யுக்தி புத்திகளினால் தான் பிழைக்கவேண்டும்......"

குழப்பமும் கூச்சலும் மேலும் நெருங்கி வந்துவிட்டன. ஆங்காங்கே வீடுகள் தீப்பற்றி எரியத் தொடங்கின. எரியும் வீடுகளிலிருந்து உண்டான கோரமான வெளிச்சத்தில் கையில் கத்தி, கோடரி, அரிவாள் முதலிய ஆயுதங்களுடன் கரிய உருவங்கள் பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டு ஓடிய காட்சி தென்பட்டது.

"சீதா! நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். கடவுள் உன்னை நிச்சயமாகக் காப்பாற்றுவார்!" என்று சொல்லிவிட்டு மௌல்வி சாகிபு விரைந்து கீழே சென்றார்.



சீதா காத்துக் கொண்டிருந்தாள். காத்திருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக நீண்டு அவளை வேதனைப் படுத்தியது.

குழப்பமும் கூச்சலும் தீயும் புகையும் அழுகையும் பிரலாபமும் நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருந்தன.

சீதாவுக்குத் தான் குழந்தைப் பிராயத்தில் பம்பாயில் ஆனந்தமாகக் கழித்த நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன. அம்மாவும் அப்பாவும் தன்னை மடியில் வைத்துக் கொஞ்சிய நாட்கள் நினைவு வந்தன. அந்தத் துரைசாமி ஐயர்தானா இப்போது இப்படி இருக்கிறார்? நம்ப முடியவில்லையே? ஆயினும் நம்பித்தான் ஆகவேண்டும்.

திடீரென்று ராஜம்பேட்டை ஞாபகம் வந்தது. காலையில் வண்டி குடை கவிழ்ந்து தான் ஓடையில் விழுந்ததும் சூரியா தன்னைக் காப்பாற்றுவதற்காக ஓடிவந்து கரையில் நின்ற தோற்றமும் மனக்கண் முன் தோன்றின. அந்தச் சூரியா இப்போது எங்கே இருக்கிறான்? என்ன செய்கிறான்? தாரிணியின் காதலில் மதிமயங்கிக் கிடக்கிறான் போலிருக்கிறது!

ஆகா! காதல் என்ற ஒரு வார்த்தை! எந்த மூடனோ சிருஷ்டி செய்தது! அதை வைத்துக்கொண்டு கதை எழுதுகிறவர்கள் புத்தகம் புத்தகமாய் எழுதித் தள்ளுகிறார்கள். என்ன பொய்! என்ன ஏமாற்றம்!

ஆனால் அடியோடு பொய் என்றும் ஏமாற்றம் என்றும் சொல்லிவிட முடியுமா? ராஜம்பேட்டையில் லலிதாவைப் பார்க்க வந்த சௌந்தரராகவனைத் தான் பார்த்ததும் காதல் கொண்டதும் பொய்யாகுமா?—இருந்தாலும் லலிதாவுக்கு அப்படி ஒரு துரோகம் தான் செய்திருக்கக்கூடாது.

அந்தத் துரோகத்தின் பலன்தான் பிற்பாடு வாழ்க்கை முழுதும் தான் எத்தனை எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளாகும்படி ஆயிற்று!

வாழ்க்கை முழுதும் எத்தனை கஷ்டப் பட்டால்தான் என்ன? சென்ற ஒரு வருஷ காலம் இந்த அழகான பாரு சால நாட்டில் தான் வாழ்ந்த இன்ப வாழ்வுக்கு உலகத்தில் வேறு என்ன இன்பம் இணையாக முடியும்? அத்தகைய இன்ப வாழ்வுக்கு இப்போது இறுதி வந்துவிட்டது போலிருக்கிறதே!............இதோ சமீபத்தில், வீட்டண்டையில் நெருங்கி வந்துவிட்டார்கள் போலிருக்கிறதே! * * *

அப்புறம் நடந்த சம்பவங்கள் வெகு துரிதமாக நடந்தன. அவையெல்லாம் சீதாவுக்குத் தன்னுடைய சொந்த அநுபவங்களாகவே தோன்றவில்லை. அதி துரிதமான 'டெம்போ'வுடன் எடுக்கப்பட்ட ஸினிமாவில் பார்க்கும் காட்சிகளைப் போலவே தோன்றின. ஒரு நிமிஷம் அந்த வீட்டு வாசலில் பயங்கரமான கூச்சல் கேட்டது. மறு நிமிஷம் வாசற் கதவைக் கோடரிகளால் பிளக்கும் சத்தம் கேட்டது. திடு திடு வென்று பலர் உள்ளே நுழைந்தார்கள். மச்சுப் படிகளின் பேரில் தடதட வென்று ஏறி வந்தார்கள். அவர்களுக் கெல்லாம் முதலில் மௌல்வி சாகிபு வந்தார். அவர் கையில் ஒரு கூரிய கத்தி பளபள வென்று மின்னியது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் பக்கத்தில் வந்து கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளினார். பிறகு அவனை ஒரு காலால் மிதித்துக் கொண்டு திரும்பி நின்றார். பின்னால் வந்தவர்களைப் பார்த்து "இவள் என்னுடையவள்!" "இவள் என்னுடையவள்!" என்று கூச்சலிட்டார். பின்னால் வந்த பயங்கர ராட்சஸர்கள் சிறிது தயங்கி நின்றார்கள். ஒருவன் சிரித்தான். இன்னொருவன் "கிழவனுக்கு வந்த கேட்டைப் பார்!" என்றான். மற்றொருவன் அருகில் பாய்ந்து வந்து கிழவனைக் குத்திப் போடுவதாகச் சொல்லிக் கொண்டு கத்தியை ஓங்கினான். அவனைத் தடுப்பதற்காக வந்த இன்னொருவன் காலால் சீதாவை ஒரு மிதி மிதித்தான். ஆயினும் சீதாவின் தகப்பனார் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. இதற்குள்ளே ஒருவன் "நெருப்பு! நெருப்பு!" என்றான். "ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்று மௌல்வி சாகிபு கத்தினார். வெளியிலிருந்து அதே சமயத்தில் புகை திரள் திரளாகக் கிளம்பி மேலே சுழன்றுவரத் தொடங்கியது. அறைக்குள் வந்த மனிதர்கள் திரும்பி ஓடத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவனுடைய கண்ணில் சுவரில் மாட்டியிருந்த மகாத்மாவின் படம் தென்பட்டது. அதை அவன் எட்டி எடுத்துத் தரையில் ஓங்கி எறிந்தான். படத்தின் கண்ணாடி உடைந்த சத்தம் படார் என்று கேட்டது. ஒரு கண்ணாடித் துண்டு மௌல்வி சாகிபுவின் முழங்காலுக்குக் கீழே சதையில் பாய்ந்தது. அந்த இடத்திலிருந்து குபுகுபு வென்று இரத்தம் பெருகியது. மனிதர்கள் தடதடவென்று மச்சுப்படியில் இறங்கி ஓடினார்கள். வெளியே புகைத் திரளுக்கு மத்தியில் தீயின் ஜுவாலை தென்பட்டது. இந்தச் சமயத்தில் சீதா தன் பிரக்ஞையை இழக்கத் தொடங்கினாள். 'ஓ' என்ற ஓசை மட்டும் சிறிது நேரம் கேட்டுக்கொண்டிருந்தது. அது கடலின் அலை ஓசையை நினைவூட்டியது. அந்தக் கடைசி நினைவோடு சீதா மூர்ச்சையடைந்தாள்.

* * *

நரகத்தில் எல்லாத் திசையும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. திரள் திரளாகப் புகை கிளம்பி நாலா பக்கமும் பரவிக் கொண்டிருந்தது. யம கிங்கரர்களும் பேய்களும் பூதங்களும் கூக்குரலிட்டுக் கொண்டு அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள். வயது சென்ற ஸ்திரீகளையும் பச்சைக் குழந்தைகளையும் அவர்கள் பிடித்துக் கொண்டு வந்து எரிகிற தீயில் தள்ளினார்கள். இந்த நரகத்தில் உள்ள போலீஸ்காரர்கள் வெகு விசித்திரமானவர்கள்! அவர்கள் கையில் துப்பாக்கி வைத்திருந்தார்கள். நெருப்பில் விழாமல் தப்பி ஓடுகிறவர்களைக் குறி பார்த்து அவர்கள் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளினார்கள்.

இப்படிப்பட்ட நரகத்தில் நல்ல பூதம் ஒன்று சீதாவைத் தூக்கிக் கொண்டு இருண்ட சந்துகள்-பொந்துகள் வழியாகப் போய்க்கொண்டிருந்தது. அது ஆங்காங்கு நின்று

அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு ஜாக்கிரதையாகச் சென்றது. சில சமயம் மிக மெள்ள மெள்ள நடந்தது; சில சமயம் ஒரே தாண்டாகத் தாண்டி ஓடிற்று. சில சமயம் சுவரில் ஒட்டிக் கொண்டு சென்றது; சில சமயம் மரங்களின் பின்னால் ஒளிந்து மறைந்து பாய்ந்து பாய்ந்து சென்றது.

இவ்விதம் அந்தப் பூதம் நீண்ட நேரம் போய்க்கொண்டேயிருந்தது. நரக லோகத்தில் உள்ள இருண்ட சந்துகளுக்கும் பொந்துகளுக்கும் முடிவே கிடையாதோ என்று சீதா எண்ணும்படியாக அந்த நல்ல பூதம் சீதாவைத் தோளில் தூக்கிக்கொண்டு நெடு நேரம் நடந்து கொண்டிருந்தது.

* * *

ஆகா! கடைசியில் நரகத்தைத் தாண்டியாயிற்று போலும்! வெப்பமான புகையும் தீயின் அனலும் இப்போது முகத்தில் வீசி எரிச்சல் உண்டாக்கவில்லை. குளிர்ந்த காற்று முகத்தில் பட்டு இதந்தருகிறது. நரகத்தின் கோர சத்தங்களும் இப்போது வெகு தூரத்தில் கேட்கின்றன! நரக வாசலைக் கடந்து சொர்க்கத்துக்குள் தான் புகுந்தாயிற்று போலும்!

சீதாவுக்கு நினைவு வரத் தொடங்கியது. மூடியிருந்த கண்ணிமைகளைக் கஷ்டப்பட்டுத் திறந்தாள். எண்ணிறந்த வெள்ளி நட்சத்திரங்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பது கண்ணில் பட்டது. ஆகா! வான வெளியில் சொர்க்க பூமியை நெருங்கி இப்போது போய்க் கொண்டிருக்கிறோம் போலும்! புஷ்ப விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோம் போலும்! தன் நெற்றியை மிருதுவாகத் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கும் கை தன்னை நரகத்திலிருந்து காப்பாற்றிய தேவதூதனின் திருக்கரமாகவே இருக்க வேண்டும்!

இதெல்லாம் வீண் பிரமை என்று சீக்கிரத்திலே சீதாவுக்குத் தெரிந்து போயிற்று. கடகடவென்ற கட்டை வண்டியின் சத்தமும் வண்டி ஆட்டத்தினால் உடம்பு ஆடி உண்டான வலியும் நாம் பூமியில்தான் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோம் என்ற உணர்வைச் சீதாவுக்கு உண்டாக்கிற்று. நெற்றியைத் தடவிக்கொண்டிருக்கும் கை மௌல்வி சாகிபுவின் கை; அதாவது தன் தந்தையின் கை.

"அப்பா!"

"சீதா! விழித்துக் கொண்டாயா?"

"ரொம்ப நேரம் தூங்கி விட்டேனா?"

"பொழுது விடியப் போகிறது."

"குழந்தை வஸந்தி......?"

"குழந்தை பத்திரமாயிருப்பாள்; கவலைப்படாதே! உன் சித்தி ரொம்ப கெட்டிக்காரி. இதைப்போல் எத்தனையோ பார்த்துச் சமாளித்தவள்."

சீதா சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, "அப்பா! இது என்ன வண்டி?" என்று கேட்டாள்.

"இது பாஞ்சால நாட்டின் புராதன வண்டி, சீதா! கோவேறு கழுதை பூட்டிய வண்டி!"

"வண்டி ஓட்டுகிறவன் யார்?"

"ஒரு மாதமாக என்னிடம் வேலை செய்த பையன்."

"அவனை நம்பலாமா?"

"இந்தக் காலத்தில் யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்?"

"இந்த வண்டி ஏது?"

"விலைக்கு வாங்கினேன். இந்த மாதிரி சந்தர்ப்பத்துக்கு உபயோகமாயிருக்கட்டும் என்றுதான்!"

"இந்தமாதிரியெல்லாம் நடக்கும் என்று உங்களுக்கு முன்னாடியே தெரியுமா என்ன?"

"ஒரு மாதிரி தெரியும். ஆனால் இவ்வளவு பயங்கரமாயிருக்கு மென்று எதிர்பார்க்கவில்லை."

சற்றுப் பொறுத்துச் சீதா, "இந்த வண்டியில் இன்னும் ரொம்ப நேரம் போகவேண்டுமா?" என்றுகேட்டாள்.

"ஏன், உடம்பு வலிக்கிறதா?"

"ஆமாம்; உடம்பை வலிக்கிறது."

"வலிக்காமல் என்ன செய்யும்? அந்த ராட்சஸர்களும் நானும் உன்னை எப்படி மிதித்துவிட்டோம்? கொஞ்சம் பொறுத்துக்கொள், சீதா! சீக்கிரத்தில் வண்டியை நிறுத்தச் சொல்

கிறேன். அதோ தெரிகிறதே, அந்தப் பாறையண்டை போனதும் பாறை மறைவில் வண்டியை நிறுத்தலாம்!'' என்றார் மௌல்வி சாகிபு.

சீதா எழுந்து உட்கார்ந்தாள். அது மேலே கூண்டு இல்லாத திறந்த வண்டி. ஆனால் நாலு பக்கமும் ஒரு முழ உயரம் அடைப்பு இருந்தது. அடைப்புக்கு மேலாகப் பார்த்தாள். சாலையின் இருபுறமும் குட்டையான ஈச்சமரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. சற்றுத் தூரத்தில் ஒரு மொட்டைப் பாறை பிரம்ம ராட்சதனைப் போல் நிமிர்ந்து நின்றது.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுச் சீதா தன் தந்தையை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் மனதிற்குள் அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த கேள்வி அப்போது வெளியில் வந்தது.

"அப்பா! நீங்கள் எதற்காக முஸ்லிம் மதத்தில் சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

தந்தை மௌனமாயிருந்தார்.

"நான் கேட்டது தவறாயிருந்தால் மன்னியுங்கள். எதற்காகக் கேட்டேன் என்றால், உங்களுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை உண்டா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான். கடவுள் ஒருவர் இருந்தால் இந்தமாதிரி கஷ்டங்களையெல்லாம் ஜனங்களுக்கு எதற்காகக் கொடுக்கிறார்?'' என்றாள் சீதா.

"இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் கடவுள் உண்டா என்ற சந்தேகம் யாருக்கும் தோன்றக் கூடியதுதான். அந்த விஷயத்தை நீ மகான்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் முதலில் நீ கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லப் போகிறேன். எப்படி ஆரம்பிப்பது என்றுதான் யோசித்தேன். முதலிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றையும் சொல்லிவிடப்போகிறேன். சீதா! என்னுடைய கதையைத் தவிர முக்கியமான இரகசியம் ஒன்றையும் உன்னிடம் சொல்லப் போகிறேன். எப்போதாவது தாரிணியைச் சந்திக்கும்படி நேர்ந்தால்......''

"அப்பா! தாரிணிக்கும் எனக்கும் ஏதாவது உறவு உண்டா?'' என்று சீதா ஆவலுடன் கேட்டாள்.

"அதைத்தான் சொல்லப் போகிறேன்'' என்றார் சீதாவின் தந்தை.



சென்னை சர்க்காரின் விளம்பர வரி மசோதா ஸெலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. "ஸெலக்ட் கமிட்டி ஆலோசனையின்போது அதில் உள்ள ஆட்சேபகரமான பகுதிகள் பல நீக்கப்படலாம்'' என்ற நம்பிக்கையைப் பல எம். எல். ஏ.க்கள் வெளியிட்டார்கள்.

மனிதன்

பகீரதன்

"அட மனுஷா! நேற்று சாயங்காலத்திலிருந்து உம்மைத் தேடிக்கொண்டிருக்கிறேனே, எங்கே போயிருந்தீர்?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் என் 'பிரண்ட்' ரகுநாதன்!

"ஒரு மனுஷனைப் பார்க்கத்தான் போயிருந்தேன்!" என்றேன்.

"அந்த மனுஷ்யனிடம் ஏதாவது கடன் கேட்கப் போனீரா? நான் ஒரு பிரண்ட் இருக்கிறேனே, என்னையும் அழைத்துப் போயிருக்கக் கூடாதா!" என்றார்.

"கடன் கேட்கப் போகவில்லை. அந்த மனிதனைப் பார்த்துவிட்டு வருவதற்குப் போயிருந்தேன்" என்றேன்.

"அப்படிப்பட்ட மனிதன் யாரய்யா அது?—எனக்குத் தெரியாமல் நீர் மட்டும் பார்க்க வேண்டிய மனிதன்?" என்றார்.

"ஆமாம், உமக்குத் தெரியாமல் பார்க்க வேண்டிய மனிதன்தான். அந்த மனிதனைப் பார்ப்பதற்குக் கொஞ்சம் கலா ரசனை வேண்டும். உமக்குத்தான் அந்த இனம் பூஜ்யம் ஆயிற்றே!" என்றேன்.

"ஓஹோ! நாடகத்துக்குப் போய்விட்டு வந்தேன் என்று ஒரு வார்த்தையில் சொல்லியிருக்கக் கூடாதோ? இப்படிச் சுற்றி வளைத்துப் பேசித் திரை அடித்து விட்டீரே! போகட்டும், நாடகம் எப்படியிருக்கிறது? சொல்லும்!" என்று கேட்டார்.

"கேட்பானேன்? டி. கே. எஸ். சகோதரர்கள் எதைத் தொட்டாலும் அது வெற்றிதான். 'மனிதன்' அவர்களுடைய வெற்றியின் சிகரம்" என்று சொன்னேன்.

• • •

மலையாள தேசத்தில் புகழ்பெற்று விளங்கி வரும் மனுஷ்யன் என்ற நாடகத்தை நாடகக் கலைஞர் ஸ்ரீ டி.கே. ஷண்முகம் ஒரு முறை பார்த்தார். அந்த நாடகத்தின் அமைப்பும் முக்கிய பாத்திரமாக நடித்த ஸ்ரீ அகஸ்டின் ஜோஸப் என்பவரின் நடிப்பும் அவரை மிகவும் கவர்ந்துவிட்டன. ஆகவே 'மனுஷ்யன்' நாடகத்தைத் தமிழ்ப்படுத்தி நடிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டார். தமிழாசிரியர் ஸ்ரீ ஆதிமூலம் அவர்களும் அவருடைய மாணக்கர் ஸ்ரீ சோமசுந்தரமும் நாடகத்தை மலையாளத்திலிருந்து தமிழ்ப் படுத்திக் கொடுத்தார்கள். டி. கே. எஸ். சகோதரர்கள் அந்த நாடகத்தை இப்போது நடித்துக் கொண்டு வருகிறார்கள்.



ப. ஆதிமூலம்
(நாடகத் தமிழ் ஆசிரியர்)

நாடகத்தில் வரும் சம்பாஷணைகள் மிகவும் சக்தி வாய்ந்த தமிழ் நடையில் அமைந்திருக்கின்றன என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். சம்பாஷணையைக் கையாளும் பாத்திரங்களும் மிக அற்புதமாகக் கையாளுகிறார்கள். ஆற்றல் நிறைந்த தமிழ்ச் சொற்கள் சந்தர்ப்பத்துக்கேற்ற உணர்ச்சியோடு கலந்து கணீர் கணீர் என்றும் பளீர் பளீர் என்றும் வருகின்றன. கதாபாத்திரங்கள் ஒருவரை யொருவர் குறுக்கிட்டு வாதமிடும்போது பட்டாக் கத்திகள் ஒன்றையொன்று தாக்குவதுபோல் தோன்றுகிறது. கையாண்டிருக்கும் தமிழ் நடையின் சக்தியும் சம்பாஷணைத் திறனும் இந்த நாடகத்தின் சிறப்புக்கு முக்கியமான காரணங்கள் ஆகும்.

கதையின் போக்கு சாதாரண மனிதர்களிடம் உள்ள கீழான மிருக உணர்ச்சிகளையும் மேலான தெய்வீக உணர்ச்சிகளையும் எடுத்துக் காட்டும் முறையில் அமைந்திருக்கிறது. வயது சென்றவர்கள் இரண்டாம் தாரம் மணம் புரிவதில் உள்ள இடைஞ்சல்கள், கலியாணமான பிறகு இளம் மனைவியைத் தனியே விட்டு விட்டுக் கணவன் தூரதேசம் போவதிலுள்ள இன்னல்கள், பரதேசிக் கலைஞனைக் குடும்பத்துக்குள்ளே விடுவதின் விளைவுகள், பணத்துக்கும் பருவகால உணர்ச்சிக்கும் ஆளாகி மனிதர்கள் செய்யும் பாதகங்கள் ஆகிய இவற்றுடன், தயாளகுணமும் கடமைப் பற்றும் உள்ளவர்களின் தன்னலமற்ற சேவையின் பெருமையும்



சாவித்திரி



கலைஞன்



சரளா

சேர்ந்து பொது மக்களின் மனதைப் பெரிதும் கவரும் முறையில் நாடகக் கதை மேலே மேலே செல்கிறது.

இந்தக் கதை அமைப்போடு டி. கே. எஸ். சகோதரர்களின் புது டெக்னிக், நடிப்புத் திறன் ஆகியவை கலந்து பார்ப்பவர்களை மெய் மறக்கச் செய்கின்றன. நாடகத்தில் யாராவது கோபப்பட்டால் அவர்களுடன் சேர்ந்து நாமும் கோபப்படுகிறோம். நாடகத்தில் யாராவது கண்ணீர் விட்டால் நம்முடைய கண்களிலும் கண்ணீர் துளிக்கிறது. சில கட்டங்களில் நடிகர்கள் ஒரு சிறு ஹாஸ்ய வெடியைத் தூக்கிப் போட்டுவிட்டுச் சும்மா நிற்கிறார்கள்; சபையோர் கொட்டகை அதிரும்படி சிரித்து மகிழ்கிறார்கள்.

நாடகத்தில் வரும் ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான கண்ணுக்கினிய பின்னணி ஜோடனைகள். இந்தத் துறையில் கையாண்டிருக்கும் நவீன உத்திகளின் திறமையை நாடகத்துக்குச் சென்று நேரில் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

சின்னஞ் சிறு நாடகமேடையில் பிரம்மாண்டமான கப்பல் அலைமோதும் கடலிலே புகை விட்டுக் கொண்டு போகிறது. ஆகாய விமானம் வான வீதியிலே விர்ரென்று பறக்கிறது. ரயில் வண்டி திடுதிடென்று நடுநடுக்கும்படி சத்தம் போட்டுக் கொண்டு ஓடுகிறது. பாம் பாம் என்று அலறிக்கொண்டு மோட்டார் கார் ஒருவர் மீது மோதுகிறது.

மலையடிவாரத்தில் புஷ்பங்கள் பூத்துக் குலுங்குகின்றன. புள்ளினங்கள் பாடிக் கொண்டே கூண்டுக்கு வருகின்றன. பூர்ண சந்திரன் உதயமாகிறான். யாரையும் மயக்கி மதியிழக்கச் செய்யும் சூழ்நிலையை உண்டாக்கும் இந்தக் காட்சியை மிகத் திறமையாகத் தயாரித்திருக்கிறார்கள்.


* * *

காட்சி ஜோடனைகளை விட்டுக் கதாபாத்திரங்களிடம் வருவோம். கதையில் ஓவியர் ராஜுவாகத் தோன்றும் ஸ்ரீ டி. கே. ஷண்முகத்தின் நடிப்புத் திறமையைப் பாராட்டுவதில் அர்த்தமில்லை. இன்றைய தினம் தமிழ்நாட்டிலே ஸ்ரீ டி. கே. ஷண்முகம் நடிப்புக் கலையில் தலை சிறந்து விளங்குகிறார் என்று சொல்வது மிகையாகாது.

கதாநாயகி சாவித்திரி ஓவியக் கலைஞன் ராஜுவுடைய ஆசை வார்த்தைகளில் மயங்கியும் பருவகாலக் கோளாறின் கேட்டினாலும் தன் கற்பை இழந்து விடுகிறாள். (அவளுடைய கணவன் டாக்டர் சுகுமார் டில்லியில் அகதிகளுக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கும்போது இந்த அவகேடு நடந்து விடுகிறது.) கற்பை இழந்த கதாநாயகியின் மீது அருவருப்பு உண்டாவது தான் இந்திய தேசத்தின் பண்புக்கு உகந்தது. ஆனால் இந்தக் கதாநாயகி சாவித்திரி பிற்பாடு பச்சாத்தாபப்படும்போது வெளியாகும் தலை சிறந்த நடிப்புத் திறமையானது அவளிடம் சபையோருக்கு ஓரளவு அனுதாபம் உண்டாகும்படி செய்து விடுகிறது.

சாவித்திரியைக் கெடுத்த கலைஞன் நாடோடியாக அலையும் போது புதுடில்லியில் சாவித்திரியின் கணவன் டாக்டர் சுகுமாரனுடைய காரில் அடிபட்டு விழுகிறான். கால் உடைந்த ராஜுவை டாக்டர் குணப்படுத்தி வருகிறார். அப்பொழுது டாக்டரின் விருப்பப்படி தான் செய்த பாவச் செயலைச் சொல்லிக் கொண்டு வரும்போதே டாக்டர் சுகுமாரன்தான் சாவித்திரியின் கணவன் என்று தெரிந்ததும் அவர் காலில் விழுந்து கதறுகிறான். இந்த இடங்களில் ஸ்ரீ ஷண்முகத்தின் நடிப்புத் திறமை மயிர்க்கூச்செறியச் செய்கிறது. செய்யத் தகாத காரியத்தைச் செய்தவன், கலைஞன் என்ற பெயரில் அழியாச் செல்வத்தை அழித்தவன் என்பதையும் மறந்து டாக்டருடன் நாமும் அனுதாபப்படும்படி இருக்கிறது.

கதையில் அநேக சம்பவங்களுக்குக் காரணமாக இருப்பவர் ஒரு ‘பிரண்ட்’. இவர் நாடகம் முழுவதிலும் இங்கிலீஷ் ‘பிரண்’டாகவே விளங்குகிறார். சாவித்திரியின் சித்தியும் அவள் சகோதரனும் செய்யும் சூழ்ச்சிகளை நிறைவேற விடாமல் செய்து சாவித்திரியையும் ஓவியர் ராஜனின் சகோதரி சரஸாவையும் டாக்டர் சுகுமாரனிடம் சேர்க்கிறார். ‘பிரண்ட்’ ராமசாமியின் திறமை வாய்ந்த ஹாஸ்ய நடிப்பு இந்த நாடகத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. தற்காலம் நமது நாட்டிலும் தினசரி வாழ்க்கையிலும் நிகழும் சம்பவங்களைச் சம்பாஷணைகளில் சாமர்த்தியமாகச் சேர்த்துக்கொண்டு குபீர் குபீர் என்று சிரிப்பை வரவழைத்து விடுகிறார். நாடகம் முழுவதும் இவரால் ஒரு விறுவிறுப்பை அடைந்து கொண்டு முன்னேறுகிறது.



‘மனிதன்’

ஓவியர் ராஜனின் சகோதரியாக நடித்தவர் தம்முடைய பாத்திரத்துக்கு ஏற்ப அழகாக நடிக்கிறார். தமிழ்நாட்டின் பண்பாட்டுக்கு உகந்த உத்தமப் பெண் இந்த நாடகத்தில் இவர் ஒருவர்தான். சாவித்திரியின் குடும்பத்துக்கு என்றும் மாறாப் பழிச் சுமையை ஏற்றிவிட்டான் தன் தமையன் என்று தெரிந்ததும் கண்ணகியைப்போல் கோபாவேசம் கொள்கிறார். “கலையின் பெயரால் சாவித்திரியின் அழியாக் கற்பை அழித்து விட்டீர்களே! உங்களுக்குத் தங்கை யென்றும் தாரமென்றும் வித்தியாசமிருக்கிறதா? இந்த வீட்டை விட்டுச் செல்லுங்கள்!” என்று சபித்துத் தன் தமையனை விரட்டுகிறார். தற்கொலை செய்துகொள்ள முயன்ற சாவித்திரியை அவள் கணவனிடம் சேர்க்கிறார். பெண்கள் தைரியமாக வாழலாம் என்று வாழ்ந்து காட்டுகிறார்.



‘பிரண்ட்’

நாடகத்துக்குப் பெயரைக் கொடுத்த மனிதன் டாக்டர் சுகுமாரன். சாவித்திரியின் கணவன் இந்த டாக்டர். தம் மனைவியை விட்டுவிட்டு மேல் படிப்புக்காக லண்டனுக்குச் செல்லுகிறார். நாலு வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்ததும் இந்தியாவின் தலை நகரம் டில்லி அவரை அழைக்கிறது. டில்லியில் கலகத்தால் அவதிப்படும் மக்களுக்குச் சேவை செய்து வருகிறார். இந்தச் சேவையின் பலனாகத் தமக்கு ஏற்படும் இன்னல்களைக் கண்டு மனம் குலையாமல் மனிதனாக நிமிர்ந்து நிற்கிறார். தம் மனைவி சந்தர்ப்பங்களின் விளைவினால் கற்பை இழந்து பச்சாத்தாபத்தில் ஆழ்ந்து பரிதவிக்கிறாள் என்று அறிந்து அவளை மன்னிப்பதற்குத் தயாராயிருக்கிறார். தம் மனைவியின் கற்பைக் கெடுத்த பாதகன் தம்மால் உயிர் கொடுத்துக் காப்பாற்றப் பட்டவன் என்று அறிந்த பிறகும் அவனை அவர் மன்னித்து உதவி செய்யச் சித்தமா யிருக்கிறார். இந்த அற்புதமான செயல்களெல்லாம் சேர்ந்து அவரை ‘மனிதன்’ ஆக்குகின்றன.



சித்தி

•   •   •

ஜூன் மீ 26உ நடந்த ‘மனிதன்’ நாடகத்துக்குத் தலைமை வகித்த “கல்கி” ஆசிரியர் கூறியதாவது:—“டி. கே. எஸ். சகோதரர்களின் தொண்டினால் தமிழ் நாடக மேடை, வங்காளி நாடக மேடையையும் ஆந்திர நாடக மேடையையும் வென்று விட்டது. ‘ஔவையார்’ நாடகத்தைப் பார்த்தபோது இதுதான் இவர்களுடைய நடிப்புக் கலையின் சிகரம் என்று நினைத்தேன். அதற்குப் பிறகு இன்னொரு சமூக நாடகத்தைப் பார்த்தபோதும் அவ்விதமே தோன்றியது. அந்த இரு நாடகங்களையும் இந்த ‘மனிதன்’ நாடகம் மிஞ்சி விட்டது. டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் கலையில் இவ்விதம் மேலே மேலே உயர்ந்துகொண்டு போகிறார்கள். இனிமேல் இவர்களை யாராவது எட்டிப் பிடிக்கிறதா யிருந்தால் ஆகாச விமானத்தில் ஏறித்தான் பிடிக்க வேண்டும்போ லிருக்கிறது!”



சித்தியின் கணவர்

வத்ஸலாவின் வளையல்கள்

கலைப்பித்தன்

எனக்குச் சாந்தாவைப் பார்க்காவிடில் பொழுதே போகாது; அவளுக்கும் அப்படித்தான். அவள் எங்கள் வீட்டிற்கு வருவாள்; இல்லாவிடில் நானே அவள் வீட்டிற்குப் போவேன். பிறகு இருவரும் மணிக் கணக்காக உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். அவள் வீடு அடுத்த தெருவில் இருந்ததால் நாங்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பதற்குச் சௌகரியமாயிருந்தது.

சென்ற மூன்று நாட்களாய் அவள் ஏனோ எங்கள் வீட்டிற்கு வரவேயில்லை. எனக்கும் வேலையிருந்ததால் நானும் அவள் வீட்டிற்குப் போகவில்லை. அவளை இன்றைக்கு எப்படியாவது பார்த்துவிட்டு வருவதென்று புறப்பட்டேன்.

சாந்தா ஹாலில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் ஏனோ வேதனை குடிகொண்டிருந்தது. நான் வந்தது கூடத் தெரியாமல் அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

“என்ன, சாந்தா! யோசனை பலமாக இருக்கிறதே! நான் வந்து நின்று கொண்டிருப்பதுகூடத் தெரியவில்லையே? எங்கள் வீட்டிற்கு ஏன் மூன்று நாட்களாய் நீ வரவில்லை?—சொல்லு, சாந்தா! ஏன் மௌனம் சாதிக்கிறாய்?—ஓகோ! நான் உன்னைப் பார்க்க வரவில்லை என்று கோபமா?”

“இல்லை, லீலா! உன்மேல் கோபமில்லை. அவரைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவருடைய போக்கை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என் மனதிலுள்ளதை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்? அவர் என் மேல் இதுவரை பிரியமாகத்தான் இருந்தார். இப்பொழுது......”

“போடி பைத்தியக்காரி! அவர் எப்பொழுதும் உன்மீது பிரியமாகத்தான் இருப்பார்!” என்றேன் நான்.

“உனக்குத் தெரியாது, லீலா!” என்று சொல்லிக்கொண்டே அவள் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் எழுந்து உள்ளே சென்றாள்.

சாந்தாவுக்கு விவாகமாகிக் கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. இதுவரை அவள் தன் கணவனைப் பற்றி என்னிடம் ஒன்றுமே சொன்னதில்லை. அப்படிப்பட்ட அவள் இன்றைக்கு அவரைப் பற்றிக் குறை கூறியது எனக்கு ஆச்சரியமாகத்தானிருந்தது.

உள்ளே சென்ற சாந்தா, சிறிது நேரத்துக்கெல்லாம் கையில் ஒரு கடிதத்துடன் திரும்பி வந்து, “இதைப் படித்துப் பார், லீலா!” என்றாள்.

அன்புள்ள வத்ஸலாவுக்கு,

உன் அன்புக் கடிதம் கிடைத்தது. நீ நினைப்பது போல் நான் உன்னை மறக்கவேயில்லை. உன்னை மறந்தாலும் நீ எனக்காகச் செய்திருக்கும் சேவையை நான் மறக்க முடியாது. என் இதயத்தில் என்றும் இடம் பெற்றிருக்கும் ஜீவன் ஏதாவது ஒன்று உண்டு என்றால் அது நீயாகத்தான் இருக்க முடியும்......!

கடிதம் முற்றிலும் எழுதப்படவில்லை; குறையாகவே நிறுத்தப் பட்டிருந்தது. நான் அதைப் படித்துவிட்டு மௌனமாகச் சாந்தாவைப் பார்த்தேன்.

“லீலா, அவர் இன்றைக்கு இதை எழுதிக் கொண்டிருந்தார். மறதியிலோ அல்லது



என்ன காரணத்தாலோ கடிதத்தை வைத்து விட்டு ஆபீசுக்குப் போய்விட்டார். இந்த ஆண்களே எப்பொழுதும் இப்படித்தான்! நான் இவர்மீது கொண்டிருந்த விருப்பமெல்லாம் இப்போது வெறுப்பாக மாறி விட்டது. என்மேல் உண்மையான பிரியமிருந்தால் இப்படியெல்லாம் அவர் இன்னொருத்திக்கு எழுதுவாரா? — ஐயோ! எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையே!" என்று புலம்பினாள் சாந்தா.

"அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது, சாந்தா! எதற்கும் நீ அவசரப்படக் கூடாது. பொறுத்திருந்து பார்! சந்தேகம் மிகவும் பொல்லாதது. வீணாக உடம்பை அலட்டிக் கொள்ளாதே! நீ இப்படி நினைப்பதை அவர் அறிந்தால் ஒரு வேளை அவருடைய மனம் புண்பட்டு விடலாம். ஆத்திரத்தால் அறிவிழந்து அவரிடம் ஏதாவது கேட்டு விடாதே! இந்தமாதிரி சந்தேகந்தான் பலருடைய இன்ப வாழ்வைக் கெடுத்துவிடுகிறது. எல்லாம் அறிந்த உனக்கு இதற்கு மேல் நான் என்ன சொல்லுவது?"

"லீலா, நீ ஏதோ எனக்கு ஆறுதல் சொல்ல முடியுமே தவிர, என்னுடைய மன வேதனையை நீ அறிவாயா? என்னைப் போல் உனக்கும் கல்யாணமாகி அவரும் இப்படி நடந்தால் அப்பொழுது தெரியும்! என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், நாளைக்கு அவரிடம் நான் இதைப் பற்றிக் கேட்டுவிடத்தான் போகிறேன். கேட்காமலே அடக்கிவைத்து மனம் புழுங்குவதைவிடக் கேட்டு மனத் தெளிவு அடைவது நல்லதல்லவா?"

சாந்தா என்னுடைய பேச்சைக் கேட்க மாட்டாள் என்று எனக்கு தெரியும். அதற்கேற்றாற்போல் நேரமும் ஆகிவிட்டது. நான் அவளிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

2

அடுத்த நாள் வீட்டு வேலையனைத்தும் முடித்ததும் நான் வழக்கம்போல் சாந்தாவின் வீட்டிற்குச் சென்றேன்.

"லீலா! அவர் இன்னும் வெளியே போகவில்லை. இனிமேல்தான் அதைப் பற்றி அவரிடம் கேட்கப் போகிறேன். அதுவரை நீ இந்த அறையிலேயே உட்கார்ந்திரு; வந்துவிடுகிறேன்!" என்றாள் சாந்தா.



அவள் சொன்னபடியே நான் உட்கார்ந்திருந்தேன். சாந்தாவும் அவள் கணவரும் பேசுவது நன்றாக என் காதில் விழுந்தது.

"உங்கள் அறையில் இருந்ததே, அந்தக் கடிதத்தை யாருக்கு எழுதினீர்கள்?"

"உன்னைப்போல ஒரு பெண்ணுக்குத்தான் எழுதினேன்!"

"அதுதான் தெரிகிறதே! ஆணுக்கு எழுதியிருந்தால் நான் என் அதைப்பற்றி உங்களைக் கேட்கப் போகிறேன்?"

"விளையாடாதே, சாந்தா!"

"என்னுடைய வேதனை உங்களுக்கு விளையாட்டாகத் தோன்றுகிறது போலிருக்கிறது! நீங்கள் பேசுவதைப் பார்த்தால் உங்களுக்கு யாரோ ஒரு கள்ளக் காதலி எங்கேயோ இருக்கிறாள் என்றே நான் நினைக்க வேண்டியிருக்கிறது!"

"சந்தேகமே உன்னுடைய நெஞ்சில் நிறைந்திருந்தால் அதற்கு நான் என்ன செய்வது? உன்னுடைய சந்தேகத்தை வெல்

லாம் நிவர்த்தி செய்ய என்னால் முடியாது. நான் போய் வருகிறேன்!"

சாந்தாவின் கணவர் வெளியே சென்றவுடன் நானும் என் அறையிலிருந்து வெளியே வந்தேன்.

கலங்கிய கண்களுடன் சாந்தா உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அவளிடம் பேசி அவளுடைய துக்கத்தைக் கிளறவிரும்பாமல் நான் உடனே வீடு திரும்பி விட்டேன்.

3

ஒரு வாரம் வரை நான் சாந்தாவின் வீட்டுப் பக்கமே செல்லவில்லை. ஒரு நாள் அவளே என்னைத் தேடிக் கொண்டு வந்தாள். "வா, சாந்தா, வா!" என்றேன் நான்.

"லீலா, உன்னிடம் நான் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்..."

"என்ன விஷயம்?"

"சொல்வதற்குள் அவசரப்படாதே! தட்டான் நேற்று ஒரு ஜோடி கல் விழைத்த வளையல்களைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தான். வளையல்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தன. அவற்றைக் காலையில் அவரிடம் கொடுத்தேன். எனக்குக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் என் கண் முன்னாலேயே அவற்றைப் பார்சல் செய்து தன் 'காதலி'க்கு அனுப்பி வைத்து விட்டார்!"

இதைக் கேட்டதும் அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, அந்தச் சமயம் நான் அவளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக "சாந்தா, நாளை நான் உன் வீட்டுக்கு வருகிறேன். அப்பொழுது எல்லாவற்றையும் பேசிக் கொள்வோமே!" என்றேன்.

அவளும் "சரி" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

• • •

அன்று சாந்தாவின் வீட்டில் நான் உட்கார்ந்திருந்தேன். வீட்டிற்கு முன்னால் குதிரை வண்டியொன்று வந்து நின்றது. அதிலிருந்து கைக் குழந்தையுடன் ஒருவர் இறங்கினார். அவருக்குப் பின்னால் இருபது வயதான பெண்ணொருத்தியும் இறங்கி வந்தாள்.

சாந்தாவின் கணவர் அவர்களைக் கண்டதும் "அப்பாடி! கவலை விட்டது; கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார்!" என்று சொல்லி விட்டுத் தம் மனைவியின் பக்கம் திரும்பி, "பார்த்துக் கொள், சாந்தா! இவள் தான் என் சித்தியின் மகள் வத்ஸலா. சித்தியின் கொடுமையைச் சகிக்க முடியாமல் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். வேலையில்லாமல் திண்டாடினேன். என்னுடைய கஷ்டத்தைப் பார்த்த வத்ஸலா தன்கணவனுக்குக்கூடத் தெரியாமல் தன்னுடைய கை வளையல்களைக் கழற்றிக் கொடுத்தாள். இவளால்தான் வேலையும் கிடைத்து உன்னையும் நான் மணந்துகொள்ள முடிந்தது. இவளுடைய உதவிக்குப் பிரதியுபகாரமாகத்தான் அன்று நான் அந்த வளையல்களைச் செய்து அனுப்பி வைத்தேன். இப்பொழுது உன்னுடைய சந்தேகம் தீர்ந்து விட்டதல்லவா? என்மேல் கோபமொன்றும் இல்லையே!" என்றார்.'

"அண்ணா நான் உனக்காக என் கையிலிருந்த வளையல்களைக் கழற்றிக் கொடுத்தபோது, 'இந்த வளையல்கள் யாருக்கும் போட்டு அழகு பார்ப்பதற்கு அல்ல; என் வாழ்வின் வழியைத் தேடிக் கொள்வதற்கு' என்று நீ சொன்னாயல்லவா? அப்பொழுது நான் வளையல் போட்டு அழகு பார்ப்பதற்கு உனக்கு யாருமில்லை. இப்பொழுது கூடவா இல்லை? உனக்குப் பதிலாக நான் மன்னிக்குப் போட்டு அழகு பார்ப்பதற்காக நீ அனுப்பி வைத்த வளையல்களைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்று சொல்லி, அந்த வளையல்களைத் தன் கையாலேயே அன்போடு சாந்தாவுக்குப் போட்டாள் வத்ஸலா.

வாங்கலாம்!



மனைவி:—கடைக்குப் போய் வந்தீர்களே, நான் சொன்ன சாமான் ஒன்றுகூட வாங்கி வரவில்லையே!

கணவன்:—கையில் பணம் இல்லாமல் என்னத்தை வாங்க முடியும்? சொல்லு, பார்ப்போம்!

மனைவி:— ஏன்? கடன் வாங்க முடியுமே!

ஹாஸ்ய ரஸம்

ஜ. ஏ. சோமாஸ்

நானும் பாலுவும் பல வருஷங்களாக ரயில் நண்பர்கள். ஆனால் ரயிலில் ஆரம்பித்த எங்கள் நட்பு ரயிலுடன் நின்றுவிடவில்லை. அது எப்படி நின்றுவிட முடியும்? நாங்கள் அந்த ஒரு நாள் மட்டும் பிரயாணம் செய்துவிட்டு நின்றிருந்தால் எங்கள் நட்பும் அத்துடன் நின்று போயிருக்கும். நாங்கள் தினந்தோறும், வருஷம் முன்னூற்று அறுபத்தைந்து நாளும் காலையில் ரயிலில் தானே ஆபீசுக்குப் போகிறோம்?

பெரம்பூரிலிருந்து ரயில் ஸெண்ட்ரல் ஸ்டேஷன் வருவதற்குள் எத்தனையோ பிரச்னைகள் எங்களிடையே அலசப்படும். அவசரமாக ஆபீசுக்குப் போக வேண்டிய அவசரப் பிரகிருதிகள் எம். எஸ். எம். நிர்வாகத்தையே தாக்கிப் பேசிக்கொண்டு வருவார்கள். "ஆபீசுக்குப் போய் ஒழுங்காய் வேலை பார்க்க வேண்டும் என்றால் இந்த எம். எஸ். எம். ரயில்களை நம்பினால் அவ்வளவுதான்! அதற்கெல்லாம் தாம்பரம் பக்கம்தான் சரி. ஐந்து நிமிஷத்துக்கு ஒரு எலெக்ட்ரிக் ட்ரெயின் பறக்கிறது! ஆகா! எத்தனை சௌகரியம்!" என்று ஒருவர் ஆரம்பிப்பார். அவ்வளவுதான்; ஒரு மாபெரும் கூட்டம் அவருடன் சேர்ந்துகொண்டு எம். எஸ். எம். ரயில்வே நிர்வாகத்தைத் தாக்கித் தீர்மானங்கள் நிறைவேற்றும்.

ஆனால் அந்தக் கூட்டத்தில் ஒருவராவது 'தாம்பரம் பக்கம்' குடித்தனம் போக முயற்சி எடுத்ததாகக் கூடத் தெரியவில்லை!

நானும் பாலுவும் இதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை. எங்களுக்கு ரயில் எப்படியாவது ஸெண்ட்ரல் போய்ச் சேர்ந்தால் போதும்!

"மிஸ்டர், பாலு! என் இருபது வருஷ அநுபவத்தில் நான் காலைக் கீழே வைத்து நடந்ததே யில்லை!" என்று நான் வழக்கம் போல் அன்றையப் பேச்சுக் கச்சேரியை ஆரம்பித்து வைத்தேன்.

"இப்பொழுதுகூட நடந்துதானே என்னோடு வந்தீர்கள்? நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லையே!" என்றார் பாலு.

"இல்லை, ஸார்! நான் எப்போதும் செருப்புக் காலோடுதான் நடப்பது வழக்கம். அதைச் சொன்னேன்!" என்றேன் நான்.

பாலு சிரித்துக்கொண்டே, "எனக்கு அது தோன்றவில்லை. காலைக் கீழே வைத்ததில்லை என்றதும் உங்கள் பாதரக்ஷையைப் பற்றி எனக்கு நினைவு வரவில்லை!" என்றார்.

உடனே அவர் பக்கத்திலிருந்த ஒருவர்—பாலுவுக்கு அறிமுகமானவர் என்று நினைக்கிறேன்—"என்ன ஹாஸ்யத்தைக் கண்டுவிட்டீர்கள், மிஸ்டர் பாலு? அர்த்தமில்லாமல் சிரிக்கிறீர்களே!" என்று ரொம்ப அலக்ஷ்யமாகக் கேட்டார்.

பாலு மீண்டும் சிரித்தார்.

"விஷயம் பிரமாத ஹாஸ்யமாக இல்லாவிட்டாலும், சந்தர்ப்ப விசேஷத்தினாலும், சொல்லுகிற மாதிரியினாலும் சில விஷயங்கள் சிரிப்பை உண்டுபண்ணி விடுகின்றன. சிரிப்பு வருவதற்கு ஹாஸ்யம் வேண்டும் என்கிற அவசியம் இல்லை. சிவபெருமான் சிரித்துப் புரம் எரித்தாரே, அந்தச் சிரிப்பு ஹாஸ்ய சம்பவம் எதுவும் இல்லாமல் உண்டானதுதானே!" என்றேன் நான்.

விலாசம்



நோயாளி:—ரொம்ப வந்தனம், டாக்டர்! எனக்கு உயிர் கொடுத்தது நீங்கள்தான்......

டாக்டர்:—அதெல்லாம் ஒன்றுமில்லை. நம்மால் ஆவது என்ன இருக்கிறது? எல்லாம் ஈசுவரனுடைய செயல்!

நோயாளி:—அப்படியானால் தங்களுடைய பில் தொகையையும் ஈசுவரனுக்கே அனுப்பிவிடுகிறேன்!

அந்தப் புதிய ஆசாமி "அது சரி, ஆனால் ஹாஸ்யத்தைக் கண்டால் சிரிக்கவேண்டுமென்று ஒன்றுமில்லையல்லவா!" என்றார்.

"ஒன்றுமில்லைதான்; ஆனால் ஹாஸ்ய உணர்ச்சியுள்ளவன் அதை எங்காவது காண நேர்ந்தால் தானாகவே சிரிப்பான். இல்லை, சிரிப்பு தானாகவே வந்துவிடும்!" என்றேன் நான்.

"சரி, இந்தக் குதர்க்கமெல்லாம் இருக்கட்டும். என் கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்லும், பார்க்கலாம். ஹாஸ்யம் என்றால் என்ன?" என்று அவர் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டார்.

நான் சில விநாடிகள் செயலிழந்து சிந்தனையில் ஈடுபட்டு நின்றேன். பிறகு சமாளித்துக் கொண்டு "உங்கள் கேள்வி ஏற்கெனவே ஒரு முறை பல நிபுணர்களால் அலசப்பட்டிருக்கிறது. வெகு காலத்துக்கு முன்பு பிரான்சு தேசத்துப் பத்திரிகை ஒன்று ஒரு விளம்பரம் செய்திருந்தது. 'ஹாஸ்யம் என்றால் என்ன?' என்பதைக் கண்டு பிடிப்பதே மேற்படி விளம்பரத்தின் கருத்து. பிரபல எழுத்தாளர்கள் பதில் எழுதி அந்தப் பத்திரிகை ஆபீசுக்கு அனுப்பி வைத்தனர். 'ஹாஸ்யத்தை நாம் வர்ணிக்க முடியாது. நம்மை அது சிரிக்க வைக்கும். அவ்வளவுதான்!' என்று பெர்னார்ட் ஷா எழுதியிருந்தார். 'ஹாஸ்யத்தை நிர்ணயித்து இன்னதுதான் என்று சொல்லுவது சாத்தியமில்லை. அதன் குண விசேஷத்தினால்தான் அது நம்மை ஆட்கொள்கிறது!' என்று சிறந்த ஹாஸ்ய எழுத்தாளரான ஜெரோம் கே ஜெரோம் எழுதியிருந்தார். 'பஞ்ச்' என்னும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் ஹாஸ்யத்தைப் பற்றி இரண்டரைப் பக்கங்கள் எழுதித் தள்ளியும் நிச்சயமாக அது இன்னதுதான் என்று தெளிவாகச் சொல்லவில்லை!" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தப் புதிய ஆசாமி இடைமறித்து, "பெர்னார்ட் ஷாவும் இன்னொருத்தரும் என்ன சொன்னால் நமக்கு என்ன? நீர் பதில் சொல்லும். நான் பெர்னார்ட் ஷாவைக் கேட்கவில்லை; உம்மைத்தான் கேட்கிறேன். ஹாஸ்யம் என்றால் என்ன?" என்று கேட்டார்.



"அதைத்தானே ஐயா, சொல்ல வருகிறேன்? அதற்குள் நீர் குறுக்கிட்டுவிட்டீர்! யார் என்ன சொன்ன போதிலும் சொல்லாமலிருந்தபோதிலும், ஹாஸ்யமானது நம் வாழ்க்கையில், பிராண வாயு உயிர் வாழ்வதற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது. ஹாஸ்யம் பரவாத இடமில்லை. கவலைக்கும் துக்கத்துக்கும் மத்தியில் கூட அது இடம் பெற்றிருக்கிறது. ஹாஸ்யம் ஒரு நுண்ணிய உணர்ச்சி. சங்கீத ஞானமுள்ளவர்கள், எங்கேயாவது தொலை தூரத்தில் நாதஸ்வரக்காரன் தோடி ராகம் வாசிப்பதைக் கேட்டால், அப்படியே தங்களை மறந்து அந்தச் சங்கீதத்திலேயே லயித்து விடுவார்கள். சங்கீத ஞானமில்லாதவர்கள் காதில் நாதஸ்வரமே விழாது. அவர்களுக்குச் சங்கீதத்தைப் பற்றிக் கூறுவது மிகவும் சிரமம். அது போலத்தான் ஹாஸ்யமும். ஹாஸ்ய உணர்ச்சி உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட ஹாஸ்யமாயிருந்தாலும், எவ்வளவு குறிப்பாகச் சொன்னாலும் அது விளங்கிவிடும்; 'கலீர்' என்று சிரிப்பும் வந்துவிடும். சில ஹாஸ்யங்கள் சொல்லுகிறேன், கவனியுங்கள்:

"ஒரு வீட்டில், சைனா சாமான்கள் விற்பவன் ஒருவன் கூடையுடன் நுழைந்தான். அந்த ஆசாமி, எப்படியாவது தன்னிடம் ஏதாவது வாங்கித்தான் தீர வேண்டும் என்று பிடிவாதமாக ஏதேதோ வீட்டுக்கார அம்மாளிடம் பேசினான்.

"அந்த அம்மாளுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. 'இப்போது இந்த வீட்டை விட்டுப் போகிறாயா, இல்லையா? இல்லாவிட்டால் போலீஸ்காரனைக் கூப்பிட்டுக் கழுத்தைப்பிடித்துத் தள்ளச் சொல்லுவேன்!' என்றாள்.

"அதைக் கேட்ட அந்தப் போக்கிரி வியாபாரி கொஞ்சங்கூடப் பயப்படாமல், 'இதோ இத்தாருங்க அம்மா! அதற்கு வேண்டிய ஊதல்! என்ன

கொடுக்கலாம்னு உங்களுக்குத் தோணுதோ அதைக் கொடுத்து விட்டு எடுத்துக்குங்க!' என்று சொல்லி ஒரு வடையை எடுத்தான். உடனே அந்த அம்மாள் 'என்னடா, விடாக் கண்டனா யிருக்கிறாயே' என்று கூறிச் சிரித்து விட்டாள். வீட்டிலுள்ளவர்களும் சிரித்து விட்டார்கள்" என்றேன் நான்.

அந்தப் புதிய ஆசாமியின் முகத்தில் சிரிப்பின் அறிகுறியே இல்லை.

"இதில் என்ன ஹாஸ்யம் இருக்கிறது? சாமான் விற்பவன் சண்டித்தனம் செய்தால் அது ஹாஸ்யமாகி விடுமா? தன் பண்டங்களைக் காசாக்க வேண்டும் என்பதற்காக அவன் தந்திரம் செய்தானாக்கும்! உம், சரி. அடுத்தது?" என்றார்.

நானும் ஆரம்பித்தேன்.

"ஒரு போலீஸ் ஸ்டேஷனிலே இன்ஸ்பெக்டர் சுறுசுறுப்பாகத் தம் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கான்ஸ்டேபிள் பரபரப்புடன் ஓடி வந்து இன்ஸ்பெக்டருக்குச் சலாம் செய்து விட்டு, 'ஸார்! வீட்டிலே இரும்புப் பெட்டிச் சாவி காணாமல் போய் விட்டது என்று அம்மா உங்களிடம் சொல்லச் சொன்னாங்க! என்ன செய்யறதுங்க?' என்று மிகவும் வணக்கமாகக் கேட்டான். உடனே இன்ஸ்பெக்டர் 'செய்யறது என்னத்தை? கைதி நெ. 55-ஐ உடனே அழைத்துக் கொண்டு போ! அவன் எப்படியும் திறந்து கொடுத்து விடுவான்' என்றார்!" என்று சொல்லி விட்டு அந்த ஆசாமியின் முகத்தைப் பார்த்தேன். அதில் எந்த விதமான மாறுதலும் காணவில்லை!

நண்பர் பானு நான் சொன்ன ஹாஸ்யத்துக்காக ஒரு தடவையும், அந்த ஆசாமிக்காக ஒரு தடவையும் சிரித்தார்!

"சரி இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு பிரசங்கி மேடையின் மேல் எழுந்து நின்று 'கனவான்களே!' என்று பேச ஆரம்பித்தார். உடனே தலைவர் அவரைத் திருத்தும் பாவனையில், 'தலைவர் அவர்களே, கனவான்களே என்று முறைப்படி ஆரம்பியுங்கள்!' என்றார். உடனே, பிரசங்கி பளிச்சென்று கம்பீரமாக 'மன்னிக்கவும்; நான் தலைவரையும் தவறுதலாகக் கனவான்களோடு சேர்த்து விட்டேன்!' என்றார். அடுத்த விநாடி சபை முழுவதும் 'கொல்' லென்று சிரித்துவிட்டது. தலைவர் முகத்தில் ஈயாடவில்லை' என்று சொல்லிவிட்டு, அந்த ஆசாமியின் முகத்தைப் பார்த்தேன். அவர் முகத்திலும் ஈயாடவில்லை!

அந்த மனிதர் தாழ்ந்த குரலில், "ஸார்! மன்னிக்க வேண்டும். இந்த ஹாஸ்யத்தையும் என்னால் ரசிக்க முடியவில்லை. எதற்காக அந்தப் பிரசங்கி தலைவரை நீக்கி விட்டு 'கனவான்களே' என்று அழைக்க வேண்டும்? நாமாக வலுக் கட்டாயமாக என்னத்தையாவது சொல்லிவிட்டு அதை ஹாஸ்யம் என்பதா?" என்றார்!

"ஸார்! நான் தங்களை மன்னிக்க வேண்டியதேயில்லை; நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். ஹாஸ்யத்தை உங்களுக்கு நான் விளக்கப் புகுந்ததே பெரிய தவறு. மல்லிகையின் மணத்தை வாய்ச் சொல்லினால் விளக்க முடியுமா? அது மாதிரிதான் ஹாஸ்யமும். அது உணர்ந்து அனுபவிக்க வேண்டிய விஷயம். எது ஹாஸ்யம் என்று விளக்கப் புகுந்தாலும், ஹாஸ்யத் துணுக்கைப் படித்துவிட்டு 'ஏன்?' 'எதற்கு?' என்று குறுக்குக் கேள்விகள் கேட்டாலும் ஹாஸ்யம் தற்கொலை செய்து கொண்டு விடும்!" என்றேன் நான்.



நண்பர் பானு சிரித்தார். நானும் சிரித்தேன். அந்த ஆசாமியின் முகத்தில் சிரிப்பின் அறிகுறியே யில்லை. நல்ல வேளையாக அதற்குள் வண்டி சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து விட்டது. வண்டியிலிருந்து இறங்கியதும் அவரவர்கள் ஆபீஸை நோக்கி விரைந்தோம்.

கண்டிப் பிள்ளையார் கண் திறக்கவில்லை!

ரஜனி

கொழும்பு, ஜூன். 20

சென்ற இரண்டு வார காலமாக இலங்கையில் ரப்பரைப் பற்றிய செய்திகளே முக்கிய ஸ்தானம் வகித்து வருகின்றன. ரப்பர்ப் பயிர்த் தொழிலின் நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதே அந்தச் செய்திகளின் சாரம். இந்த நெருக்கடியைச் சமாளிக்கப் பலர் பல விதமான யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே காலயிரத்துக்கு மேற்பட்ட ரப்பர் தோட்ட இந்தியத் தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டு வேறு வேலைகளுக்கும் போக முடியாத நிலைமையில் தவிக்கின்றனர். இந்நிலையில், பிரபல தோட்ட முதலாளிகள் அடங்கிய தாழ்ந்த பிரதேச விளை பொருள் வர்த்தகச் சங்கம், வேலையிலிருந்து வரும் பாக்கித் தொழிலாளரின் வயிற்றிலும் அடிக்க அரசாங்கத்துக்கு விபரீதமான யோசனைகள் பலவற்றைச் சொல்லியிருக்கிறது. அந்த யோசனைகளின் சாரம் இவைதான் :—

1. ரப்பர் தோட்டத் தொழிலாளருக்குக் குறைந்த பட்சம் தினசரி எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கும் சட்டத்தை அமுல் நடத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டும். 2. தொழிலாளருக்குப் பஞ்சப்படி கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. 3. ஞாயிற்றுக் கிழமைகளில் செய்யும் வேலைக்கு ஒன்றரை நாள் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

முதலாளிகளின் இந்த விபரீதமான யோசனைகளை ஆராய்ந்து பார்ப்பதாகத் தொழில் மந்திரி ஜனாப் ஜாயா கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் வேண்டுகோள்

இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கே. ராஜலிங்கம் கீழ்க்கண்டவாறு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார் :—"கட்டுப்பாடு விலைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டே தொழிலாளருக்குக் கொடுக்க வேண்டிய குறைந்த பட்ச சம்பளத்தை அரசாங்கம் நிர்ணயிக்கிறது. ஆனால் கட்டுப்பாட்டு விலைக்கு எந்தச் சாமானும் கிடைப்பதில்லை. கள்ள மார்க்கெட்டில் சாமான்கள் வாங்கியே தொழிலாளர்கள் காலட்சேபம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் கொடுக்கும் சம்பளம் வாழ்க்கை நிலைக்குப் போதுமானதல்லவென்பது தெளிவாகிறது. அப்படியிருக்க இந்தச் சம்பளத்தையும் மேலும் குறைப்பதற்காகச் சட்டத்தையே அரசாங்கம் நிறுத்திவைப்பதென்பது இரக்கமற்ற காரியமாகும். தோட்டங்களில் கொள்ளை லாபம் கிடைத்தபொழுது அந்த லாபங்களைத் தோட்ட முதலாளிகள் தொழிலாளருடன் பகிர்ந்து கொள்ளவில்லை. அப்படியிருக்க லாபம் குறைந்தபொழுது தொழிலாளியின் சம்பளத்தை வெட்ட எந்த விதமான நியாயமும் கிடையாது. இந்த அநியாய யோசனைக்கு அரசாங்கம் உடந்தையாயிருக்கக் கூடாது.''

சர்க்கார் கட்சித் தோல்வி

நூற்றிரண்டு ஸ்தானங்கள் கொண்ட இலங்கைப் பார்லிமெண்டில் சேனநாயகா கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு முப்பத்தெட்டு ஸ்தானங்கள்தான் இருக்கின்றன. வேறு பல சுயேச்சை அங்கத்தினர்களின் ஆதரவினாலேயே சேனநாயகா மந்திரி சபை பதவியிலிருக்க முடிகிறது. பதவியைக் காப்பாற்றிக் கொள்ள சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மித்ரபேதம் செய்து பிரித்தாளும் தந்திரத்தைச் சேனநாயகா தர்பார் அனுஷ்டிக்கிறது. இதற்கு இந்தியர்கள் இடம் கொடாமல் சிங்களவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்பைப் பெற வேண்டும் என்ற காந்திய மார்க்கத்தைப் பார்லிமெண்டு - மெம்பர் ஸ்ரீ தொண்டமான் ஒவ்வொரு கூட்டத்திலும் வற்புறுத்தி வருகிறார். அந்த உபதேசத்துக்குக் கண்டியில் நடைபெற்ற உபதேர்தலில் கைமேல் பலன் கிடைத்தது.

கண்டிநகர உபதேர்தல் ஒரு பிரமாதமான அரசியல் போராட்டமாகக் கருதப்பட்டது. அங்குள்ள இந்தியர்களின் வோட்டுகளெல்லாம் சர்க்கார் கட்சிக்குத்தானென்று பிரதமர் சேனநாயகா நினைத்துக் கொண்டிருந்தார். இதற்காக அவர் கண்டிப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்ப் பிரசாதமும் வாங்கிக்

கொண்டார். வேறு எந்த உபதேர்தலிலும் அவரோ அல்லது மற்ற மந்திரிகளோ இவ்வளவு தீவிரமாக நேரடியாய் ஈடுபட்டதில்லை. இலங்கை இந்தியர் பிரச்னையை அடிப்படையில் வைத்து இந்திய காங்கிரசும் தேர்தல் பிரசாரங்கள் செய்து ஸ்ரீமதி தாமரைகுமாரி என்ற இடதுசாரி ஸ்திரீ அபேட்சகரை ஆதரித்தது. இந்த ஸ்திரீ அபேட்சகர் 2050 அதிக வோட்டுகளினால் ஜயித்தது இலங்கை இந்திய காங்கிரசுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் ஒரு மகத்தான வெற்றி. சர்க்கார் கட்சி அபேட்சகரும் மாஜி மேயருமான ஸ்ரீ ரத்வத்தை தோல்வியடைந்தார். தோட்டப் பகுதி மக்கள் இலங்கை சர்க்காரின் போக்கைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்பதையே மேற்படி தேர்தலின் முடிவு காட்டுகிறது.

அமுலுக்கு வருகிறது


இலங்கை குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாடு சட்டம் அக்டோபர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரப்போகிறதென்றும், அதன் பிறகு இந்தியாவுக்குப் போகிறவர்களும் இந்தியாவிலிருந்து வருகிறவர்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் அநேக துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து அடுத்த மாதம் வெளியிடுமென்றும் பிரதம மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி ஸ்ரீ கே. வைத்தியநாதன் தெரிவித்திருக்கிறார். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டால் அதன்பிறகு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரயாணிகள் போக்குவரத்து இப்பொழுது நடப்பதைப் போல் சரளமாக நடைபெற முடியாது. பாஸ்போர்ட் முதலிய பல தஸ்தாவேஜுகள் உடையவர்கள் மட்டுமே இலங்கையில் பிரவேசிக்கலாம். விரும்பத் தகாத பேர்களென்று அரசாங்கம் நினைக்கும் ஆசாமிகள் திரும்பவும் இலங்கைக்கு வராமல் தடுக்கச் சட்டம் இடம் கொடுக்கிறது.

ஸ்ரீ அரியநாயகம் தம்பதிகள்

மகாத்மா காந்தி சிஷ்யரான ஸ்ரீ இ. டபிள்யூ. அரியநாயகமும் அவருடைய மனைவி ஸ்ரீமதி ஆஷாதேவியும் இலங்கைக்கு விஜயம் செய்து வார்தா கல்வித் திட்டத்தைப் பற்றிப் பல இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இலங்கையின் கல்விக் கொள்கையை மாற்றி யமைக்க அரசாங்கம் ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் ஸ்ரீ அரியநாயகம் விஜயம் செய்தது நல்ல பலனளிப்பதா யிருக்கு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறையில் கூட்டுப் பிரார்த்தனை

இலங்கையில் ஸ்ரீ. கே. எஸ். சுந்தரம் ஆரம்பித்த கூட்டுப் பிரார்த்தனை இயக்கம் தமிழர்களிடையில் ஒரு குருவளியைப் போல இன்று பரவிவிட்டது. தமிழர்களின் சைவமத மறுமலர்ச்சிக்கு இந்த இயக்கமே மூலகாரணமாகும். அரசாங்க உத்தியோகஸ்தர்களான ஸ்ரீமான்கள் எம். எஸ். திருவிளக்கம், குல. சபாநாதன், பி. இராமச்சந்திரா முதலியோரும் ஸ்ரீ கே. பி. ஹரன், ஸ்ரீ ராஜாராம் முதலான சைவ அபிமானிகளும் வாரந்தோறும் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுடன் கூட்டுப் பிரார்த்தனை செய்து சைவ மதத்தை வளர்த்து வருகிறார்கள்.



மணிப் பயல்

என்னென்

ஒரு நாள் மணியின் மாமா தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது மணி உள்ளே நுழைந்து, அவருக்கு அருகில் வந்து நின்றான்.

"என்னடா சமாசாரம்? ஏன் பேசாமல் வந்து நிற்கிறாய்?" என்று மாமா கேட்டார்.

"ஒன்றுமில்லை...ஒரு விளையாட்டு விளையாடலாம் என்று வந்தேன். நீ ஏதோ படித்துக் கொண்டிருக்கிறாயே! ....நான் போகிறேன்!" என்றான் மணி.

மணிக்கு ஒன்பது வயதிருக்கும். நான்காவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். மணியிடம் அவனுடைய மாமாவுக்கு ரொம்பவும் பிரியம். அவனுடைய கவர்ச்சி மிகுந்த பேச்சைக் கேட்பதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டு.

"என்ன விளையாட்டு விளையாட வேண்டும்? ... சரி, வா! உட்காரு!" என்றார் அவன் மாமா.

"மாமா, இன்று ஒரு புது மாதிரியான விளையாட்டு விளையாடலாம்.... என்ன தெரியுமா? நானும் நீயும் ஒரு மளிகைக் கடையில் வியாபாரம் செய்வது போல் விளையாடலாம். நீ தான் மளிகைக் கடைச் செட்டியாராம். நான்தான் சாமான் வாங்க வந்திருப்பவனும்!...என்ன?" என்றான் மணி.

"சரி, அப்படியே ஆகட்டுமே."

"விளையாட்டை ஆரம்பிக்கலாமா? மாமா! இல்லை, இல்லை, செட்டியாரே! சர்க்கரை இருக்கிறதா? வீசை என்ன விலை?" என்று கேட்டான் மணி.

"வீசை ஒரு ரூபாய் எட்டணா!"

"அடேயப்பா! வீசை ஒரு ரூபாய் மூன்றணா எட்டுப் பை போட்டுக் கொள், போதும்!"

"அதென்னடா, எட்டுப் பை?" என்று மாமா கேட்டார்.

"ஆமாம், அதெல்லாம் உனக்குத் தெரியாது. அந்த விலைக்கு எனக்கு இரண்டரை வீசை சர்க்கரை கொடு!"

"சரி, அப்படியே கொடுத்து விட்டேன்!...அப்புறம்?"

"புளி என்ன விலை?"

"புளியா? வீசை ஆறணா!"

"ஆறணாவா?......ஹூஹூம்....... மூன்றணா நான்கு தம்பிடி போட்டுக் கொள்...!"

"நீ கேட்கும் விலையெல்லாம் வேடிக்கையாயிருக்கிறதே! தம்பிடி வியாபாரம் பண்ணச் சொல்கிறாயே!"

"ஆமாம், அப்படித்தான்! அந்த விலைக்கு எனக்கு மூன்றே கால் வீசை புளி கொடு!"


"ஹூம்...உன் இஷ்டம்! வேறு ஏதாவது வேண்டுமா?"

"மிளகாய் வேண்டும்! வீசை என்ன விலை என்று சொல்லு?"

"வீசை இரண்டேகால் ரூபாய்!"

"அதெல்லாம் முடியாது! வீசை ஒரு ரூபாய், பத்தணா, ஒன்பது தம்பிடிக்கு மேல் ஒரு சல்லிக் காசுகூடக் கொடுக்க மாட்டேன்! இந்த விலைக்கு இரண்டே முக்கால் வீசை மிளகாய் நிறுத்துப் போடு!" என்றான் மணி.

மூன்று விதம்!



வந்தவர்:—எஜமான் இருக்காரா?

வேலையாள்:—நீங்க யாருங்க?

வந்தவர்:—யாராயிருந்தால் உனக்கு என்ன? பதில் சொல்லு!

வேலையாள்:—பதில் மூணு இருக்குங்க—நீங்க இன்ஷூரன்ஸ் ஏஜண்டுன்னு எஜமான் தூங்கறாரு; மளிகைக் கடைச் செட்டியாருன்னு எஜமான் வெளியே போயிட்டாரு; சிட்டாடும் சிநுவய்யர் என்றால் எஜமான் உங்களுக்காக உள்ளே ரெடியாக் காத்துக்கிட்டு இருக்காருங்க!

மாமா சிரித்துக்கொண்டே, "சரி, கொடுத்தாகி விட்டது என்று வைத்துக் கொள்ளேன்!" என்றார்.

"நான் வாங்கிய சாமான்களுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்?"

"எவ்வளவா யிருந்தால் என்ன? நீதான் ஒன்றும் கொடுக்கப் போவதில்லையே!"

"அப்படிச் சொல்லாதே, மாமா! கணக்குப் பார்த்து, சரியாக எவ்வளவு பணம் ஆகிறது என்று சொல். இதில் ஒரு வேடிக்கை இருக்கிறது! அதை உனக்கு அப்புறம் சொல்கிறேன்!" என்றான் மணி.

மணியின் மாமா தலையைச் சொறிந்து கொண்டே கணக்குப் போட்டுப் பார்த்தார். கடைசியில், "மொத்தம் எட்டு ரூபாய், ஐந்தணா, ஏழு தம்பிடி ஆகிறது!" என்று சொன்னார்.

"அப்பாடா! உனக்குக் கோடி புண்ணியம் உண்டு, மாமா!" என்று சொல்லிக்கொண்டே மணி எழுந்தான்.

"என்னடா கோடிப் புண்ணியம்?" என்று ஒன்றும் புரியாதவராய்க் கேட்டார் மாமா.

"எங்கள் கணக்கு வாத்தியார் நேற்று இந்தக் கணக்கைப் போட்டுக் கொண்டு வரச் சொன்னார். எனக்கு விடை சரியாக வரவில்லை. அதனால் தான் உன்னைப் போடச் சொன்னேன். இரண்டரை வீசை சர்க்கரையும், மூன்றே கால் வீசை புளியும், இரண்டே முக்கால் வீசை மிளகாயும் சேர்ந்து எட்டு ரூபாய், ஐந்தணா, ஏழு தம்பிடிதானே, மாமா, ஆகிறது?...... சரி, நான் வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே பள்ளிக் கூடத்தை நோக்கி ஓட்டம் பிடித்தான் மணி!

காலக்ஷேபம்

தலைக்கும் ஆபத்தா?

நோயாளி:—டாக்டர்! தொண்டையில் வலிக்கிறது, டாக்டர்!

டாக்டர்:—உள் நாக்கு வளர்ந்திருக்கிறது. அதை ஆப்பரேஷன் செய்துவிட வேண்டும்.

நோயாளி (ஒரு வாரத்துக்குப் பின்):—டாக்டர் ஸார்! என் குடலில் வலி ஏற்பட்டிருக்கிறது!

டாக்டர்:—குடல் அநுபந்தம் வளர்ந்திருக்கிறது; அதை ஆப்பரேஷன் செய்து விட வேண்டும்.

நோயாளி (இன்னும் ஒரு வாரத்துக்குப் பின்):—டாக்டர் ஸார்! உங்களிடம் தெரிவிக்க எனக்குப் பயமாக இருக்கிறது; இருந்தாலும் சொல்லுகிறேன் — எனக்கு ரொம்பத் தலை வலிக்கிறது!

★

வாஸ்தவம்!

முதல் திருடன்:—அந்த மணிபர்ஸில் எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று பார்ப்போம்!

இரண்டாவது திருடன்:—இதை யார் வேலையில்லாமல் இப்பொழுது எண்ணிப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள்? சாயங்காலப் பத்திரிகையைப் பார்த்தால் தானே தெரிகிறது!

உண்டு, இல்லை!

வக்கீல்:—பிரஸ்தாபத் தேதியிலோ அல்லது வேறு தினத்திலோ, நீர் பிரதிவாதியிடமோ அல்லது வேறு யாரிடமோ, இதைப் பற்றி நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ, பிரஸ்தாபித்தது உண்டா?—நான் கேட்பதற்கு 'உண்டு, இல்லை' என்று பதில் சொல்ல வேண்டும்....

சாட்சி:—உண்டு, இல்லை! — சரி, நீங்கள் என்ன கேட்டீர்கள்?

★

இது என்ன கஷ்டம்!

கணவன்:—தகப்பனார் பெரிய மனுஷனாக இருந்துவிட்டால் பின்னை அதே மாதிரி பெயர் எடுப்பதற்குச் சிரமப்படும்....

மனைவி:—நம்ம குழந்தை ராஜாவுக்குத் தான் அந்த மாதிரி கஷ்டம் ஒன்றும் நீங்கள் வைக்கவில்லையே!


★

பழிக்குப் பாத்திரம்

"நான் இத்தனை பெரிய நாவல் எழுதியதற்கு உற்சாகமூட்டியவன் நீதான்; உனக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன்."

"ஓகோ! எல்லாப் பழியையும் என் தலை மேலேயே சுமத்தப் பார்க்கிறாயோ!"

யார் குற்றவாளி?



எஸ். வி. எஸ்.

"ஏய் சண்முகம்! ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்து இங்கே வையடா!" என்றான் என் மூத்த மகன்.

"எனக்குத் தலையை வலிக்குதுங்க. கருப்பையாவைக் கொண்டு வந்து வைக்கச் சொல்லுங்க" என்று பதில் சொன்னான் என் தவசுப்பிள்ளை சண்முகம்.

"என்ன, நான் ஒண்ணு சொல்வது; அதற்கு எதிராக நீ பதில் சொல்வதா? எல்லாம் அந்தக் கிழவன் கொடுக்கிற இடந்தான்! அந்தக் கிழவன் தொலைந்தால் எல்லாம் பெட்டிப் பாம்பாக அடங்கிப்போய் விடுவாய். அவன் இருக்கிற வரைக்கும் இப்படித்தான் நீ ஆட்டம் போடுவே" என்று கத்தினான் மூத்த பிள்ளை.

"அந்தக் கிழவன் தொலைந்தால் நான் மட்டும் எங்கே இருக்க போறேனுங்க? நானும் கூடவே தொலைந்துபோய்விடுவேன்" என்றான் கிழத் தவசுப்பிள்ளை சண்முகம்.

'அந்தக் கிழவன்' என்று அவர்கள் குறித்தது யாரையோ என்று எண்ணித் திகைக்க வேண்டாம் — என்னைத்தான் அவ்விதம் குறிப்பிட்டார்கள். என் வயிற்றில் பிறந்த பிள்ளையும், என்னிடம் வேலைக்கு வந்த தவசுப்பிள்ளையும்தான் இவ்வளவு மரியாதையுடன் குறிப்பிட்டார்கள். இவ்வளவு 'மரியாதை' எனக்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் நான் ஒரு காலத்தில் செய்த தவறுதான். அந்தமாதிரி தவறு உலகத்தில் தினந்தோறும் எத்தனையோ பேர்தான் செய்கிறார்கள். ஆனால் அந்தத் தவறு என் மனசை மட்டும் அப்படிப் பாதித்துவிட்டது!

முப்பது வருஷங்களுக்கு முன் எங்கள் சுற்று வட்டாரத்தில் அடியேனுக்கு 'மூலை வீட்டு ஷோக் மைனர்' என்று பெயர். என் தந்தைக்கு நான் ஒரே பிள்ளையாதலால் எனக்கு வேண்டிய சுதந்திரம் கொடுத்திருந்தார். வேளைக்கு ஒரு டிரஸ் நேரத்துக்கு ஒரு பணிக்குடன் விளங்கி வந்தேன். ஆனால் 'மைனர் விளையாடல்கள்' என்ற பெயரில் சிலர் குறிக்கும் திருவிளையாடல்களில் எல்லாம் என் சித்தம் செல்லவில்லை. ஒரே ஒரு ஆசைதான் எனக்குண்டு. வருஷம் பூராவும் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பதுதான். ஆம், ஊட்டியில் ஒரு மாதம் தங்கினால் அடுத்த மாதம் கோடைக்கானலில் இருப்பேன். அதற்கடுத்த மாதம் குற்றாலம்; பின்னர் சொந்த ஊர்; அதன் பிறகு பங்களூர். இவ்விதம் வருஷம் பூராவும் சுற்றிக் கொண்டேயிருப்பேன். நான் மட்டுமா? இரண்டு வேலையாட்கள், ஒரு தவசுப்பிள்ளை இத்தனை பேருடன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பேன். அப்பொழுதெல்லாம் எனக்குத் தவசுப் பிள்ளையாக இருந்தது சண்முகம்தான்.

சண்முகம் வருவதற்கு முன்னால் என்னிடம் எத்தனையோ சமையற்காரர்கள் இருந்து விட்டுப் போயிருக்கிறார்கள். சண்முகம் வந்த பிறகுதான் அவர்களுக்கும் இவனுக்கும் என்ன வித்தியாசம் என்று கண்டுபிடித்தேன். ஆமாம், அவர்கள் அத்தனைபேரும் என நாக்குக்கு ருசிக்காமல் எப்படி சமைப்பது என்பதிலேயே தங்கள் காலத்தையும், கருத்தையும், என் சாமான்களையும் செலவழித்து வந்தார்கள். ஆனால் சண்முகம்

என் நாவுக்கு இனிமையாகச் சமைப்பதே வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருந்தான்.

அது மட்டுமல்ல. அவன் சமையலை எங்கள் வீட்டுக்கு வருபவர்கள் ஒவ்வொருவருமே ரொம்பவும் பாராட்டிப் பேசுவார்கள். அப்படியிருந்தும் அவன் எனக்குக் கீழ்ப்படிந்து நன்றியுடன் வேலை செய்து வந்தான்.

ஒரு நாள் என்னுடைய திக் விஜயத் திட்டத்திற்கு ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தபோது சண்முகம் தலையைச் சொறிந்து கொண்டு என் பக்கத்தில் வந்து அடக்க ஒடுக்கமாக நின்றான்.

"என்னடா செய்தி?" என்றேன்.

"நாளை, ஐயா — நீங்க — குற்றாலத்துக்குப் புறப்படறீங்க, இல்லையா?" என்றான்.

"ஆமாம்; அதுக்கென்ன?"

"இந்தத் தடவை மட்டும் உங்கள் கூட நான் வர்றதுக்கு இல்லேங்க" என்று நிதானமாகச் சொன்னான் சண்முகம்.

"ஏன்?"

"சௌகரிய மில்லேங்க!"

"என்ன சௌகரியமில்லே......"

"வீட்டிலே கொஞ்சம்........." என்று மெதுவாகப் பேச்சை இழுத்தான் சண்முகம்.

"என்ன?...... தெளிவாகத் தான் சொல்லேன்......" என்றேன்.

"இல்லேங்க......வீட்டிலே குளிச்சு ஐந்து மாசம் ஆகுது ...... இந்தச் சமயத்திலே தனியா விட்டுவிட்டு வந்தால்..."

"அதனால் என்ன? பரவாயில்லை. இரண்டு மாசத்திலே திரும்பிவிடலாம்" என்றேன்.

"அவள் வீட்டிலே தனியாக இருக்க பயப்படுகிறாள். என்னைப் போகவேண்டாம் என்கிறாள்........." என்று கெஞ்சினான் சண்முகம்.

"அவள் போக வேண்டாம் என்கிறாளா? உனக்கு அவள் சம்பளம் கொடுக்கிறாளா? இல்லை; நான் தருகிறேனா? அப்படியானால் சரி; நீ என கூட வர வேண்டாம். இன்றோடு கணக்குத் தீர்த்துக் கொள்!" என்று கோபமாகக் கூறினேன்.

சண்முகத்தின் கண்கள் கலங்கி விட்டன. "ஐயா, நீங்கள் சொல்லுகிறபடி கேட்கத் தயார். உங்களுடன் நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.


மனதில் கவலை பாரத்துடன் கிளம்பினான். எனக்கும் அவன் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்ததனால் அவனை அப்போதே வீட்டுக்கு அனுப்பிவிடலாமா என்று எண்ணினேன். ஆனால் அவ்விதம் செய்தால் அவன் கோரிக்கைக்கு உடன் பட்டதாகத் தோன்றிவிடும். ஒரு வேலைக்காரனின் கோரிக்கைக் கெல்லாம் இணங்கிக் கொண்டிருந்தால் நாளை அவனே நம் தலைமீது ஏறி நர்த்தனம் செய்யத் தொடங்கிவிடுவான். ஆகவே, அவனை ஒரு மாதம் குற்றாலத்தில் வைத்திருந்து விட்டு வெளியிருந்து வேறு ஒரு ஆளை வரவழைத்துக்கொண்ட பிறகு, அவனை வீட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

அந்தப்படியே ஒரு மாதகாலம் குற்றாலத்திலிருந்தான். அப்போது சண்முகம் வீட்டுக் கவலையைச் சற்று மறந்தவனாகத் தோன்றினான். ஆகவே, அவனுக்கு விடுதலை கொடுத்து அனுப்பச் சற்றுத் தயங்கினேன். நல்ல ருசியுள்ள சாப்பாட்டை நாம் கெடுத்துக் கொள்வானேன்? அவனாகத் தான் ஊருக்குப் போக வேண்டும் என்று கேட்கட்டுமே என்று சும்மாவிருந்து விட்டேன்.

பதினைந்து நாட்கள் சென்றன. அவன் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. ஆனால் ஒருநாள் தந்தி ஒன்று வந்தது. தந்தியைப் பார்த்ததும் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்து விட்டேன். சமையலுக்குக் காய்கறி வாங்கிவர வெளியே சென்றிருந்த சண்முகம் வீட்டுக்குள் நுழைந்தான். "சண்முகம்! உன்னை ஊருக்கு வரச்சொல்லித் தந்தி வந்திருக்கு" என்றேன்.

"அவளுக்கு உடம்பு ஒன்றுமில்லையே ......" என்று ஒரே திகிலுடன்

தெரியாதவர்!



அப்பா :— ஏண்டா, உன் "புது வாத்தியார் எப்படி?

பையன் :— அவருக்கு ஒன்றும் தெரியவில்லை, அப்பா! இரண்டும் இரண்டும் என்ன என்று என்னைப் பார்த்துக் கேட்கிறார்!

அவன் கேட்டான். அப்போது அவன் தன் மனைவிமீது எவ்வளவு அன்பு கொண்டிருந்தான் என்பது அவனுடைய குரலிலிருந்தும், உடல் பதட்டத்திலிருந்தும் தெரிந்தது.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று ஏதோ சொன்னேன். என் முகமும் விகாரமாகத் தோன்றியிருக்கும். நல்லவேளை அவன் கண்களில் கண்ணீர் தோன்றி என் முகத்தை அவனுக்கு மறைத்தது.

கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அவனிடம் நூறு ரூபாயை எண்ணிக் கொடுத்து, ஊருக்குப் போகச் சொல்லி அனுப்பி வைத்தேன். முகத்தில் சோகம் படர்ந்திருக்க, உள்ளத்தில் கவலை அழுத்த, கண்களில் கண்ணீர் கலங்க, வீட்டைவிட்டு வெளியேறினான். அப்போது என் உள்ளத்தில் பெரும் பாரம் குறைந்தது போன்ற நிம்மதி ஏற்பட்டது.

இன்னும் பதினைந்து நாட்களில் குற்றாலத்தை விட்டு ஊருக்குப் போய்ச் சேரத் திட்டமிட்டிருந்தேன். ஏனோ ஊருக்குப் போகவே மனசு இடங்கொடுக்கவில்லை. பின்னர் இரண்டு மாதம் கழித்துத்தான் ஊருக்குப் போனேன். ஊரில் தவசிப் பிள்ளை சண்முகம் இருக்கிறானா? என்று பார்த்தேன். அவன் வீடு பூட்டிக் கிடப்பதாகத் தகவல் வந்தது. அவன் எங்கு சென்றான் என்பது யாருக்கும் தெரியவில்லை.

இந்தச் செய்தியைக் கேட்டு நான்தான் மிகவும் திருப்தி அடைந்தேன். ஆனால் என் மன நிம்மதி கொஞ்ச நாள்தான் நீடித்திருந்தது. ஏனெனில் இரண்டு மாதம் கழிந்தது ஒருநாள் மத்தியான சாப்பாட்டுக்குப் பிறகு சாய்வு நாற்காலியில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, மேனியெல்லாம் திருநீறு பூசி ஒரு ஆள் என் முன் வந்து நின்றான். எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரு நிமிஷத்துக்கு அப்புறம் தான் "சண்முகமா? எங்கேடா உன்னை இத்தனை நாளாகக் காணோம்" என்றேன்.

"நான் உங்களை விட்டுப் புறப்பட்டு இங்கே வாறதுக்குள்ளேயே அவள் குறைப் பிரசவமாகிப் போய்விட்டாளுங்க. அவள் போனப்புறம் எனக்கு என்ன வேலை? மனசு நிம்மதி கொள்ளவில்லை. இப்படி கோவில் கோவிலாகப் போய்ட்டு வந்துக்கிட்டிருக்கேனுங்க!" என்று அழுது கொண்டே சொன்னான். அவன் கண்களில் கலகல என்று கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

அந்தக் காட்சியை என்னால் பார்க்கக் கூடவில்லை. "சரி; உள்ளே போய் ஆச்சிக்கிட்டே சாப்பாடு வாங்கிச் சாப்பிடு" என்றேன். அவன் உள்ளே போனான்.

அதற்குப் பிறகு அவன் என்னிடமே மறுபடியும் வேலைக்கு இருந்து விட்டான்.

ஒவ்வொரு சமயம் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே அவனுக்குத் தன் மனைவியின் நினைவு வந்து விடும்; அழுவான். அப்போது அவனிடம் யாராகிலும் ஏதாகிலும் வேலை சொல்லிவிட்டால் 'வள்' என்று விழுவான். இப்படி அவன் சிறு சிறு குற்றங்களாகச் செய்யத் தொடங்கினான். பொறுத்து வந்தேன், பிறகு பெரிய குற்றங்கள் செய்யத் தொடங்கினான். அவமரியாதையாக நடந்து கொண்டான். அப்போது அவனைக் கடிந்துகொள்ள முயன்றேன். ஆனால் அவனைக் கண்டிக்கும் சக்தியையே இழந்துவிட்டேன் என்பதை உணர்ந்தேன்! இதற்குக் காரணம் யோசித்த போது, தெரிந்தது.

நான் குற்றாலத்திலிருந்த போது தந்தி வந்ததல்லவா? அந்தத் தந்தியில் "சண்முகத்தின் மனைவி காலமாகிவிட்டாள்" என்றே வந்திருந்தது. அந்தச் செய்தியைச் சண்முகத்துக்குத் தெரிவிக்காமல் ஏதோ பொய் சொல்லி அனுப்பி வைத்தேன். இந்தப் பயங்கரக் குற்றந்தான் என்னைப் பேச விடாமற் செய்தது.

• • •

"ஆ! இது குற்றமா? அந்தச் சோகச் செய்தி உடனே தெரிவித்திருந்தால் அவன் இதயம் உடைந்து அந்த நிமிஷமே உயிரை விட்டிருப்பானே! அத்தகைய பேராபத்து ஒன்றும் நேர்ந்து விடாமல் காப்பாற்றினீர்களே!" என்று என் அந்தராத்மா கூறுவது என் காதில் ஒலிக்கிறது.

"உயிர் போன பின் தந்தி கொடுத்தும், உயிர் இருப்பது போலப் பொய் சொன்னீர்களே! நான் எவ்வளவு மன்றாடிக் கேட்டும் என்னை விட்டுவைக்காமல் கடைசியில் என் மனைவியின் உயிரையே வாங்கித் தீர்த்தீர்களே, புண்ணியவானே!" என்று அவன் கேட்டிருந்தால் நான் முகத்தை எங்கே வைத்துக் கொள்வது? அப்படிக் கேட்க எத்தனையோ சந்தர்ப்பமிருந்தும் அவன் என்னைக் கேட்கவில்லை. அப்படிப்பட்ட உத்தமனுக்கல்லவா தீங்கிழைத்து விட்டேன்!

அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் அவன் குற்றங்களை எல்லாம் பொறுத்து வந்திருக்கிறது என் மனசு. எனக்குத் தெரியாமலே இந்த உத்தமமான காரியத்தை என் மனசு இன்றும் செய்து வருகிறது.

சுதந்திர மாளிகை



ஜெயமணி

9. சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள்

பிரஸிடென்டின் அதிகாரங்கள்:—பார்லிமெண்டு கூட்டம் நடைபெறாத சமயங்களில், தாமதமின்றி உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தால், குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கலாம். ஆனால் பார்லிமெண்டு கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்க அவருக்கு அதிகாரம் இல்லை.

பார்லிமெண்டில் நிறைவேறிய சட்டங்களுக்கு எவ்வளவு அதிகாரம் உண்டோ அவ்வளவு அதிகாரம் தலைவர் பிறப்பிக்கும் அவசரச் சட்டங்களுக்கும் உண்டு. எனினும் மேற்படி அவசரச் சட்டங்கள் பார்லிமெண்டு கூடியதும் அதன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பார்லிமெண்டுக் கூட்டம் ஆரம்பமானதிலிருந்து ஆறு வாரங்கள் சென்றதும் அந்த அவசரச் சட்டங்கள் காலாவதியாகி விடும்."

தலைவர் தம்முடைய இஷ்டப்படி எந்த சமயத்திலும் அவசரச் சட்டங்களை வாபஸ் செய்து கொள்ளலாம். மேற்படி அவசரச் சட்டங்களை நிராகரிக்கப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

நீர்ப்பாசன விஷயமாக மாகாணங்களுக்குள் தகராறு ஏற்படுமாயின், குறிப்பிட்ட மாகாண சர்க்கார் குடியரசுத் தலைவரிடம் புகார் செய்து கொள்ளலாம். மேற்படி புகாரை யொட்டி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று தலைவர் கருதினால், அவர் தகுந்த நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிஷனை நியமிப்பார். அந்தக் கமிஷன் புகாரை விசாரித்த பின் தன்னுடைய சிபார்சுகள் அடங்கிய அறிக்கையைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன் மீது தலைவர் தம்முடைய உத்தரவைப் பிறப்பிப்பார்.

மாகாண சர்க்கார்களுக்குள் ஏற்படும் மற்றத் தகராறுகளை விசாரிக்க ஒரு சபையைத் தலைவர் நியமிக்கலாம். அந்தச் சபையின் அமைப்பு, நடவடிக்கை, கடமை முதலியவற்றை நிர்ணயிக்கும் அதிகாரம் தலைவருக்கு மாத்திரமே உண்டு.

சுப்ரீம் கோர்ட்: இந்தியாவில் ஒரு சுப்ரீம் கோர்ட் அமைக்கப்படும். அதில் பிரதம நீதிபதியும் குறைந்த பட்சம் ஏழு இதர நீதிபதிகளும் இருப்பார்கள். ஏழு நீதிபதிகளுக்கு மேலும் நியமிக்க பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார். அவரே பிரதம நீதிபதியைக் கலந்து கொண்டு மற்ற நீதிபதிகளை நியமிப்பார். மேற்படி நீதிபதிகள் அறுபத்தைந்து வயது வரையில்தான் அந்தப் பதவியில் இருப்பார்கள்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவி ஏற்குமுன் தலைவர் முன்னிலையிலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவரின் முன்னிலையிலோ விசுவாஸப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ராஜிநாமா செய்வதாயின், ராஜிநாமாக் கடிதத்தைத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒழுங்கீனமான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக நீதிபதியைப் பதவியிலிருந்து விலக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால், பார்லிமெண்டிலும் ராஜாங்க சபையிலும் ஆஜராகியுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு மடங்கு பேர் அவரைப் பதவியிலிருந்து விலக்கவேண்டும் என்று கோரி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர்மானத்தின் மீது தலைவர் அத்தகைய நீதிபதியைப் பதவியிலிருந்து விலக்குவார்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவியை வகித்தவர் பிறகு இந்தியா எல்லைக்கு உட்பட்ட எந்த இடத்திலும் வக்கீல் வேலையில் ஈடுபடக் கூடாது. நீதிபதிப் பதவியில் நியமிக்கப் படுவோர் இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டும்.

எந்த சிவில் வழக்காயினும் அதை யொட்டி மாகாண ஹைகோர்ட்டுகளின் தீர்ப்பை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளலாம். ஆனால், அத்தகைய வழக்கோ அப்பீலோ இருபதாயிரம் ரூபாய்க்குக் குறைந்த சொத்தைப் பற்றியதாக இருக்கக்கூடாது.

அந்தத் தொகைக்குக் குறைவாக இருக்கும் விஷயமாக சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என்று ஹைகோர்ட் கருதுமாயின், அத்தகைய அப்பீலையும் விசாரித்து முடிவு செய்ய சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

அப்போதைக் கப்போது பார்லிமெண்டு அளிக்கும் மற்ற அதிகாரங்களும் சுப்ரீம் கோர்ட்டுக்கு இருந்து வரும்.

சட்ட சம்பந்தமான முக்கிய விஷயங்களை யொட்டி குடியரசுத் தலைவர் சுப்ரீம் கோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். அவருக்கு சுப்ரீம் கோர்ட் கூறும் அபிப்பிராயம் பகிரங்கமாகக் கோர்ட்டிலேயே அறிவிக்கப்படும்.

பார்லிமெண்டு சட்டத்துக்கு உட்பட்டும் தலைவருடைய அங்கீகாரத்தைப் பெற்றும், இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளின் வழக்கங்களையும் நடவடிக்கைகளையும் ஒழுங்கு படுத்துவதற்கான விதிகளை அப்போதைக் கப்போது நிர்ணயிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகள் பகிரங்கமாகவே அறிவிக்கப்படும்.

கிரிமினல் வழக்கு அப்பீல்களையும் விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கீழ்க் கோர்ட்டால் விடுதலை செய்யப்பட்ட ஒரு நபருக்கு அப்பீலில் ஹைகோர்ட் மரண தண்டனை விதிக்குமாயின், அத்தகைய தண்டனையை ஆட்சேபித்தும் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளலாம்.

ஹைகோர்ட்டுகள்: ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு ஹைகோர்ட் இருக்க வேண்டும். (இந்த அரசியல் திட்டத்தில் சமஸ்தானங்களும் மாகாணங்களாகவே கருதப்பட்டிருக்கின்றன என்பது இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது.)

எல்லா ஹைகோர்ட்டுகளுக்கும் சமமான அதிகாரங்கள் உண்டு.

ஒவ்வொரு ஹைகோர்ட்டிலும் ஒரு பிரதம நீதிபதியும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் இதர நீதிபதிகளும் இருப்பார்கள்.

ஒவ்வொரு ஹைகோர்ட்டிலும் அதிக பட்சம் எத்தனை நீதிபதிகள் இருக்க வேண்டும் என்பதை அப்போதைக் கப்போது தலைவரே நிர்ணயிப்பார்.

சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி, அந்தந்த மாகாண கவர்னர் இவர்களைக் கலந்தாலோசித்தே குடியரசுத் தலைவர் ஹைகோர்ட் பிரதம நீதிபதியை நியமிப்பார்; மேலே குறிப்பிட்ட இருவருடன் அந்தந்த மாகாணத்தின் ஹைகோர்ட் பிரதம நீதிபதியையும் கலந்துகொண்டே மற்ற நீதிபதிகளை நியமிப்பார்.

எந்த ஹைகோர்ட் நீதிபதியும் அறுபது வயதுக்கு மேல் பதவியிலிருக்கக் கூடாது.

ஹைகோர்ட் நீதிபதி ராஜிநாமா செய்வதாயின், ராஜிநாமாக் கடிதத்தை கவர்னரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி நீதிபதியைப் பதவியிலிருந்து விலக்குவதாயின், சுப்ரீம் கோர்ட் நீதிபதியை விலக்க என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அதே நடவடிக்கைகளை இவர் விஷயத்திலும் எடுத்துக்கொள்ள வேண்டும்.


தலைவர் ஒரு ஹைகோர்ட் நீதிபதியை வேறு ஹைகோர்ட்டிலோ சுப்ரீம் கோர்ட்டிலோ நீதிபதியாக நியமிக்கலாம்.

நீதிபதிப் பதவிக்கு வருவோர் கீழ்க்கண்ட யோக்யதாம்சங்கள் உள்ளவராக இருக்க வேண்டும்.

அவர் இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டும். இந்தியாவின் எல்லைக்குள் எங்கேயாவது குறைந்த பட்சம் பத்து வருஷங்களாவது நீதி இலாகாவில் பதவி வகித்தவராக இருக்கவேண்டும்; அல்லது எந்த மாகாணத்திலாவது குறைந்த பட்சம் பத்து வருஷங்களாவது அட்வொகேட்டாக இருந்திருக்க வேண்டும். நீதிபதி பதவி யேற்குமுன் கவர்னருடைய அல்லது அவரால் நியமிக்கப் பட்டவருடைய முன்னிலையில் விசுவாஸப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஹைகோர்ட்டில் நிரந்தர நீதிபதியாகவோ அல்லது தாற்காலிக நீதிபதியாகவோ பதவி வகித்தவர் இந்தியாவின் எல்லைக்கு உட்பட்ட எந்தக் கோர்ட்டிலும் வக்கீலாக ஆஜராகக் கூடாது.

நீதிபதிப் பதவியிலிருந்து விலகியவரை, அவருடைய சம்மதத்தின் மீதும் குடியரசுத் தலைவருடைய சம்மதத்தின் மீதும் தற்காலிகமாக நீதிபதியாக இருக்கும்படி வேண்டிக்கொள்ள ஹைகோர்ட் பிரதம நீதிபதிக்கு அதிகாரம் உண்டு. தற்காலிகமாக அப்பதவியை வகிப்பவருக்கு மற்ற நீதிபதிகளுக்குள்ள அதிகாரங்களும் உரிமைகளும் அளிக்கப்படும்.



மயிலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீ கே. கோபாலசாமி அவர்களின் புதல்வி செளபாக்யவதி குறை குமாரிக்கும் தஞ்சை ஜில்லா மிராஸ்தாரர் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயரின் குமாரன் சிரஞ்சீவி கே. வெங்கடசுப்ரமணியம் பி. ஏ. (ஆனர்ஸ்)க்கும் சமீபத்தில் மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள்!

பரீட்சை முடிவு தெரிந்தது!

எஸ். வி. சௌ.

"நாளைக்கு எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவு பத்திரிகையில் வரப்போகிறதாமே! பிள்ளையாண்டான் பரீட்சையில் எப்படி எழுதி யிருக்கிறானாம்? உனக்குத் தெரியுமா?" என்று சாவகாசமாகத் தன் மனைவியைக் கேட்டார் சுந்தரவரதன்.

"எப்படி எழுதி யிருக்கிறானோ! என்னைக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்? அவனும் நாலு நாட்களாக வீடு தங்காமல் ஒவ்வொரு வாத்தியார் வீட்டுக்கும் போய் விசாரித்துக் கொண்டிருக்கிறான். இவர் பாஸ் என்று சொன்னார்களாம்; இவர் கணக்கில் நாலு மார்க்குக் குறைவு என்று சொன்னார்களாம். பகவத் ஸங்கல்பம் எப்படி இருக்கிறதோ. யார் கண்டார்கள்?" என்றாள் சுந்தரவரதனின் மனைவி.

"பகவானின்மேல் எதற்காகப் பழியைப் போடுகிறாய்? உன் பிள்ளை என்றைக்காவது புஸ்தகத்தை எடுத்துப் படித்திருக்கிறானா? ஸினிமா உண்டா, கிரிக்கெட் மாட்ச் உண்டா என்று போய்க் கொண்டிருக்கிறவனுக்கு எப்படிப் பாஸாகும்? பரீட்சை சமயத்தில் எந்த உபாத்தியாயரைப் பார்த்தால் கேள்வித் தாள்கள் கிடைக்கும், பரீட்சை முடிந்த பிறகு யாரைப் பிடித்தால் மார்க் அதிகமாக வாங்க முடியும் என்று சுற்றிக் கொண்டிருந்தால் படிப்பதற்கு எங்கே நேரமிருக்கும்?" என்று கத்தினார் சுந்தரவரதன்.


"ஆமாம், ஏன் இப்படி அவனைக் கரித்துக் கொட்டுகிறீர்கள்? எப்படியும் நாளைக்கு முடிவு தெரிந்துவிடும். அதற்குள் இவ்வளவு ஆத்திரப்படுவானேன்? ஊரிலிருந்து அண்ணா வேறு கடிதாசி போட்டிருக்கிறான்!" என்று சாந்தமாய்க் கடிதாசியைக் கொடுத்தாள்.

கடிதாசியை ஒரு முறைக்கு இருமுறையாகப் படித்துவிட்டு, "ஏண்டி, 'பிள்ளையை மேலே படிக்க வைப்பதைவிட ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்துக் கொடுத்து விட்டால் நன்றாய்ச் சம்பாதிப்பான் என்று மாப்பிள்ளை வேதாந்தம் பேசுவார்' என்று உன் அண்ணா எழுதி இருக்கிறானே? உன் அண்ணனும் தம்பியும் என்னடி சம்பாதிக்கிறார்கள்? ஒருவன் எம். ஏ. பாஸ் பண்ணி விட்டு எண்பது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலை பார்க்கிறான். மற்றவன் எழுபத்தைந்து ரூபாயில் பள்ளிக்கூட உபாத்தியாயராய் இருக்கிறான். இதற்குத்தானா உன் பிள்ளையையும் மேல் படிப்பு படிக்க வேண்டும் என்கிறான்? உண்மையாகவே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்துக் கொடுத்தால் நிறையச் சம்பாதிப்பானே!" என்று எரிந்து விழுந்தார் சுந்தரவரதன்.

"ஆமாம், என் அண்ணன் தம்பிகள்தான் அதிருஷ்டக் கட்டைகள் என்று தெரிந்திருக்கிறதே! அதிருஷ்டம் இருந்தால் உங்கள் பிள்ளை நன்றாய்ச் சம்பாதிக்கக் கூடாதா, என்ன? ஊரில் பெற்றோர்கள் குழந்தைகளைக் காலேஜில் சேர்க்கிறார்களே, அவ்வளவு பேரும் முட்டாள்களா?" என்று முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்றாள் சுந்தர வரதனின் மனைவி.

• • •

சுந்தரவரதனுக்கு ரயில்வே ஆபீஸில் வேலை. இருநூறு ரூபாய் சம்பளம். மெட்ரிகுலேஷன் பாஸ் செய்து விட்டு இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் வேலைக்குப் போய்ச் சேர்ந்தார். தாம் வேலையிலிருந்து விலகுவதற்குள் பிள்ளையையும் அதே ஆபீஸில்



இன்ஸ்பெக்டர்:—என்ன அக்கிரமம்! பட்டப்பகலில் ஒரு வீட்டில் புகுந்து கொள்ளையடிப்பதாவது?

திருடன்:—இராத்திரி வேறு இடத்தில் வேலை இருந்தது, எஜமான்!

வேலைக்கு வைத்துவிட வேண்டுமென்று ரொம்பக் கஷ்டப்பட்டுப் பிள்ளைக்காக ஒரு அட்டெண்டர் வேலையும் சம்பாதித்து வைத்திருந்தார். பரீட்சை பாஸ் பண்ணிவிட்டால் காலேஜில் சேர்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான் பிள்ளை. எப்படியும் பிள்ளையாண்டான் பாஸ் பண்ண மாட்டான் என்ற தைரியத்தில் 'பரீட்சை தேறி விட்டால் காலேஜில் சேர்க்கிறேன்' என்று ஒப்புக்கொண்டார் சுந்தரவரதன்.


காலையில் காப்பி சாப்பிட்டுவிட்டுப் பத்திரிகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு தெருவில் நின்று கொண்டிருந்தார் தகப்பனார். பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாய்த் தெருக்கோடியில் தன் பிள்ளை ஓடி வருவதைப் பார்த்தார் சுந்தரவரதன். விஷயம் விளங்கிவிட்டது. உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார். பத்திரிகையைத் தாயாரிடம் எடுத்துக் கொண்டு போய், "நான் பரீட்சையில் தேறமாட்டேன் என்று அப்பா சொல்லிக் கொண்டிருந்தாரே, இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று பெருமையடித்துக் கொண்டான் பிள்ளை.

தாயார் பிள்ளையை அழைத்துக் கொண்டு கணவனிடம் வந்தாள். சுந்தரவரதன் ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். "என், பிள்ளை பாஸ் பண்ணிவிட்டானே என்று துக்கப்படுகிறீர்களோ? சந்தோஷமாய் இரண்டு வார்த்தை சொல்லாமல் ஏன் இப்படி 'உர்' என்று முகத்தைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? பக்கத்துத் தெருவில் யாரோ குப்புசாமி அய்யர் என்று இருக்கிறாராமே, அவருக்குச் சதானந்தா காலேஜ் பிரின்ஸ்பால் ரொம்பவும் வேண்டியவராம். குப்புசாமி அய்யர் ஒரு வார்த்தை சொன்னால் கட்டாயம் காலேஜில் இடம் கிடைக்கும் என்று குழந்தை சொல்கிறான். முதலில் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்!" என்றாள்.

பிள்ளை பரீட்சையில் தேறிவிட்டாலும் வேலைக்குப் போவதே நல்லது என்று மனைவிக்கும், பிள்ளைக்கும் எவ்வளவோ எடுத்துச் சொன்னார் சுந்தரவரதன். தாயாரும் பிள்ளையும் மேல் படிப்பு படித்துத்தான் ஆகவேண்டு மென்று பிடிவாதம் பிடித்தார்கள். காசியிலிருந்து சுந்தரவரதனின் மைத்துனன் உடனே மருமானைக் காலேஜில் சேர்த்து விடும்படி தந்தி கொடுத்திருந்தான். இவ்வளவு பேரையும் எதிர்த்துப் பேச முடியாமல் பக்கத்துத் தெரு குப்புசாமியின் வீட்டிற்குப் பிள்ளையை அழைத்துக் கொண்டு போனார் சுந்தரவரதன்.

• • •

குப்புசாமி ஒரு சவடால் பேர்வழி. ஒரு காரியமும் அவரால் ஆகாது; ஆனால் பிரமாதமாகப் பேசுவார். குப்புசாமியின் பிள்ளை சுகவனமும், சுந்தரவரதனின் பிள்ளை ஸ்ரீராமனும் ஒன்றாய்ப் படித்து வந்தார்கள். இரு



வரும் பரீட்சையில் தேற மாட்டோம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீராமன் எப்படியோ தேறிவிட்டான். சுகவனம் பரீட்சையில் தேறவில்லை.

"வாடா, ஸ்ரீராமா! இரண்டு பேரும் ஒன்றாய் ஊர் சுற்றிக் கொண்டிருந்தீர்கள். நீ எப்படியோ பாஸ் பண்ணிவிட்டாயே! நீ ஊர் சுற்றினாலும் படிப்பில் கெட்டிக்காரனடா! இதோ பார், பரீட்சை முடிவு இன்று வரப் போகிறது என்று தெரிந்தும் உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறான் உன் சிநேகிதன்! பேஷ், எந்தக் காலேஜில் சேரப் போகிறாய்?" என்று கேட்டார் குப்புசாமி.

"சதானந்தா காலேஜில் சேரவேண்டும் என்கிறான் பிள்ளையாண்டான். நீங்கள்தான் பெரிய மனது பண்ணி அவனைச் சேர்த்து விட வேண்டும்" என்றார் சுந்தரவரதன்.

"ஸ்ரீராமனைப் பற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள்; நான் சேர்த்து விடுகிறேன். நானும் சதானந்தா காலேஜ் பிரின்ஸ்பால் சீதாராமனும் ஒன்றாய்ப் படித்தவர்கள், ஸார்! அந்தக் காலத்தில் நாங்கள் அவனைப் 'புஸ்தகப் புழு' என்று கூப்பிடுகிறது வழக்கம். வாருங்கள், இப்பொழுதே போய் அவனைப் பார்த்துவிட்டு வரலாம்" என்று சுந்தர வரதனை அழைத்துக் கொண்டு போனார்.

சீதாராமனின் வீட்டு வாசலில் அநேக பெரிய மனிதர்கள், அவர்களை விடப் பெரிய மனிதர்களிடமிருந்து சிபார்சுக் கடிதங்களை வாங்கிக் கொண்டு வந்து நின்று கொண்டிருந்தார்கள். பரீட்சை முடிவு தெரிந்த அன்றைக்கே இவ்வளவு கூட்டம் இருக்கும் என்று குப்புசாமி நினைக்கவில்லை. சுந்தர வரதனை ஒரு மூலையில் இருக்கச் சொல்லி விட்டு, குப்புசாமி பிரின்ஸ்பாலின் வீட்டைச் சுற்றி இரண்டு மூன்று தரம் அலைந்தார். பிறகு சுந்தர வரதனின் கண்ணிலிருந்தே மறைந்துவிட்டார். அரை மணி நேரம் கழித்துத் திரும்பி வந்து, "புஸ்தகப் புழு சீதாராமன் இப்பொழுது பெரிய ஆளாய் விட்டான்! என்ன பேச்சுப் பேசுகிறான் என்கிறீர்கள்! 'என்ன மார்க் வாங்கி யிருக்கிறான் என்று தெரிந்து கொண்டு வா, பிறகு பார்க்கலாம்' என்கிறான். 'நல்ல மார்க்குத் தான் வாங்கி யிருப்பான். எப்படியும் நீ அவனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று சொல்லிவிட்டு வந்தேன். நாளைக்கு எவ்வளவு மார்க் வாங்கி யிருக்கிறான் என்று தெரிந்து கொண்டு வாருங்கள்; மறுபடியும் அவனைப் போய்ப் பார்க்கலாம்" என்றார்.



நண்பர்:—என்னங்க, குழந்தையை இப்படிப் போட்டு அடிக்கிறீங்க?

தகப்பனார்:-அடிச்சு வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படாதுங்க!

தினம் காலையும் மாலையும் குப்புசாமியைப் போய்ப் பார்த்து வந்தார் சுந்தரவரதன். குப்புசாமியும் சலியாமல் சுந்தரவரதனை அழைத்துக் கொண்டு போய்ப் பலரைப் பார்த்து விட்டு வந்தார். சதானந்தா காலேஜை மட்டும் நம்பி யிருக்கக் கூடாது என்று, தயானந்தா காலேஜ், நிதிஸ்தானந்தா காலேஜ், சப்பையானந்தா காலேஜ், பிஸ்மில்லா காலேஜ் ஆகிய காலேஜுகளின் பிரின்ஸ்பால்களையும் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். குப்புசாமி தனக்காக இவ்வளவு பாடுபடுகிறதை உத்தேசித்துத் தம்முடைய ஆபீஸில் ஒரு அட்டெண்டர் வேலை காலி யிருக்கிறது என்று சுந்தரவரதன் சொன்னார். அதற்கு வேண்டிய சிபார்சுகளைப் பிடித்து முயற்சிகளைச் செய்து சுகவனத்துக்கு அந்த வேலையைப் பண்ணி வைத்தார்கள்.

ஒன்றரை மாதம் பிரின்ஸிபால்களின் வீடுகளையும், காலேஜு கமிட்டி பிரஸிடெண்டுகளின் வீடுகளையும் சுற்றிச் சுற்றி அலைந்த பிறகு, சுந்தரவரதனின் குமாரன் ஸ்ரீராமனுக்கு எந்தக் காலேஜிலும் இடம் கிடைக்கவில்லை. காலேஜுக்குக் காலேஜும் போயிற்று; உத்தியோகத்துக்கு உத்தியோகமும் இல்லாமல் போயிற்று. இப்போது ஸ்ரீராமனுக்குத் தினசரி கவர்ன்மெண்டு பஸ்ஸுக்காகக் காத்திருந்து இடம் பிடிப்பதும், சினிமாக் கொட்டகை வாசலில் 'க்யூ'வில் இடம் பிடித்து நின்று டிக்கெட் வாங்குவதும், அப்புறம் ஸினிமாப் பார்த்து விட்டு நேரம் கழித்து வீட்டுக்கு வருவதுமே சரியான வேலையா யிருக்கிறது.

வட்ட மேஜை

★ மோட்டார் வரி

தற்சமயம் மோட்டார் பஸ்களுக்கும் ஏற்கெனவே உள்ளதைக் காட்டிலும் வரியை அதிகப்படுத்தி அதன் மூலம் மைலுக்கு அரை தம்பிடி என்ற பெயரால் நம் தலையில் கை வைக்கப்போகும் செய்தியை யாவரும் அறிந்திருப்பார்கள் என்றே நம்புகிறேன்.

ஒரு மைலுக்குக் கட்டணம் அரை அணா. ஆனால் 4 அணாவுக்குக் குறைந்த கட்டணம் இல்லை. ஈரோட்டிலிருந்து கோவைக்கு நேர்வழியில் 62 மைல்தான், 1-15-0 வசூலிக்கிறார்கள். ஒருவர் கோவைக்கு 5 மைல்களுக்கு முன்னால் நேராப்ஸ் காலேஜில் இறங்கவேண்டியிருந்தால் நியாயமான கட்டணம் 1-12-6 தான். ஆனால், முழுக் கட்டணமும் செலுத்தியாக வேண்டும். கோவை—கருமத்தம் பட்டி 17 மைல்; வசூலிப்பது 0-9-0. ஒருவர் கோவையிலிருந்து 6-வது மைலில் வந்து ஏறினாலும் அதே சார்ஜ்தான். குறைந்த பட்சம் 4 அணா என்று காளிங்கராயன் பாளையத்திலிருந்து சித்தோட்டுக்கு வாங்கிக் கொள்ளுகிறார்கள். உள்ள தூரம் சரியாக மூன்று மைல்தான். சித்தோட்டிலிருந்து பஸ் பவானிக்கு ஓடும் தூரம் மூன்றரை மைல், ஈரோடு ஐந்தரை மைல். இந்த நிலையில் டி. இரண்டு இடங்களிலும் எஸ்.ஐ.ஆர். அவுட் ஏஜென்ஸிகள் பெயரளவில் வைத்திருக்கிறார்கள். ஆனால், யாராவது வெளியூரிலிருந்து இந்த ஊர்களுக்கு அவுட் ஏஜென்ஸி டிக்கட் வாங்கி வந்தால் அவர்கள் படும்பாடு சொல்லி முடியாது. ரயில் வந்து போவதற்கும் பஸ் வந்து போவதற்கும் ஒரு சம்பந்தமுமிராது. ஆனால், டிக்கட்டுக்குக் கட்டணம் மாத்திரம் பஸ் ரயிலடிக்கு வந்து போவதற்கும் சேர்த்து 0—1—0 அதிகமாகவே தான் வசூலிக்கிறார்கள். ரயிலடிக்குப் போகும் பஸ்கள் மிகக் குறைவு. எஸ். ஐ. ஆர். டிக்கட்டுடன் வந்தாலும் கூட "அதில் இடமில்லை, அடுத்த வண்டிக்குப் போகலாம்" மென்று சொல்லிக் கொண்டு இதர பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு தானிருப்பார்கள். பவானியிலிருந்து திருச்செங்கோடு 18 மைல்; வசூலிப்பது 10 அணா. பிரயாணமோ மோட்சப் பிரயாணம்! ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் திருச்செங்கோட்டில் ஓர் திருவிழா நடந்தது. அங்கிருந்து பவானிக்குக் குறைந்த கட்டணம் ஒரு ரூபாய்! சுமார் 30 பேர் நெருக்கி உட்கார வேண்டிய பஸ்ஸில் 72 பேர்களை ஏற்றிக் கொண்டு—ஆனால், மக்களின் பாதுகாப்பிற்காகக் கூடவே ஒன்றிரண்டு போலீஸ்காரரையும்—ஏற்றிக்கொண்டு வந்தனர்! இதையெல்லாம் ஆட்சேபித்தால் அடுத்து நாம் எங்காவது செல்ல வேண்டுமானால் 'நடராஜ' சர்விஸைத்தான் நம்பவேண்டும்! இனி மைலுக்கு அரை தம்பிடி அதிகமாய் வசூலிக்கச் சொன்னால் கேட்கவா வேண்டும்? சும்மா ஆடும் சைத்தானுக்குக் குங்கிலியத்தூபம் போட்ட மாதிரிதான் இருக்கும் பஸ் சர்வீஸ்!

பவானி
22—6—49 கு. சிவராமன்

புதுவையில் கலாட்டா

ஜூன் மாத 26-ம் தேதி 'கல்கி' இதழில் "தூங்கிய நகரம் துள்ளி எழுந்தது" என்னும் தலையங்கத்தைப் பார்த்தேன். ஆம், "அற்ப சுகத்தை நினைந்து ஆனந்த சுதந்திரத்தை இழக்க மாட்டோம்" என்பதைச் சந்திரநாகூர் ஜனங்கள் நிரூபித்து விட்டார்கள்.

மற்றப் பிரஞ்சு பிரதேசங்களான காரைக்கால், புதுச்சேரி, மாஹி, ஏனாம் ஜனங்களும் அவர்களுடைய வழியைப் பின்பற்றித் தங்களுடைய தேச பக்தியை உலகத்துக்கு எடுத்துக் காட்டுவார்கள் என்றும் எழுதியிருந்தது. உண்மையில் சந்திரநாகூரைப் போல் மற்ற பிரஞ்சுப் பிரதேச ஜனங்களும் பின்பற்றி நடப்பார்களானால் அது 'இந்தியாவுக்கு மற்றொரு வெற்றி' என்று அதில் எழுதியிருப்பதை விடப் பிரஞ்சுப் பிரதேசங்களில் இருக்கும் நம் ஜனங்களின், அதாவது காங்கிரஸ் தொண்டர்களின் மகத்தான வெற்றி என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனெனில் இவ்விடங்களில் காங்கிரஸ் தொண்டர்கள் படும் இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. 26-6-49 அன்று புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில் ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடந்தது. அந்தச் சமயம் அங்கு கூடியிருந்த காலிகள், அதாவது பிரஞ்சு அரசாங்கத்துக்கு உடந்தையாக இருக்கும் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், கூட்டம் நடக்காதபடி கலாட்டா செய்தது மன்றி, அந்த மைதானத்தில் கம்பத்தின் உச்சியில் 'நேர்மையைக் கடைப் பிடியுங்கள்' என்று அறைகூவிப் பறந்து கொண்டிருந்த காங்கிரஸ் கொடியைச் சுக்கு நூறாகக் கிழித்துக் கட்டினார்கள். இதைப் பிரஞ்சு போலீசார் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட என்போன்ற வெளியூர்க்காரர்கள் குடியர்களால் நன்கு புடைக்கப்பட்டார்கள். காங்கிரஸ் கொடியைக் கிழித்தவர்கள் தம்மை தாமே கொன்று கொள்ளுகிறோம் என்னும் உண்மையை அறிவார்களா?

வளவனூர்
28—6—49 ரா. முத்தையன்

○●○

எல்லைத் தொல்லை

சாதாரணமாகப் பிரெஞ்சிந்திய நகரங்களுக்குச் செல்ல அநுமதிச் சீட்டுகளை வழங்குவதில் சென்னை அதிகமான துன்பங்களை உண்டாக்கி வருகிறது. பிரெஞ்சிந்தியாவில் இரண்டே நாளிலும், மற்றைய இந்திய நகரங்களில் சில நாட்களிலும் கிடைக்கும் அநுமதிச் சீட்டு, சென்னையில் கிடைக்க இருபது நாட்களுக்கு மேல் ஆகிறது. 'உறவினர் இருக்கின்றனர்' என்ற காரணம் காண்பித்தால் சென்னைப் போலீஸ் கமிஷனர்—அதனையும் ஏற்றுக் கொள்வதில்லை. அந்த உறவினர்கள் மனையில் சாவு அல்லது திருமணம் என்ற செய்தி கொண்ட தந்திகளைக் காண்பித்தால்தான்

அந்த இருபது நாள் சென்றுதான் அநுமதிச் சீட்டுக் கிடைக்கிறது. அதற்குள்ளாக மூன்று நான்குபேர் வந்து விசாரணை என்ற பேரால் மிகுந்த தொல்லை தருகின்றனர்.

இவ்வாறு அநுமதிச் சீட்டுகளைப் பெற்றுச் செல்வோருக்குச் சின்னபாபு சமுத்திரம் என்ற ரயில்வே நிலையத்தில் நடக்கும் மரியாதை மிகச் சிறந்தது! முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் தவிர மற்றைய அனைவரும் இறக்கி விடப்படுகின்றனர். பெண்கள் வேறு, ஆண்கள் வேறு எனக் காவற் கைதிகளைப்போல் மக்களை அடைத்துவைத்துப் பின்னர் ஒரு வாயில் வழியாக ஒவ்வொருவராகச் சோதனை செய்பவர்கள் அநுமதிக்கின்றனர். இவர்களின் வேதனை தரும் சோதனைகளுக் கெல்லாம் உட்பட்டு, அநுமதிச் சீட்டு காண்பித்த பின்பும் அநுமதிச் சீட்டுள்ளவர்களையும், இல்லாதவர்களையும் தனித் தனியாக ஒவ்வோரிடத்தில் அடைத்து வைத்துவிட்டு ரயில் இருக்குமிடத்திற்குச் சென்று முதல், இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளைச் சோதிக்கின்றனர். பின் ரயில் முழுமையும் சோதனை செய்த பின்பே அநுமதிச் சீட்டுள்ளவர்களை மட்டும் அடைப்பிடத்திலிருந்து நீக்கி ரயில் ஏற அநுமதிக்கின்றனர். சோதனை ஒரு மணி நேரத்துக்குமேல் ஆகிறது.

இந்த நிலைகளை மாற்றி அநுமதிச் சீட்டுள்ளவர்களை மட்டுமாவது தக்க முறையில் நம் இந்தியச் சோதனையாளர்கள் நடத்துவார்களானால் நாம் எவ்வளவோ பெருமையுடன் பிரஞ்சிந்திய ஆட்சி விரும்பும் மக்கள் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியும்.

சென்னை
26—6—49 தணிகை

○●○

ஒரு மார்க் குறைவு!

திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியில் என் பையன் எஸ். எஸ். எல். ஸி. வாசித்து இந்த வருஷம் பரீக்ஷை எழுதி யிருந்தான்.

பரீக்ஷையின் முடிவுகள், குறிப்பிட்ட நாளில் பத்திரிகைகளில் வெளிவந்தன. நான் பத்திரிகை வாங்கிப் பார்த்தேன். என் பையனின் நம்பர் இல்லை. பரீக்ஷையில் அவன் தோல்வி அடைந்ததற்கு நான் கவலைப் படவில்லை. நல்ல முறையில் பையன் வீடு வந்து சேர்ந்தால் போதும் என்ற முறையிலே திருப்தியுடன் இருந்தேன்.

நல்ல வேளையாகப் பையன் அப்போது தன் பாட்டனார் வீட்டிலிருந்தான். அவனுடைய சிறிய தாயார் சமாதானம் செய்து இவ்விடம் அழைத்து வந்தார்கள். நானும் அவனுக்குச் சமாதானம் சொல்லி, கல்லூரி சர்டிபிகேட் வாங்காமலே டுட்டோரியல் கல்லூரியில் ரூ. 50 சம்பளம் கட்டி விட்டேன். அக்டோபர் பரீக்ஷைக்காகப் படிக்கிறான்.

பள்ளிக்கூடத்திலிருந்து 13—6—49 அன்று பையன் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வந்ததும் நான்கு மணி நேரம் ஒரு மயக்கத்திலிருந்தான். முதலில் காரணம் விளங்கவில்லை. கவலைப் பட்டோம். தெளிவு ஏற்பட்டபிறகு விவரம் கேட்க அவனுடைய மயக்கத்துக்குக் காரணம் மார்க்தான் என்பதை அறியலானேன். இங்கிலீஷில் ஒரே மார்க்குக் குறைவினால் தேர்ச்சி பெறவில்லை என்பது தெரிந்தது. மொத்தம் மார்க் 282. ஒரே ஒரு மார்க்கில் இவன் தேர்வில் தவறியவன் என்பதைத் தேர்வு அறிவிக்கிறது. ஒரு மார்க் வாங்கி இருந்தால் பாஸ் செய்தவனாகி யிருப்பான். இதை இளம் மாணவர்கள் உள்ளம் நொறுங்கச் செய்யும் பரீக்ஷையின் கொடுமை என்றே நான் கருதுகிறேன்.

திருச்சி
26—6—49 ஆர். ஏ. ராமலிங்கத் தேவர்

[தந்தைமார்கள் எல்லாரும் தங்களைப் போல் பரீட்சை தேறாத பிள்ளைகளிடம் நடந்து கொள்வார்களாக. ஒரு மார்க் குறைவினால் பரீட்சையில் தேறாமற் போகும் ஏற்பாடு பைசாசத்தனமான ஏற்பாடு என்றே நாம் கருதுகிறோம். —ஆசிரியர்]

○●○

அபிவிருத்தி வரி

சென்னையின் மத்தியில் கோபாலபுரம் போன்ற அழகிய இடங்களை ஸ்தாபித்த ஒவ்வொருவரும் கார்ப்பரேஷனுக்கு ஆயிரக் கணக்கில் அபிவிருத்தி வரி (Betterment Tax) செலுத்த வேண்டுமாம். காரணம், இவர்கள் சுமார் 20 வருஷங்களுக்கு முன் ஏறக்குறைய ரூபாய் 400-க்கு வாங்கிய மனையின் மதிப்பு, தற்சமயம் ரூ. 4000-க்கு உயர்ந்துவிட்டதாம். இம்மதிப்பு உயர்வு கார்ப்பரேஷன் செய்த அரிய சேவையினால் தானாம். ஆகையால் மதிப்பு வித்தியாசமான ரூ. 3600 ஐயும் தங்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று சென்னைக் கார்ப்பரேஷன் திட்டம் வகுத்து வசூல் செய்ய வெகு மும்முரமாக வேலை செய்து வருகிறது. பலருக்கு நோட்டீஸும் கொடுத்தாகிவிட்டது.

பொட்டலாயிருந்த இடங்களை அபிவிருத்தி செய்து அழகிய இல்லங்களை அமைத்து, அதினின்றும் கார்ப்பரேஷனுக்கு லக்ஷக்கணக்கில்



"ஏன் ஸார், உங்களுக்கு நம்ம ராமசாமியைத் தெரியுமோ இல்லையோ? அந்த மனுஷன் கையிலே காலணாக் காசுகூட இல்லாமல் இந்த ஊருக்கு வந்தான்......"

"இப்போது?......"

"இப்போது அவனுக்கு முப்பதினாயிரம் ரூபாய் கடன் இருக்கிறது!"

வரி வருமானம் செய்வித்தவர்களிட மிருந்து கோடிக்கணக்கில் பணம் திரட்ட முயல்வது எந்த விதத்தில் நியாயம் என்பது புரியவில்லை.

அபிவிருத்தி வரி செலுத்துமாறு உத்தரவு போட்ட ஆர்பிட்ரேடர், கார்ப்பரேஷன் சிப்பந்தி. கார்ப்பரேஷனிலிருந்து ஊதியம் பெறும் ஒருவர், கார்ப்பரேஷனுக்குப் பாதகமாகத் தீர்ப்பு அளிப்பாரா? இந்தத் தீர்ப்பு தான், ஏற்கெனவே கடன் வாங்கி வீடுகட்டிப் பெருத்த கடனில் மூழ்கிய ஏழை எளியோர் பலரையும் அளவிட முடியாத துன்பத்திற்கு ஆளாக்குகிறது. உதாரணமாக சவரன் விலை 13 ரூபாயிலிருந்து 80 ரூபாய்க்கு ஏறியிருக்கிறதென்றால், ஆபரணமணிந்த ஒவ்வொருவரையும் மதிப்பு விகிதாசாரத்தைச் செலுத்தும்படி கேட்பது நியாயமா? பொதுவாக உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒவ்வொன்றுக்கும் பன்மடங்கு விலை ஏறியிருப்பதுபோல், நிலத்தின் மதிப்பு ஏறி இருக்கிறதே தவிர, கார்ப்பரேஷன் செய்த சேவையினால் அல்ல. தவிர நிலங்களின் மதிப்பு (Town Planning Areas) நகர புது நிர்மாணம் பகுதி என்று கார்ப்பரேஷன் வகுத்த இடங்களில் மட்டுந்தானா உயர்ந்திருக்கிறது? ஜியார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி போன்ற இடங்களுக்கு இவ்வரி கிடையாது. அருகிலிருக்கும் லாயிட்ஸ் ரோட்டுக்கும் கிடையாது. ஆனால் லாயிட்ஸ் ரோடுக்கு இருபுறத்திலும் இருக்கும் கோபாலபுரத்திற்கு உண்டு.

இவ்வரி வாங்குவதற்காக, கோபாலபுரத்தாருக்குக் கார்ப்பரேஷன் பிரத்தியேகமாக ஒன்றும் சேவை செய்துவிடவில்லை. இருந்தும் கார்ப்பரேஷனுக்கு கோபாலபுரத்தார் ஆயிரக்கணக்கில் வரிசெலுத்த வேண்டுமாம்!

சென்னை
20—6—49 மீனாக்ஷி

○●○

★ விவேகானந்தரின் விளக்கம்

"கல்கி" ஜூன் 19-ம் தேதி இதழில் "காளியின் கருணை" என்ற கட்டுரையை ஆவலுடன் படித்தேன்.

விக்கிரகங்களை வழிபடுவதில் உள்ள உண்மைத் தத்துவம் இன்னும் அநேகருக்குத் தெரியாது. ஆதலால் நாஸ்திகர்கள் "கோயிலுக்குப் போகவேண்டாம். விக்கிரகங்களை வழிபட வேண்டாம்" என்று பிரசாரம் செய்து வருகிறார்கள்.

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் "ஆல்வார்" சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தார். அப்பொழுது இருந்த அரசருக்கும், சுவாமி அவர்களுக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது. அரசர் "சுவாமி! எனக்கு விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை இல்லை" என்று சொன்னார். சுவாமி சிரித்து விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தார். சுவரில் அரசரின் போட்டோ ஒன்று மாட்டப்பட்டிருந்ததை எடுத்துக்கொண்டு அரசரின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த திவானைப்பார்த்து "இந்தப் போட்டோவின்மேல் துப்புங்கள்" என்று உத்தரவிட்டார். திவான் துப்பவில்லை. பிறகு அங்குள்ளவர்கள் எல்லோரையும் பார்த்து "இந்தப் படத்தின்மேல் எல்லோரும் துப்புங்கள்" என்று சொன்னார்.

"இது ஒரு காகிதம்தானே! இந்தக் காகிதத்தின்மேல் துப்புவதனால் என்ன தப்பு இருக்கிறது? ஆகவே எல்லோரும் இந்தப் போட்டோவின் மேல் துப்புங்கள்!" என்று அநேகம் தடவை சொன்னார். அதுவரையில் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்த திவான் ஆவேசம் வந்தவர்போல் "சுவாமி! நீங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்கள்? இது எங்களுடைய அரசரின் போட்டோ ஆயிற்றே! நாங்கள் எப்படி அதன்மேல் துப்ப முடியும்?" என்று கேட்டார்.

உடனே விவேகானந்தர் "உங்கள் மகாராஜா உயிருடன் இந்தப் படத்தில் இல்லை. இது ஒரு காகிதம் தானே? இந்தக் காகிதத்திற்கு எலும்பு இல்லை, சதை இல்லை, ரத்தம் இல்லை, பேசுவது இல்லை, அசைவதும் இல்லை. அப்படி இருந்தும் நீங்கள் அந்தப் போட்டோவின் மேல் துப்பமாட்டேன் என்கிறீர்கள். ஏதனால் என்றால் நீங்கள் உங்கள் மகாராஜாவின் சாயலை இந்தப் படத்தில் பார்க்கிறீர்கள். நீங்கள் இந்தப் போட்டோவின்மீது துப்புவதனால் உங்கள் மகாராஜாவையே அவமானம் செய்தவர்களாகக் கருதுகிறீர்கள்" என்று சொன்னார். இதுவரையில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்த அரசரைப் பார்த்து "அரசே! நான் உங்களுடைய ஆட்களை உங்களுடைய போட்டோவின் மேல் துப்பச் சொன்னதும் துப்பவில்லை. ஏன் என்றால் இந்த போட்டோவில் உங்களுடைய பிரதிபிம்பத்தைப் பார்த்து அதற்கு மரியாதை செய்கிறார்கள். அதே போல, ஹிந்துக்கள் விக்கிரகங்களைக் கடவுளின் சாயல்களாகக் கருதி வழிபடுகிறார்கள். நான் பார்த்துள்ள எல்லா இடங்களிலும், ஒரு ஹிந்துவாவது விக்கிரகத்தைப் பார்த்து 'ஓ! கல்லே! நான் உன்னை வழிபடுகிறேன். ஓ, கல்லே! நீ எனக்குக் கருணைபுரிய வேண்டும்' என்று வழிபடவில்லை. கடவுள் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய மனோ விருப்பம் போலக் காணப்படுகிறார்" என்றார்.

பங்களூர்
20—6—49 ஜி. வி. சீனிவாசன்

○●○

காரணம் என்ன?

நான் சென்ற மார்ச்சு மாதம் நடந்த எஸ். எஸ். எல் ஸி. பரீட்சையில் தேறவில்லை என்று தினப் பத்திரிகைகளில் 'ரிஸல்டு' வந்ததும் அறிந்தேன். ஆனால் எனது ஸர்டிபிகேட் புத்தகம் வந்ததும், எல்லாப் பாடங்களிலும் நல்ல மார்க்குகள் பெற்றிருந்தும் யான் வெற்றியுறாததைக் கண்டேன்.

என் மார்க்குகள்:—


ஆங்கிலம்	—	36
தமிழ்	—	57
கணக்கு	—	35
விஞ்ஞானம்	—	43
சரித்திரம் பூகோளம்	—	36
இஷ்ட பாடம்	—	44

இவ்வாறு நான் நல்ல மார்க்குகள் பெற்றிருந்தும் தோல்வி யடைந்ததின் காரணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. பள்ளி ஆசிரியர்களைக் கேட்டாலோ அவர்களுக்கும் சரியான காரணம் கூறத் தெரியவில்லை. தலைமை ஆசிரியரோ எஸ்.எஸ். எல். ஸி. போர்டாருக்கு என் ஸர்டிபிகேட் புத்தகத்தைத் தாம் மீண்டும் அனுப்ப மறுத்து விட்டார். அக்டோபரில் தோல்வி யடைந்த பகுதியை எழுதுவோம் என்றாலோ, இன்ன பகுதிதான் தோல்வி என்பதை அறியமுடியவில்லை. நான் என்ன செய்வது?

வைத்தீஸ்வரன்
கோவில்
27—6—49 எஸ். பாலசுப்பிரமணியன்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'கோட்டா வரி' என்ற கடிதம் எழுதிய பவானி ஸ்ரீ ஆ. வெங்கடராமனுக்கும் 'விவேகானந்தரின் விளக்கம்' என்ற கடிதம் எழுதிய பங்களூர் ஸ்ரீ ஜி. வி. சீனிவாசனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.


அவர்கள் மேஜையை உபயோகிக்கிருர்கள்...
அவர்கள் உபயோகிப்பது
ஜபகுஸும்
டானிக் குணங்களுடன் கூடிய ஹேர் ஆயில்
C. K. ஸென் & கோ., லிட்.,
ஜபகுஸும் ஹவுஸ், கல்கத்தா-12
CJK 5 TM



உங்களுக்கு
எடை குறைந்து தளர்ச்சி, அதைரியம், பலவீனம்
வெறுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டால்

கீழுள்ள எச்சரிக்கைகளை கவனியுங்கள்!



இல்லையேல் ஏதேனும் விப ரீதம் ஏற்படும்!

இன்றே மருந்துகளை உபயோக்க்காமல் உடனடியாகவே உங்கள் ஆரோக்கியத்தையும் சரீரத்தையும் திடப் படுத்துங்கள்.

இயற்கையில் போதிய அளவில் தாதுப் பொருள்களும் விடமின்களும் இல்லை என்பதை எச்சரிக்கத்தான் "தாதுவும் விடமினும்" குறைந்து விட்டது என்று வைத்தியர்களும் கூறுகிறார்கள். சமைத்த உணவுப் பதார்த்தங்கள் உங்களுக்குப் போதிய தாதுக்களை அளிக்கின்றன என்று கூற முடியாது.

இந்த விஷயத்தில் நீங்கள் வெகுவாய் சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால்— உங்கள் தேகத்தின் விழுக சக்தி குறைந்து, துன்பமளிக்கும் வியாதிகள் வெகு சுலபமாக உண்டாகும். பிற்பாடு வாரக் கணக்கில் வைத்தியமும் மருந்தும்தான்.


யோசனை செய்யாமல் விகெல்ப் சாப்பிடுங்கள். மனித வளர்ச்சி விருத்திற்கு இன்றியமையாத அத்யாவசியமான தாதுக்களில்— கால்ஷியம், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, மக்னீஷியம், அயோடின் ஆகாரம் போன்ற 9 தாதுக்கள் அடங்கி யிருக்கின்றன.

விகெல்ப் ஒரு சாதாரண முறையில், தாதுப் பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமான கடல் மூலிகையிலிருந்து தயாரிக்கப் பட்டது தான்.— தயாரிப்பில் விடமின் B 1, D 2 வும் கொஞ்சம், இரும்பும் சேர்க்கப் பட்டிருப் பதைத் தவிர வேறு மருந்து எதுவும் சேர்க்கப் படவில்லை. இன்றே விகெல்ப் உபயோகியுங்கள். எவ்வளவு விறுவிறுப்பாகவும், ஆரோக்யத் துடனும், ஆவலுடனும் வேலை செய்ய முடிகிறது என்பதை உணர்வீர்கள். விகெல்ப் ஒரு டானிக்குடன் ஆகாரமுங்கூட.

VIKELP டானிக் ஆகாரம்
விகெல்ப்

V. 22

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு இன்றியமையாத மருந்து!



குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளை குணப்படுத்தும் ஐம்பியின் லிவர்க்யூர் வைத்திய சாஸ்திரத்திற்கே அவசியமானதும் பெருமை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.


இந்த அற்புத நிவாரணியால், முற்றிப் போய் கைவிடப்பட்ட ஈரல் குலைக் கட்டி வியாதிகளும் ஆச்சரியகரமான முறையில் குணப்படுத்தப் பட்டிருக்கிறது என்று இந்தியாவில் உள்ள பிரக்யாதி பெற்ற பல டாக்டர்களால் பாராட்டப் பட்டுள்ளது.



ஐம்பியின்
லிவர்க்யூர்

ஐம்பி வெங்கடரமணய்யா அண் ஸன்ஸ்
மைலாப்பூர் மதராஸ் 4 (போன் நெ. 8133)
தெப்பகுளம் திருச்சி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர், [illegible] 4. (போன் நெ. 41593)
மற்றும் கல்கத்தா.

J. 233



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



[K]ALKI ஜூலை 10, 1949 4 அண[ா]

REGD. No. M. 4392

